கல்கி

KALKI
4.3.2001
ரூ. 5.00


அன்பளிப்பு:
ஊத்துக்காடு காளிங்க
நர்த்தன கிருஷ்ணன்
வண்ணப்படம்



மௌனம் கலையுமா?

கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkiweekly.com
ஈ மெயில் : kalkiweekly@vsnl.com

'கறுப்பும் ஓர் அழகு; காந்தல் ஒரு ருசி' என்ற வரிசையில் 'தவளையும் தெய்வீகப் படைப்பு' என்று சேர்த்துச் சொல்லத் தயாராயிருக்கிறார் சரவணகுமார்!



'தவளையைப் போய் ஆராய்ச்சி பண்ணப் போறியான்னு ஒரு மாதிரி தான் கேட்டார்கள் வீட்டில்; நான் ஆமாம் என்றேன். சின்ன வயதிலேயே 'வைல்ட் லைஃப்' பற்றி எனக்கு ரொம்ப ஆர்வம். பி.எஸ். சியை லயோலாவுல முடித்ததும், டேராடூன்ல போய் எம்எஸ்சி 'வைல்ட் லைஃப்' பண்ணினேன். அப்புறம் என்னையறியாமலேயே எனக்குத் தவளை மேல் காதல் வந்துவிட்டது. எப்படி? ஏன் என்று எனக்குத் தெரியலை. அப்புறம் இந்தியாவில் இருக்கிற பெரும்பாலான காடுகளில் போய் நிறைய வகையான தவளைகளைப் பார்த்து, வகை வகையாக ரசித்து(!) ஆராய்ச்சியில் இறங்கினேன்'' என்கிறார் சரவணகுமார்.

''இந்தியாவில் மட்டும் இருநூறு வகையான தவளைகள் இருக்கின்றன! மேற்குத் தொடர்ச்சி மலையில் மட்டும் நூற்றி இருபது வகையான தவளைகள் இருக்கின்றன. இவற்றுள் முக்கால்வாசி வகைகளை இந்தியாவின் இதர பகுதிகளில் பார்க்க முடியாது.

• ஐஸ்வர்யா ராய்?


• சரவணகுமார்

ஐஸ்வர்யா ராய் பெயரில் ஒரு தவளை!

"பறக்கும் தவளை என்று ஓர் இனம். தண்ணிக்கு மேல் இருக்கிற ஏதாவது ஒரு இலை, செடி, கொடிக்குக் கீழே கூடு கட்டும்" என்றவர் தவளைக்காதல் பற்றிச் சொன்னார்:

"தவளை பெரிதாக ஆக அதன் குரல் கனமாக மாறிக் கொண்டே வரும். இந்த சப்தத்தை வைத்துதான் பெண் தவளைகள் 'சரி இவன் தேறுவான்' என்று முடிவு செய்து தேடி வரும். இனச் சேர்க்கை முடிந்ததும் பெண் தவளையின் கருமுட்டையும் ஆண் தவளையின் விந்தணுக்களும் உடலுக்கு வெளியேதான் இணைகின்றன. அதிலிருந்து முட்டை, பிறகு குஞ்சு....

"இன்னொரு வகை தவளை– அது மரத் தேரை வகையைச் சேர்ந்தது. அந்த இனம் முட்டையிடாது. குட்டிதான் போடும்!



* இலைத் தவளை

"தெற்காசியா விலேயே, குட்டி போடுகிற வகையைச் சேர்ந்தது இது மட்டும்தான்" என்றவர் "ஐஸ்வர்யா ராய் பெயரில் ஒரு தவளை இருக்கு தெரியுமா?" என்று கேட்டு விட்டு நம்மைப் பார்த்தார்.

நம் முகத்தில் கேள்விக்குறியைப் பார்த்துவிட்டு விளக்கினார்.

"ஆமாம் இந்த இனத்தோட கண்கள் ரொம்ப அழகா இருக்கும். பார்த்தா பார்த்துகிட்டே இருக்கலாம் போல ஒரு அழகு. அதனால் நண்பர்கள் மத்தியில் அதற்குச் செல்லப் பெயர் ஐஸ்வர்யா ராய்!

"தவளைகள்ல டேஞ்சரஸ் தவளைகள் தென் அமெரிக்காவில் இருக்கு. அதைத் தொட்டால் அதன் தோலிலிருந்து வெளி வர்ற நீர்ச்சுரப்பு உணர்ச்சிகளை மரக்க வைக்கும். இதன் பெயர் பாய்சன் டோட். அங்குள்ள பழங்குடிகள் எல்லாம் இந்தத் தவளைகளின் தோலைத் தீயில் வாட்டி, அதிலிருந்து வரும் திரவத்தை அம்பில் தடவி வேட்டையாடுவார்கள். இந்த அம்பு இலேசாகப் பட்டால்கூட அடிபடற பறவை அல்லது விலங்கு அந்த இடத்துலயே விழுந்து விடும். பாம்புகள் சாப்பிடாத தவளை இந்த பாய்சன் டோட்தான்.

"இந்த மாதிரி சற்று ஆபத்தான வன விலங்குகளை அவற்றின் நிறத்தைக் கொண்டு அடையாளம் காணலாம். பளிச் சென்ற நிறத்தில் இருந்தால் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்..." என்று தவளை புராணம் பாடும் இவர் ஒரு ஃபோட்டோகிராபரும் கூட. நூறு வருடங்களுக்கு முன்பு காணப்பட்ட ஒரு வகை இனத் தவளையைச் சமீபத்தில் இவருடைய நண்பர்கள் கண்டுபிடித்திருக்கிறார்களாம். 'மெலோபட்டிராக்கஸ்' என்ற இந்த வகைத் தவளைக்காக வெளிநாட்டு ஆராய்ச்சியாளர்கள்கூட வந்தார்களாம். ஆனால் அவர்களுக்கெல்லாம் அகப்படவில்லை என்கிறார்.

"தவளைகளைத் தேடிப் பருவ மழைக்காலத்தில்தான் போவோம். மழை பெய்து கொண்டே இருக்கும். சின்ன அசைவோ, சத்தமோ கேட்டால்கூட தவளை தண்ணிக்குள்ளே பாய்ந்துவிடும். ரொம்ப நாள், ரொம்ப நேரம் காத்திருந்து வெயில் மழை பாராமல் நடந்துதான் இதையெல்லாம் பார்க்க முடியும். இன்றைக்குத் தவளையைப்பற்றி ஆராய்ச்சி செய்பவர்கள் இந்தியாவிலேயே மூன்று நான்குபேர்தான் இருப்பார்கள். தவளையைக் கண்டு ஒருவித அருவருப்பு மக்களுக்கு ஏற்படுகிறது. அது மாற வேண்டும்" என்று கவலைப்படும் சரவண குமார் 'ECOTONE' என்ற அமைப்பை சமீபத்தில் ஆரம்பித்திருக்கிறார்.

"ஒரு மலை முடிந்து அதன் பக்கத்திலேயே இன்னொரு மலை ஆரம்பிக்கிறதல்லவா?" அந்த ஒட்டுப்பகுதிக்குத்தான் 'ECOTONE' என்ற பெயர். இந்த இடத்தில் இரு மலை வாழ் இனங்களும் காணப்படும். எங்களின் இந்த அமைப்பு வனவிலங்குகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும்" என்கிறார்.

— ஏக்ஜி

படங்கள் : ஐரிஸ்

ஸ்ரீ ராமபக்த ஹனுமான்

✉ ஸ்ரீராமபக்த ஹனுமானின் புனிதமிகு புராணம் நிறைவுற்ற போது ஆஞ்சனேயருக்கு விரதமிருந்து அவரை வணங்கிவிட்டு விடுவந்த சிலிர்ப்பு மனத்தை நிறைத்தது. இந்த ஆன்மிகத் தொடரை ஆயுள் உள்ள வரை எந்த ஆஞ்சனேய பக்தனாலும் மறக்க முடியாது. மறக்கவும் கூடாது.

அயன்புரம், த. சத்தியநாராயணன்

✉ ஆராவமுதனின் ஆஞ்சநேயர் பிரபாவம் 29 வாரங்களில் நிறைந்தது ஆத்திக அன்பர்களுக்கு அதிர்ச்சி அளித்திருக்கும். வால்மீகி, கம்பர், துளசிதாஸர் போன்ற பலவகை இராமாயணங்களின் சாரத்தைப் பிழிந்து கொடுத்திருந்தார் ஆராவமுதன்.

திருவரங்கம், அ.சம்பத்

✉ ஹனுமானின் வீர பராக்கிரம செயல்களை விவரித்த தொடரை அதற்குள் முடித்து விட்டாரே! பத்மவாசனின் படம் அருமை.

நெய்வேலி, லட்சுமி

✉ இருபத்தி ஒன்பது வாரங்களில் ஸ்ரீ ராம பக்த ஹனுமானின் குணாதிசயங்களை எளிமையாக வடிவமைத்த கல்யாணபுரம் ஆராவமுதனுக்கு எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தஞ்சாவூர்,சீனி.ரகோத்தமன்



✉ 'ஏதோ ஒரு பெண்ணை இழுத்துக் கொண்டு ஓடுவது காதலா?' என்ற கேள்விக்கு, 'அப்படி ஒரு தப்பான அர்த்தத்தைக் கற்பித்து வைத்திருக்கிறோம்' என்று இயக்குநர் கதிர் சொல்லியிருக்கிறார். அப்படி ஒரு தப்பான அர்த்தத்தைக் கற்பித்து வைத்ததே திரையுலகம்தான் என்பதை அவர் புரிந்து கொண்டால் சரி!

மதுரை, என்.பாலகிருஷ்ணன்

✉ சுநந்தா நாராயணன் அன்ட் கோ உருவாக்கிய சாஃப்ட்வேர் ஐடியாவுக்குக் கிடைத்த தென்னவோ பத்து லட்சம் தான். ஆனால், அதன் மூலம் பல தொழிலதிபர்கள், பல கோடிகளைச் சம்பாதிப்பார்கள் என்பது மறுக்க முடியாத உண்மை.

சேலூர், எம்.ஏ. சந்திரசேகரன்

✉ 'சாவி என்னும் ஆலமரம் வீழ்ந்து விட்டாலும் அதிலிருந்து கிளைத்த அவரது சீடர்கள் என்னும் விழுதுகள் என்றென்றும் அவர் பெயர் சொல்லுவார்கள்'.

மதுரை, ஏ. கருப்பணன்

காதலுக்குப் பெருமை!

✉ வஸந்த் செந்திலின் கவிதைகள் அனைத்தும் காதலர் தின சிறப்பிதழுக்கு மட்டுமல்ல காதலுக்கும் பெருமை சேர்த்தது.

சூரம்பட்டி, சத்யா முருகவேல்


✉ பெரிய கடை வீதியைப் பற்றிச் சிலாகித்துப் பேசுகையில் 'பெற்ற தாயைத் தவிர சகலமும் கிடைக்கும்' என்று சொல்வார்கள். ஆனால் தாய்கூட (வாடகைக்குத்தான்) கிடைக்கிறாள் என்று படிக்கிறபொழுது விஞ்ஞானத்தின் அசுர வளர்ச்சியைக் கண்டு அதிசயித்தேன்.

தூத்துக்குடி, கே. சுதர்ஷன்

✉ 'அரசியலில் நீண்ட நாள் நண்பனும் இல்லை; நீண்ட நாள் எதிரியும் இல்லை' என்பதைத் தம் பங்கிற்கு ராமதாசும் நிரூபித்து விட்டார். அவரது சரணாகதி ஒன்றும் தமிழக அரசியலுக்குப் புதிதல்ல. தெளிவு பெற வேண்டியது, வாக்காள பெருமக்கள்தான்.

திருச்சி, ஆர். அப்துல் சலாம்

வட்டமேஜை


லாஸ் ஏஞ்சல்ஸ்
தமிழ்ப் பொண்ணு!

மயிலாப்பூர் ரத்னா திருமண மஹால். கதிரின் 'காதல் வைரஸ்' படப்பிடிப்பு அங்கேதான் நடக்கிறது என்பதற்குச் சாட்சியாக சாம்பிளுக்குக் கூட வெளியே ஒரு சினிமா வேன் இல்லை. ஒரு நூற்றாண்டு பழமைவாய்ந்த அந்தத் திருமண மஹாலுக்குள் நுழைந்தால் எங்கும் இருள். எதிலும் இருள். பயந்தபடியே உள்ளே நடந்தால்... எதிர்ப்பட்ட சின்ன முற்றத்தில் நிறைய வெளிச்சம். வெளிச்சத்திற்குக் காரணம் ஸ்ரீதேவி! இவர் விஜயகுமார் - மஞ்சுளா தம்பதியின் கடைக்குட்டி. 'ரிக்ஷா மாமா' படத்தில் கன்னத்தில் குழி விழ, கொஞ்சிக் கொஞ்சிப் பேசிய அதே சுட்டி.

''ஹைஸ்கூலில் கிளாசை கட் அடித்து விட்டு நேராகப் படப்பிடிப்புக்கு வந்த மாதிரி இருக்கீங்களே'' என்றதும், வெட்கப்பட்டுச் சிரிக்க, சிரிப்பைக் கன்னம் மொழிபெயர்க்கிறது. விளைவு! மீண்டும் கன்னத்தில் அதே குழி! "கே.கே. நகர் பத்மா சேஷாத்ரி ஸ்கூல்லே நைன்த் ஸ்டாண்டர்டு படிச்சிட்டு இருந்தேன். ஜனவரி செகண்ட் வீக்ல ஹோம்-வொர்க் செய்துகிட்டு இருந்த நேரம் அம்மா வந்து, கதிர் சார் படத்துல ஹீரோயினா நடிக்கிறியான்னு கேட்டாங்க. என்னால நம்பவே முடியலை. ஏன்னா ப்ளஸ் டூ முடிச்ச பிறகுதான் சினிமான்னு முடிவு செய்திருந்தோம். இவ்ளோ சீக்கிரம் அதுவும் கதிர் சார் படத்துல வாய்ப்புன்னு நினைக்கிறப்போ சந்தோஷமா இருக்கு...'' என்று கண்களில் மின்னலடிக்கப் பேசுகிறார். ''அப்போ டாக்டர், என்ஜினியர் லட்சியம் எதுவும் கிடையாதா?'' என்றால்... துளிக்கூட கிடையாதாம்.

"ஒண்ணாங்கிளாஸ் படிக்கிறபோதே ஒரு நடிகையா வரணும்னு லட்சியம் வந்துடுச்சி. நடிகைன்னா ஒரு அம்பது வருஷத்துக்காவது, நான் மக்கள் மனசுல இருக்கணும். 'எரின் புரோக்கோவிச்' படத்துல ஒரு குழந்தையை இடுப்புல தூக்கிக்கிட்டு, இன்னொரு குழந்தையைக் கையில பிடிச்சிக்கிட்டு, மக்களுக்காகப் போராடுவாங்களே ஜூலியா ராபர்ட்ஸ், அவங்க மாதிரி இயல்பா,





''இவ்வளவு நாள் தூங்கிட்டு பேஷண்ட இப்போதான் அழைச்சிக்கிட்டு வர்றதா?''

''ஏன் டாக்டர் ரொம்ப சீரியஸாயிருக்கா...?''

''சே! குணமாகிற நிலைமைக்கு வந்துடுச்சு பாருங்க!''

— எஸ். ஸ்ரீனிவாசன்

அந்த கேரக்டராகவே மாறி நடிச்சு பெயர் வாங்கணும்'' என்று திருமதி கெட்அப்பில் இருந்த சின்ன ஸ்ரீதேவி மூச்சிரைத்தார்.

''உங்க குடும்பத்தில் எல்லோருமே சினிமாத் துறைக்கு வந்துட்டீங்க... அப்போ கலைக் குடும்பம்னு நீங்க காலரைத் தூக்கி விட்டுக்கலாம் இல்லையா?'' என்றால் மறுக்கிறார்.

''எங்க வீட்டில் மொத்தம் ஆறு பேர். அக்கா அனிதா மட்டும் டாக்டர். அவங்களுக்குக் கல்யாணம் ஆயிடுச்சி. அவங்க சினிமாவுக்கே வரலையே...'' என்று குழந்தை மாதிரி குதூகலித்தவரை மடக்க நினைத்து,

''வரும் தேர்தலில் உங்க வோட்டை யாருக்குப் போடப் போறீங்க?'' என்றோம்.

''வோட்டுப் போடறதுக்கு எனக்கு வயசு பத்தலையே?'' என்று விழிக்க, நமது அடுத்த தாக்குதல் தொடர்ந்தது. ''கதிர் படத்தில் நடிக்கிறீர்கள். அப்போ காதலைப் பற்றித் தெரிஞ்சிருக்கணுமே'' என்றதும்... முகத்தில் பளீரென்று தைரிய வெளிச்சம். காதலைப் பற்றி இப்போ நான் கவலைப்பட வேண்டியதில்லை. நான் சின்னப் பொண்ணா இருக்கிறதாலே, யாரும் என்னை அப்ரோச் பண்ண மாட்டாங்க, சின்னப் பொண்ணு, பாவம்னு விட்டுடுவாங்க'' என்கிறார், ஒரு விவரமான குழந்தை மாதிரி.

''நான் வளர்ந்தது, படிச்சதுதான் சென்னையே தவிர, நான் பிறந்தது லாஸ் ஏஞ்சலஸ்லே. அங்கே எனக்கு நிறைய கேர்ள்ஃபிரண்ட்ஸ் இருக்காங்க. அவங்க கூட தினமும் ஒரு மணி நேரமாவது 'சாட்' பண்ணுவேன் என்று முகம் நிறைய சந்தோஷம் காட்டிய ஸ்ரீதேவியிடம், '''காதல் வைரஸ்' படத்துல நடிக்கறீங்க 'லவ் பக்' வைரஸ்ஸை யார் பரப்பினாங்கன்னு தெரியுமா?'' என்று கோடீஸ்வரன் பாணியில் ஒரு குவிஸ் கேள்வி கேட்டதும், ''பிலிப்பைன்ஸ் நாட்டுக்காரங்க 'கஸ்மேனும்' அவரோட காதலியும் சேர்ந்துதானே பரப்பினாங்க'' என்று தடாலடியாகப் பதில் சொல்கிறார்.

உலக அறிவு ஓகே! உள்ளூர் அறிவு எப்படி? ''நம்ம ஊர் சின்னபிள்ளையத் தெரியுமா?'' என்றால், ''என்னை என்ன ரொம்ப சின்னப்பிள்ளைன்னு நினைச்சுட்டீங்களா?'' என்றபடி சின்னபிள்ளையைப் பற்றி மூச்சு விடாமல் ஐந்து நிமிடம் பேசுகிறார். ''ஒரு குடிசை வீட்ல இருந்துகிட்டு, தன்னோட ஊருக்கு மட்டுமில்லாமல், எத்தனை ஊர் நல்லா இருக்கணும்னு நினைச்சிருக்காங்க...'' என்று தொடர... ''அம்மா பெரிய மனுஷி, போதும் தாயே'' என்று கெஞ்சியதும்தான் நிறுத்தினார்!

ஸ்ரீதேவிக்குப் பிடித்த ஹீரோ, ஹிர்த்திக்ரோஷனாம். ''கஹோனா பியார் ஹை'' படத்தை மட்டும் நூறு முறை பார்த்து சாதனை படைத்துவிட்டேன்'' என்று வெட்கப்பட்டபோது, ஹிர்த்திக் ஃபீவரின் வீச்சு அனலாய்த் தகித்தது.

கதிரின் இயக்கத்தில் நடிக்க எப்படியிருந்தது என்று கடைசியாக ஒரு கேள்வியைக் கேட்டதும், 'அய்யய்யோ... நடிப்பு என்ற வார்த்தையே கதிர் சாருக்குப் பிடிக்காது... நடிக்காதே, இயல்பாகச் செய்' என்று சொல்கிறார். அவர் படத்துல நடிக்க நான் கொடுத்து வெச்சிருக்கணும்'' என்று ஸ்ரீதேவி உணர்ச்சிவசப்பட அந்த நேரம் பார்த்து இயக்குனர் கதிர் அங்கே வர, கதிரின் முகத்திலும் கிலோ கணக்கில் சந்தோஷம்!

சந்திப்பு : விஷ்ணுவல்தாசன்

படங்கள் : ஜரிஸ்

தமிழகத்தை 'ஜெ' மாற்றுவாராமே...?

● த. குணசேகரன்,
கவுந்தப்பாடி.

? 1996 சோ, 2001 சோ- இருவரையும் ஒப்பிடுங்கள்...

! 1996-சோ! 2001- அச்சச்சோ!



* ஆயாச ஏக்கம்!

●உமரி பொ. கணேசன்,
மும்பை-37. ✱

? த.மா.கா. தலைவர் மூப்பனார் எதற்கெடுத்தாலும் சோனியாவிடம் யோசனை கேட்கிறார்- பிறகு எதற்கு அவர் தனிக் கட்சி நடத்துகிறார்?

! நேரு குடும்பத்திடம் உள்ள பாசம் கண்களை மறைப்பதால் தடுமாற்றங்களுக்கு உள்ளாகிறார்.

●கே. குகன், மயிலாடுதுறை

? ராஜதந்திரம் என்பதற்கும் சூழ்ச்சி என்பதற்கும் என்ன வித்தியாசம்?

! நாட்டு நலன் கருதி அரசியல் சதுரங்கத்தைச் சாதுர்யமாக ஆடுவது ராஜதந்திரம். சுயநலம் கருதி அரசியல் வஞ்சகம் புரிவது சூழ்ச்சி.

● கே.எஸ். ராமையா, மதுரை – 10

? அமரர் கல்கி அவர்களின் கடைசி விருப்பம் என்னவாக இருந்தது? அதை நீங்கள் நிறைவேற்றினீர்களா?...

! கடைசி விருப்பம் என்றில்லை; அமரர் கல்கியின் ஒரே விருப்பம் தேசநலன் என்பதாகவே இருந்தது. அதை நாங்கள் நிறைவேற்றுகிறோமா என்பதை வாசகர்கள்தான் சொல்ல வேண்டும்.

● வி. விமல், சென்னை – 4.

? குஜராத் பூகம்பத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நூறு கோடி ரூபாய் நிதி சேர்க்கப்பட்டுள்ளது மக்களின் உதவும் குணத்தைக் காட்டுகிறதா. அல்லது கறுப்புப் பணம் இங்கு புகுந்து விளையாடுவதைக் காட்டுகிறதா?

! கறுப்புப் பணம் பண்ணும் மனநிலை உள்ளவர்களுக்கு அள்ளித்தரும் தயாளகுணம் இருக்குமா? பூகம்ப நிதி, பெரும்பாலும் நேர்மையாகச் சம்பாதித்தவர்கள் மனமுவந்து அளித்ததுதான்.

● இரா. பார்த்திபன், சேத்துப்பட்டு

? ஜோதிடத்தில் நம்பிக்கை உண்டா?

! விருப்பும் இல்லை; வெறுப்பும் இல்லை என்ற நிலையில் இருந்தேன். ஆனால், தேர்தலில் போட்டியிட விரும்பும் வேட்பாளர்கள் ஜாதகத்தையும் இணைத்து விண்ணப்பிக்க வேண்டும் என்ற 'ஜெ' அறிவித்ததாகக் கேள்விப்பட்டதும்

நம்பிக்கை அடியோடு போய் விட்டது-'ஜெ'யிடம்.

● த.ஜெயப்பன்,
காவல்கிணறு ❒

? லாட்டரி மூலம் தமிழ் நாடு அரசுக்கு ரூபாய் நூறு கோடிக்கு மேல் லாபம் கிடைத்துள்ளது பற்றித் தங்கள் கருத்து என்ன...?

! நாய் விற்ற காசு குரைக்கா மல் இருக்கலாம்; ஆனால் ஏழைகளுக்கு ஆசைகாட்டி சூதாட்டத்தில் ஈடுபட வைத்துப் பெற்றகாசு கண்ணீரில் விளைந்த லாபம்!

● கே. ரமேஷ்,
பள்ளிபாளையம்

? நான் கலந்து கொள்ளப் போகும் கடைசி தேர்தல் இதுதான் என்று கலைஞர் உருக்கமாகக் கண்ணீர் சிந்தியுள்ளாரே...?

! ஓய்வுக்காக ஏங்கும் உழைப்பாளியின் உண்மையான சோர்வு.

● எஸ். அப்துல்லா
அஹ்மது, நாகூர்

? காதலர் தினம் கொண்டாடப்படுவது தேவை தானா...?

! காதலர் தினம் கொண்டாடப்படுவதைக்கூட ஒப்புக் கொண்டு விடலாம். அதை வைத்துக்" கொண்டு தனியார் டி.வி சானல்கள் அடிக்கும் கூத்து சகிக்க வில்லை. உம்: ஜெயா டி.வியில் லவ்2k என்ற நிகழ்ச்சி. புதுமுக நடிகர் ஸ்யாமுடன் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அத்தனை கல்லூரி மாணவிகளும் லஜ்ஜையின்றிக் காதல் மொழி பேசி வழிந்தனர். வெற்றி பெற்ற பெண்ணுக்கு ஷ்யாமுடன் ஒரு நாள் 'டேடிங்' பரிசு! ரேஷ்மா என்ற பெண் தன் காதலைத் தெரிவிக்கும் புத்தகமாக ஸ்யாமிடம் தந்தது 'தெய்வத்தின் குரல்' இரண்டாம் பாகம் நூலை! புதுமைக்கும் அபத்தத்துக்கும் மயிரிழையே வித்தியாசம். இதை டி.விக்காரர்கள் புரிந்து கொள்வார்களா...? இதே ரீதியில் நிகழ்ச்சிகள் தொடர்ந்தால் சிவசேனாவுக்கு ஆதரவு தரக் கூடத் தோன்றிவிடும்!

● எம். பிச்சைக்கனி, நெமிலி

? ஒருவேளை தமிழக மக்கள் மீண்டும் அ.தி.மு.கவை ஆட்சிக்குக் கொண்டு வந்தால் அதற்கான காரணம் என்னவாக இருக்கும்...?

! த.மா.கா., பா.ம.க., காங்கிரஸ்!

● வீ. முத்தையா, திருநெல்வேலி

? விழாக்களுக்காகவும் வரவேற்பு வளைவுகளுக்காகவும் சாலைகளைத் தோண்டக் கூடாது என்று தடைச் சட்டம் கொண்டு வரலாமே...?

! குடிநீர் வாரிய ஊழியர்கள், தொலைபேசி-கேபிள் ரிப்பேர் ஊழியர்கள் மின் வாரிய ஊழியர்கள், கழிவு நீர்க் குழாய்களைச் சரி செய்வோர், சாலை பராமரிப்பு ஊழியர்கள்... இவர்கள் எல்லோரும் தோண்டியது போக மீதி இருக்கும் கொஞ்சூண்டு இடத்தை வரவேற்பு வளைவுகளுக்காக யாராவது தோண்டினால்தான் என்ன..!

● எஸ். அகிலா,
தென்கடப்பந்தாங்கல்


? நிம்மதி, புகழ்- இதில் எது மனிதனுக்குத் தேவை...?

! புகழின்றி நிம்மதியாய் வாழ முடியும். ஆனால் நிம்மதியின்றிப் புகழுடன்...!

● கு. கணேசன், பனங்கோட்டூர்

? 'விடுதலைப் புலிகள் ராஜீவைக் கொலை செய்வதற்குரிய சூழ்நிலையைத் தமிழகத்தில் உருவாக்கிக் கொடுத்ததே கருணாநிதி தான்' என்று ஜெயலலிதா குற்றம் சாட்டியுள்ளாரே...?

! வோட்டு அரசியலுக்காகப் பேசப்படும் சொற்களை ஒதுக்கிவிட்டுப் பார்த்தால், அனைத்து இந்திய மற்றும் தமிழகத் தலைவர்களும் (ஜெயலலிதா உள்பட) ஏதேனும் ஒரு காலகட்டத்தில் புலிகளை ஆதரித்தவர்கள்தான். இதற்காக


• ஐந்தாண்டுகளில்...


• தடுமாறும் மா.கா!


• ஒரே விருப்பம்!


• வினோத வேட்புமனு!


• முன்னேற்ற அறிகுறி


• ஓட்டைச் சட்டி!

□ ரூ. 50 பரிசு பெறுபவர்:
த. ஐயப்பன்,
அம்மன் கோயில் தெரு,
புதூர்,
காவல்கிணறு (அஞ்சல்)
நெல்லை-627105

* ரூ. 25 பரிசு பெறுபவர்:
உமரி பொ. கணேசன்
ஏ-114, மோதிலால் நேரு நகர்,
ஆண்டாப் ஹில்,
மும்பை – 37

ராஜீவ் காந்தி கொலைக்கு உடந்தையாக இருந்தார்கள் என்று பழி சுமத்துவது அபாண்டம். எல்லா தலைவர்களுக்குமே புலிகளைப் பற்றிய மறுசிந்தனைக்கு அந்தச் சம்பவம் காரணமாக அமைந்தது எனலாம்.

● **கருப்பம்புலம் சித்திரவேலு,**
நெய்விளக்கு

? மாறனின் சரணாகதி வீரப்பன் விவகாரத்தில் முன்னேற்றம் என்று சொல்லலாமா?

! நிச்சயமாக. அதனாலேயே சிறப்பு காவல் படையின் முயற்சியில் தளர்ச்சி வந்துவிடக் கூடாது.

● **மு. ஜரினா பேகம், தஞ்சாவூர்**

? அ.தி.மு.கவிடம் 65 இடங்கள் கேட்கிறாரே ஈ.வி.கே.எஸ் இளங்கோவன்?

! இதிலொன்றும் குறைச்சலில்லை. தலைவர்களை வரவேற்கவோ வழியனுப்பவோ போகும்போது விமான நிலையத்தில் நடக்கும் கோஷ்டி சண்டைகள் சகிக்க முடியவில்லை. ஒட்டைச் சட்டியை வைத்துக் கொண்டு ஊருக்கெல்லாம் கொழுக்கட்டை சமைக்க ஆசையாம்!

● **ரொசாரியோ ரவிச்சந்திரன்,**
சென்னை –59

? பூகம்ப நிவாரண நிதிக்குச் சேர்ந்த கோடிக்கணக்கான பணம் சரியான முறையில் செலவிடப்படுகிறதா...?

! எல்லாம் அல்வா ஆன பிறகு கமிட்டி அமைப்பது தானே வழக்கம்! இப்போ குஜராத்துக்கு மட்டும் இல்லே; ஒரிஸ்ஸா அல்வாவுக்கும் ஆய்வுக் கமிட்டி அமைத்திருக்கிறார்கள்!

● **தி.ச.தா.ராயன்,**
மயிலாடுதுறை

? 'என்னைக் கொல்ல சதி' என்று மேடைகளில் கதறிய வைகோ கலைஞருடன் இருக்க, அ.தி.மு.கவுடன் காங்.கூட்டணி என்பதற்காக வெளியேறி த.மா.காவை உருவாக்கிய மூப்பனார் இன்று அதே கட்சியுடன் கூட்டணி கூழப்பத்தில் இருக்கிறாரே-இரண்டுக்கும் என்ன வேறுபாடு?

! ரிவர்ஸில் போன வைகோ சுதாரித்துக் கொண்டு ஃபார்வர்ட் வந்துள்ளார். மூப்பனார் ஃபார்வர்டிலிருந்து ரிவர்ஸ் கியர் போயிருக்கிறார்.

● **வி.எஸ். கணேசன், சென்னை – 87**

? தமிழகத்தை முற்றிலும் மாற்றிவிடும் சக்தி அம்மாவுக்குத்தான் இருக்கிறது என்று ராமதாஸ் கூறியுள்ளாரே...?

! ஏற்கெனவே மாற்றிய கதையைத்தான் பார்த்தோமே!

● **கே.என். பாலகிருஷ்ணன்,**
கும்பகோணம்

? 'க்ரோர்பதி', 'கோடீஸ்வரன்' போன்ற நிகழ்ச்சிகளால் கணிசமான லாபம் பெறுவோர் யார்...?

! நிகழ்ச்சித் தயாரிப்பாளர்கள் அளவுக்கு இல்லாவிட்டாலும் குவிஸ் புத்தகங்கள் வெளியிடுவோரின் காட்டில் ஆலங்கட்டி மழை என்று கேள்வி. பிரபல புத்தகக் கடைகளில் 'குரோர்பதி' என்றே பிரத்யேகமாகச் சுழலும் அலமாரி அமைத்து, ஐம்பது ரூபாயிலிருந்து ஐந்நூறு ரூபாய் வரை விலையிலான புத்தகங்களை அடுக்கி வைத்துள்ளார்கள். சீசனுக்கேற்ற மகசூல். அது சரி, நஷ்டம் யாருக்குத் தெரியுமா? விளம்பரப் பொருள்களை வாங்கிப் பயன்படுத்துவோருக்குத் தான். எப்படி என்று யோசித்தால் புரியும்! ○

"ஒருநாள் அத்தர்வாசம், ஒரு நாள் ஜவ்வாது வாசம்னு தினமும் ஒரு செண்ட்டு வாசத்துலே இருப்பாரே தலைவர்... இப்ப எந்த வாசத்துலே இருக்காரு?"
"சிறைவாசத்துலே!"

– தஞ்சை தாமு



பவர்ஃபைனான்ஸ்

தமிழ்நாடு அரசு நிதி நிறுவனம்

நிகரற்ற பாதுகாப்பு

நிலையான வருமானம்

15.44%	**11.61%**
60 மாதங்களுக்கு (மாதாந்திர கூட்டு வட்டி ஆண்டிற்கு 11.50%.)	36 மாதங்கள் மற்றும் அதற்கு மேற்பட்ட காலத்திற்கு மாதாந்திர வட்டி 11.50%. 12 மாதங்களுக்கு காலாண்டு வட்டி 10.08%. 24 மாதங்களுக்கு காலாண்டு வட்டி 10.59%.

தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம்

(தமிழ்நாடு அரசு நிதி நிறுவனம்)

பதிவு அலுவலகம் : எண் 84, டிடிகே. சாலை, ஆழ்வார்ப்பேட்டை, சென்னை - 600 018.

தொலைபேசி : 4997689, 4995648. ஃபேக்ஸ் : 044-4982894.

30-9-2000 தேதியிட்ட எகனாமிக் டைம்ஸ் இதழில் வெளியிடப்பட்ட முந்தைய விளம்பரத்தின் தொடர்ச்சியாக இந்த விளம்பரம் வெளியிடப்படுகிறது.

Visit us at : www.tn.gov.in / www.chennaionline.com / www.aaraamthinai.com / www.southindia.com / www.webulagam.com / www.thegovt.com



சென்னை டு சைனா 8

அழகி

சாருகேசி

தொண்ணூறு வருட நகைச்சுவை நாடகப் பாரம்பரியம் ஷாங்காய் தியேட்டருக்கு இருக்கிறது. 'த இன்டர்நேஷனல் ஷாங்காய் ஆர்ட்ஸ் அண்ட் கல்சுரல் ஃபெஸ்டிவலி'ல் 'தாங்க் யூ, த ஹோல் ஃபேமிலி!' என்றொரு நகைச்சுவை நாடகம் சக்கைப் போடு போட்டிருக்கிறது. முழுக்க முழுக்க ஷாங்காய் நடிக-நடிகையர். டயலாக் முழுக்க ஷாங்கனீஸ். அதாவது, நம் மெட்ராஸ் பாஷை, திருநெல்வேலித் தமிழ், கோவைத் தமிழ் மாதிரி ஷாங்காய்வாசிகள் பேசும் சீன மொழி. இதை 'ஹுவாஜி நாடகம்' என்கிறார்கள்.

ஜப்பானில் பல வருடங்கள் பிஸினஸ் செய்துவிட்டு ஷாங்காய் திரும்புகிறார் குடும்பத் தலைவர். ஆரம்பத்தில் பிஸினஸ் சரியாகவே இல்லை. மனைவிக்கோ கணவர் ஆரம்பித்திருக்கும் வியாபார நிறுவனத்தில் தமது சொந்தக்காரர்கள் எல்லாருக்கும் ஒவ்வொரு பதவி கொடுக்க வேண்டும் என்று ஒரே நமைச்சல்.

ஒரு நாள் தமது ஆபீசுக்குப் போனால், குடும்பத் தலைவருக்குத் தூக்கிவாரிப் போடுகிறது.

மருமகள்தான் அவருடைய செகரடரி. மச்சினன் சேல்ஸ் மானேஜர்.



அம்மா அக்கவுன்டென்ட். முதலாளி? சாட்சாத் மனைவி! கலாட்டாவுக்கும், நகைச்சுவைக்கும் கேட்க வேண்டுமா? கூத்து என்றால் சரியான கூத்து. ஷாங்காய்வாசிகள் வாய்

விட்டுச் சிரித்து ரசிக்கிறார்கள்.

இதை அப்படியே கிரேஸிமோகன் இங்கே மேடை ஏற்றினால் வயிறு குலுங்க அல்லது வயிறு வலிக்க ரசிகர்கள் சிரித்து ரசிப்பார்கள் என்பது நிச்சயம்!

கலாசாரப் புரட்சி நடந்து இந்தப் பத்தாண்டுகளில் சைனாவில் நிகழ்ந்து வரும் மாற்றங்கள் பற்றி ஒரு தனிப் புத்தகமே எழுதலாம்.

மாடலிங் பற்றியோ, அழகுப் போட்டிகள் பற்றியோ சைனாவில் நினைத்துப் பார்த்திருக்க முடியுமா?

இருபது வயது லூ-யீ இப்போது க்னாடியா அல்லது சிண்டி க்ராஃபோர்டு போல ஒரு புகழ்பெற்ற மாடல். இவரது ரசிகர்கள் ஆயிரக் கணக்கில் இருக்கிறார்கள். ஷென்யாங் நகரில் நடக்கும் மாடலிங் பெண்களின் அழகிப் போட்டியை ஃபோர்டு ஏஜென்சி நடத்துகிறது. முதலில் இது பெய்ஜிங்கில்தான் நடந்து வந்தது. ஃபோர்டு சூப்பர் மாடல் போட்டியில் பரிசு பெறும் மாடல்களுக்கு இரண்டரை லட்சம் அமெரிக்க டாலர் வருடாந்தர கான்ட்ராக்ட் படி கொடுக்கப்படுகிறது!

கம்யூனிச நாடுதான். ஆனால்

போட்டிக்கு எதிர்ப்பில்லை!



• தாங்க்யூ த ஹேரால் ஃபேமிலி-நடிக, நடிகையர்

இம்மாதிரி அழகிப் போட்டிகளை நடத்தும் இடத்தில் ஆர்பாட்டமோ, எதிர்ப்போ அறவே கிடையாது!

ஒலிம்பிக் 2008 அநேகமாக சீனத் தலைநகர் பெய்ஜிங்கில்தான் நடைபெறும். ஒலிம்பிக்-2000ஐ நடத்த முயன்ற சீனா ஒரே ஒரு வோட்டில் வாய்ப்பை சிட்னியிடம் இழந்ததை இவர்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை!

பெய்ஜிங்கின் துணை மேயரும், ஒலிம்பிக் 2008 குழுவின் நிர்வாகத் துணைத் தலைவருமான லியூ ஜிங்மின் இப்போதே அதற்காகத் திட்டமிட்டு உழைக்க ஆரம்பித்து விட்டார்! 'நியூ பெய்ஜிங்-கிரேட் ஒலிம்பிக்ஸ்'என்ற

• ஷாங்காய் நகரம்



ஸ்லோகன், ஸ்லோகம் மாதிரி இவர்களின் பேச்சுக்களில் எல்லாம் பொழிகிறது. 'க்ரீன் ஒலிம்பிக்ஸ்' என்று சுற்றுச்சூழல் விஷயத்திலும் 'ஹ்யூமன் ஒலிம்பிக்ஸ்' என்று உலகம் முழுதும் இருக்கிற விளையாட்டு வீரர்களை வரவேற்கவும், 'சையன்டிஃபிக் அண்ட் டெக்னலாஜிகல் ஒலிம்பிக்ஸ்' என்று தொழில் நுட்பத் துறையில் செய்துள்ள சாதனைகளை ஒலிம்பிக் போட்டிகளில் எப்படிப் பயன்படுத்தப் போகிறார்கள் என்பதைக் காண்பிக்கவும் காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஏர் பொல்யூஷன், லெவல்-2 அளவுக்குக் குறைக்கப்பட வேண்டும் என்பதற்காகவே பில்லியன் கணக்கில் யுவான்களை வாரி வாரிச் செலவழிக்கிறார்கள். ஆறாயிரம் வரு



• லூ - யி

டத்துக் கலாசாரப் பின்னணிகளைக் காட்டும் சின்னங்களைப் புதுப்பித்து வைத்திருக்கிறார்கள். கல்வி நிலையங்களையும், தகவல் தொடர்புத் துறைகளையும், போக்குவரத்து, ஹோட்டல் துறைகளையும் சர்வதேசத் தரத்துக்கு இப்போதிலிருந்தே உயர்த்தி வருகிறார்கள்.

"நாங்கள் செய்த தவறு, இத்தனை வருடங்களாக பெய்ஜிங்கை வெளியுலகுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டாததுதான். அதனால் மேற்கத்திய மீடியாவுக்குச் சைனா பற்றிய தவறான கணிப்பு இருந்து வந்திருக்கிறது. ஒலிம்பிக்-2008 இதை எல்லாம் மாற்றி, எங்கள் சாதனைகளை, குறிப்பாகச் சைனாவின் நவீன உருவத்தைக் கண்டு வியப்புற வைக்கும் பணிகளை, உலகம் பூராவும் தெரிந்து கொள்ள உதவும். கடந்த இருபது ஆண்டுகளில் பொருளாதாரத்திலும், பிற துறைகளிலும் சைனா ஏற்றுக் கொண்ட மாற்றங்கள், நாட்டின் முன்னேற்றத்துக்கு எத்தனை விரைவாக உதவியிருக்கின்றன என்பதை மேற்கத்திய மீடியா இனியாவது புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகக் கடுமையாக உழைத்து வருகிறோம்.

"தலைநகர் ஏர்போர்ட் மிகப் பெரியதாகக் கட்டப்பட்டிருக்கிறது. ரெயில்வே, வாட்டர்-வே, எக்ஸ்பிரஸ்-வே எல்லாம் விரிவு படுத்தப்பட்டிருக்கின்றன. இன்னும் இருநூறு கிலோ மீட்டர் தூரத்துக்கு நகர எக்ஸ்பிரஸ் பாதை அமைத்து வருகிறோம். 2002ல் இது முடிந்துவிடும். 2007க்குள் இன்னும் இரண்டு மெட்ரோ ரயில் லைன்களும், ஒரு புதிய ரயில்வே பிராஜக்ட்டும் முடித்து விடுவோம். 5750 ஸ்போர்ட்ஸ் தலங்களும், இருபத்துமூன்று பெரிய ஜிம்னாசியங்களும் இப்போதே பெய்ஜிங்கில் இருக்கின்றன. இது போதாது என்று, இன்டர்நேஷனல் தரத்துக்கு மிகப் பெரிய, பெரிய, சிறிய ஜிம்னாசியங்களும், ஸ்டேடியங்களும் கட்டப்பட்டு வருகின்றன..." என்கிறார் துணை மேயர்.

ஒலிம்பிக் பார்க் ஃபர் டுவன்டிபர்ஸ்ட் செஞ்சுரி 1215 ஹெக்டேரில் தயாராகி வருகிறதாம். எண்பதாயிரம் பேர் அமர்ந்து பார்க்கும் ஸ்டேடியம், பதினான்கு ஜிம்னாஸியம், விளையாட்டு வீரர்களின் நகரங்கள், பயிற்சி எடுக்கவும் ஓய்வு எடுக்கவும் தனியே எழுநூற்று அறுபது ஹெக்டேரில் புல்வெளி மற்றும் தங்குமிடங்கள்!

துணை மேயரின் பேச்சைக் கேட்டால் நமக்குப் பொறாமையில் மண்டையே வெடித்து விடும். அதனால், நம்மால் நினைத்துக்கூடப் பார்க்க முடியாத இம்மாதிரி அற்புதங்களை மேலும் பட்டியலிட்டுக் கொண்டிருப்பானேன்!

கெய்ரோ, ஹவானா, இஸ்தான்புல், டொரன்டோ, பாரிஸ், பாங்காங், கோலாலம்பூர், ஸ்பெயினில் உள்ள செவைல், ஜப்பானின் ஒசாகா இந்த ஒன்பது நகரங்களுடன் போட்டி போடுகிறது பெய்ஜிங். ஒலிம்பிக்-2008 பெய்ஜிங்கில்தான் நடக்கும் என்பதற்கு அதன் பிரமிக்கத்தக்க வசதிகளும் வளர்ச்சியும் நிச்சயம் கைகொடுக்கும். எந்த எந்த விளையாட்டுக்களில் தங்கப் பதக்கம் பெறுவோம் என்பதைக்கூட இப்போதே பட்டியல் போட ஆரம்பித்து விட்டார்கள்!

ஷாங்காயில் மிகப் பெரிய ஸ்போர்ட்ஸ் கடை வைத்திருக்கும் மார்க் தாமஸ், "இந்த ஏழெட்டு வருடங்களிலேயே இத்தனை மாற்றங்களைச் செய்து காட்டிய சீனர்கள், இன்னும் எட்டு வருடங்களில் பிரமிக்க வைத்து விடுவார்கள். தனிமனித சுதந்தரம், பொருளாதாரம்-இந்த இரண்டு துறைகளில் மட்டும் இவர்கள் படைத்திருக்கும் சாதனை, சைனாவைப் பற்றி இனியும் புரிந்து கொள்ளாமல் இருக்கும் பல-நாட்டு மக்களின் மனசையே

உங்கள் குடும்ப சேமிப்பிற்கு

முழு பாதுகாப்பு

TDFC யில் முதலீடு

36 மாதம்
அதற்கு மேல்.

11.61%

11.50% மாதாந்திர
வட்டி உண்டு.
12 மாதம் 10.08% மற்றும்
24 மாதங்கள்
10.59%
காலாண்டிற்கு

- Registered with RBI as NBFC vide Regn. No.:07.00403

60
மாதங்களுக்கு.

15.44%

வருட வட்டி
11.50% மாதந்தோறும்
கூட்டு வட்டி
முறையில்
கணக்கிடப்படும்.

தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் லிமிடெட்.

(தமிழ்நாடு அரசு நிறுவனம்)

பதிவு அலுவலகம் : 99, கிரீம்ஸ் சாலை,
எம்.என். அலுவலக வளாகம், சென்னை-6.
தொலைபேசி : 8292059, 8292917, 8293351,
பேக்ஸ் : (044)8293651 தந்தி :TAFCON. P.B.No.719.
E-mail:tdfc@giasmd01.vsnl.net.in

கிளைகள் :

★ அரசு விரைவு பேருந்து நிலையம், காந்திபுரம், கோயம்புத்தூர்-641 044.
தொலைபேசி : (0422) 497102

★ அரசு விரைவு பேருந்து நிலைய வளாகம், திருச்சி-620 001.
தொலைபேசி:(0431) 464188

★ ராணி மங்கம்மாள் சத்திரம், மதுரை-625 001. தொலைபேசி: (0452) 741686

★ நகராட்சி அலுவலக வளாகம், காமராஜர் சாலை, ஈரோடு-638 001.
தொலைபேசி : (0424) 258204

- உள்ளூர் காசோலைகள் மற்றும் சென்னை வரைவோலைகள் மட்டுமே பெற்றுக்கொள்ளப்படும்.
- காசோலைகளும், வரைவோலைகளும், சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளிலும் சென்னை அலுவலகத்தில் ஏற்கப்படும்

இந்த விளம்பரம் கம்பெனியால் 29.9.2000 தினமணியில் வெளியிடப்பட்ட சட்ட பூர்வ விளம்பரத்தின் தொடர்ச்சியாகும்.

செ.ம.தொ.இ/224/வரைகலை/2001

Visit us at :www.tn.gov.in/www.chennaionline.com/www.aaraamthinai.com/www.southindia.com/www.webulagam.com/www.thegovt.com

மாற்றிவிடும்!'' என்கிறார்.

வங்கித் துறையில் தனியார் முயற்சிகளுக்கு வரவேற்புச் சொல்லிவிட்டது பெய்ஜிங். நான்கு மிகப் பெரிய அரசுத் துறை வங்கிகளை 'சைனா கன்ஸ்ட்ரக்ஷன் பாங்க்,' 'த இண்டஸ்ட்ரியல் அண்ட் கமர்ஷியல் பாங்க் அஃப் சைனா,' 'த அக்ரிகல்சரல் பாங்க் அஃப் சைனா' மற்றும் 'பாங்க் அஃப் சைனா' 1993 முதலே பாரம்பரிய அரசுத்துறை வங்கிகள் என்ற திட்டமிட்ட பொருளாதாரப் பாதையில் சென்று வந்ததை மாற்றிக் கொண்டு முழுக்க முழுக்க கமர்ஷியல் வங்கிகள் ஆகிவிட்டன.



''தலைவர் புத்தி ஏன் இப்படி போகுது?''
''என்ன விசயம்?''
''கட்சில இளைஞர் அணி இருந்தா போதாதாம். பெண்கள் அமைப்பை மகளிர் அணி, இளம் மகளிர் அணின்னு ரெண்டா பிரிச்சுட்டார்!''
- அம்பை தேவா

தொண்ணூறுகளில் ஷென்ஸென் டெவலப்மெண்ட் பாங்க்கும், ஷாங்காய் புடோங் டெவலப்மெண்ட் பாங்க்கும் கமர்ஷியல் வங்கிகளாகத் தொடங்கப்பட்டு, பிறகு பப்ளிக் லிமிடெட் வங்கிகளாக மாறிய முதல் வங்கிகள்.

உலகவர்த்தக அமைப்பு ஒப்பந்தத்தில் சீனா கையெழுத்துப் போடும் நிலைமை உருவாகி இருக்கிற சமயத்தில், சர்வதேச வங்கிகள் சைனாவுக்குள் நுழைந்துவிட்டால் போட்டி கடினமாக இருக்கும். எனவே இப்போதே புதிதாக பத்து தனியார் கமர்ஷியல் வங்கிகளுக்கான நடைமுறைச் சட்டதிட்டங்களை பீகிங் சர்வகலாசாலைப் பேராசிரியர் ஸூ டியான்க்விஸ் என்பவர் முடித்துக் கொடுத்துவிட்டு, சீன அரசின் நிதித்துறை அதிகாரிகளின் அனுமதிக்காகக் காத்திருக்கிறாராம்! இந்தத் தனியார் வங்கிகள் செயல்படத் தொடங்கி விட்டால், ஏற்கெனவே இயங்கி வரும் வங்கிகள் விழித்துக் கொண்டு சுறுசுறுப்புடன் செயலாற்ற வழி வகுக்கும் என்று சொல்லுகிறார் 'சைனா டெய்லி'யின் பொருளாதார நிருபர் ஹூவோ யாங்ஷி.

மக்களுக்கும், நாட்டுக்கும் நன்மை தரும் என்றால் பாதையைத் தைரியமாக மாற்றிக் கொள்ளத் தயங்காதவர்கள் சீனர்கள்.


வங்கிகளுக்கு வெளியிலேயே கூட டாலர்களை மாற்றிக் கொண்டு விடலாம்! அத்தனை பேர் கையில் கட்டுக் கட்டாக யுவான்களுடன் நம்மை எதிர் கொள்ளுகிறார்கள். வங்கி ரேட் என்னவோ, அதே ரேட் இவர்களும் தருகிறார்கள். ஆனால் கள்ள நோட்டும் கலந்தே இவர்களிடம் வந்து விடுவதால், நம்மைப் போன்றவர்கள் உள்ளேயே வங்கியின் கவுன்ட்டரில் டாலரைக் கொடுக்க வேண்டியிருக்கிறது. அப்படியும் நம் பின்னால் (வங்கிக்கு உள்ளேயே!) வந்து விடுகிறார்கள் இவர்கள். வங்கி ஊழியர்களோ, காவலரோ ஒன்றும் சொல்வ இல்லை!

நாட்டுடைமையாக்கப்பட்ட மிகப் பெரிய ஸ்டீல் கம்பெனியான பாவ்ஷன் அயர்ன் அண்ட் ஸ்டீல் கம்பெனியை, அரசின் என்டர்பிரைஸ் ரீஃபார்ம் டிபார்ட்மெண்ட், தனியார் முதலீடு செய்ய வகை வகுத்திருக்கிறது. ''இதன்மூலம் சுமார் எண்ணூற்று ஐம்பது மில்லியன் டாலர் முதலீடு கிடைக்கும். சீனாவின் மிகப் பெரிய நிறுவனம் இது. நவீன வணிக அமைப்பில் இது விரிவடைந்து லாபம் ஈட்ட வேண்டும் என்பதே எங்கள் குறிக்கோள். இனியும் இது போன்ற பல நிறுவனங்கள் மாற்றியமைக்கப்பட்டு மாடர்ன் கார்ப்பொரேட் சிஸ்டம் நடைமுறையில் கொண்டு வரப்பட்டு, திறமையாக இயங்க இது ஒரு முன்னோடி'' என்கிறார் என்டர்பிரைசஸ் ரீஃபார்ம் டிபார்ட்மெண்ட் துணை இயக்குநர் லியு டாங்ஷெங்.

இப்படி இருந்தால் ஏன் ஏற்றுமதித் துறையில் இவர்கள் ஒரே ஆண்டில் முப்பத்தைந்து சதவிகித வளர்ச்சியைக் காண மாட்டார்கள்? வெளிநாட்டுச் சந்தை வணிகம் இந்த ஆண்டு 450 பில்லியன் யு.எஸ்.டாலரை எட்டிவிடுமாம்.

இதுபோல நிறைய நிகழ்ச்சிகள், உதாரணங்கள். அடுக்கிக் கொண்டே போகலாம். சமீபத்தில் ஷாங்காய் வந்து அதிகாரிகளுடன் பேசிவிட்டு ஆந்திராவுக்குத் திரும்பிப் போன சந்திரபாபு நாயுடு பிரமித்துப் போய்விட்டாராம். எந்த முதலமைச்சரும்-பீஹார் தவிர-நிச்சயம் பிரமிக்கத்தான் செய்வார்கள்!

-அடுத்த வாரம்





2001 மார்ச் 4
விக்ரம மாசி 20
மலர் : 59
இதழ் : 31

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.




த.மா.காவின் தப்புக் கணக்கு!

கடந்த பாராளுமன்றத் தேர்தலின்போது (1999) த.மா.கா. தமிழகத்தில் மூன்றாவது அணி அமைத்துப் போட்டியிட்டது. அத்தேர்தலில் அ.தி.மு.க. அணி வென்ற அனைத்து இடங்களிலுமே தி.மு.க. வோட்டுக்கள் மற்றும் மூன்றாவது அணி வோட்டுக்களின் கூட்டுத் தொகை, அ.தி.மு.க. பெற்ற வோட்டுக்களைக் காட்டிலும் அதிகமாக அமைந்திருந்தது.

மூன்றாவது அணி அமைப்பதால் விளையும் மும்முனைப் போட்டியினால், ஆதாயம் அ.தி.மு.கவுக்குத்தான் என்பது ஏற்கெனவே நிரூபணமாகியிருக்கிறது.

அப்படியிருந்தும், மீண்டும் அதே தவறைச் செய்யத் துணிந்துள்ளார் மூப்பனார். எந்த கட்சியின் உறவை ஏற்க தார்மிக அடிப்படையில் மறுத்து, காங்கிரஸிலிருந்து வெளியேறினாரோ, அதே கட்சிக்குத் தேர்தலில் வெற்றி தேடித்தர சிவப்புக் கம்பளம் விரித்திருக்கிறார்!

'தி.மு.க-பி.ஜே.பி கூட்டணிக்கு எதிராக மதச்சார்பற்ற கூட்டணி அமைக்க அ.தி.மு.கவுடன் இணைந்தால் தவறில்லை'; 'ஊழலைக் காட்டிலும் மத அடிப்படைவாதம் அபாயமானது'; 'ஜெ. செய்த தவறுக்கு ஏற்கெனவே தண்டனை அனுபவித்துவிட்டார்' என்றெல்லாம் கடந்த ஓராண்டு காலமாக தமது செய்கைகளை நியாயப்படுத்தி வந்தார் மூப்பனார். இவையெதுவும் அவருக்கு இந்த சட்டமன்றத் தேர்தல் நேரத்தில் உதவவேயில்லை.




தாம் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்ற பிடிவாதத்துடன் தொகுதிப் பங்கீடு விஷயத்தில் கறாராக இருக்கிறார் ஜெயலலிதா. வேறு வழியின்றி காங்கிரசுடன் மீண்டும் கைகோத்து மூன்றாவது அணி அமைக்கும் கட்டாயத்துக்கு உள்ளாகியிருக்கிறது த.மா.கா.

கடந்த சட்டமன்றத் தேர்தலில் தி.மு.கவின் ஆதரவு கட்சியாக விளங்கி, பெருமைக்குரிய வெற்றியை அடைந்த த.மா.கா., ஐந்து வருடங்களுக்குள் இவ்வாறு திசைமாறி பின்னடைவைத் தேடிக் கொண்டிருப்பது தமிழ்நாட்டின் துரதிர்ஷ்டமே!

தேசிய நோக்குடைய தலைவர்கள் அடங்கிய கட்சி த.மா.கா. ஊழல் குற்றச்சாட்டுகளால் கறை படியாதது. ஜாதி-இன சித்தாந்தம் என்ற பெயரில் குறுகிய பார்வைகளில் கட்டுண்டு போகாதது. அத்தகைய கட்சி தமிழகத்தில் சிறப்பாக வளர்ச்சியுறுவது இம்மாநிலத்துக்கும் அதன் எதிர்காலத்துக்கும் மிக முக்கியம்.

ஆனால் தாமதமான முடிவுகளும் தவறான முடிவுகளும் அக்கட்சியைப் பின்தங்கச் செய்துவிட்டன. மூப்பனார் யோசனையிலும் தயக்கத்திலும் கழித்த நேரத்தில், ராமதாஸ் முந்திக் கொண்டு போய் அ.தி.மு.கவுடன் இணைந்துவிட்டார். இதனால் த.மா.கா. உதவி இல்லாமலே அ.தி.மு.க. பலப்பட்டுவிட்டது. த.மா.கா. கோரும் தொகுதிகளைக் கொடுக்க முடியாது என்று தைரியமாக மறுக்கும் நிலையில் இருக்கிறது. 'காங்கிரசும் த.மா.காவும் சேர்ந்து உழைக்கத் தயார்' என்ற அறிவிப்பைச் சாதகமாக்கிக் கொண்டு அவற்றை ஒரே கட்சியாக பாவித்து, 35 தொகுதிகள் ஒதுக்கினார் ஜெ. காங்கிரஸோ, தனக்கு மட்டுமே 65 இடங்களைக் கேட்கிறது.

இத்தனைக்கும் காங்கிரஸில் ஏகப்பட்ட கோஷ்டிப்பூசல்கள். அப்படிப்பட்ட ஒரு கட்சியைச் சேர்த்துக் கொள்வது கூட்டணியைப் பலப்படுத்துவதற்குப் பதில் பலவீனப்படுத்தவே செய்யும் என்பது மூப்பனாருக்குத் தெரியாதா? இந்த சோகை பிடித்த கூட்டணியினால் தி.மு.க, அ.தி.மு.க என்ற இரண்டு பலமான அணிகளை எவ்வாறு சமாளிக்க முடியும்?



தி.மு.க., அ.தி.மு.க-இரு அணிகளுக்குமே பெரும்பான்மை கிட்டாது; அத்தகைய சந்தர்ப்பத்தில் தனது கை வலுக்கும் என்று த.மா.கா. கணக்கிட்டிருக்குமேயானால் அது மிகத் தவறான கணக்கு!

காங்கிரசுடன் இணைந்தோ அல்லது தனி அமைப்பாகவோ த.மா.கா. தமிழகத்தில் காலூன்ற வேண்டுமானால் எதிர்கொள்ள வேண்டிய முதல் கட்சி அ.தி.மு.கதான். தி.மு.கவுடன் சேர்ந்து அ.தி.மு.கவை ஓரங்கட்டிய பின்னர்தான் தி.மு.கவையும் ஜெயித்து தனியாட்சி அமைப்பது குறித்து யோசிக்கலாம். இப்படியொரு செயல்திட்டம் வகுக்கப்பட்டிருப்பின் அது தார்மிக ரீதியிலும் சரி, அரசியல் நோக்கிலும் சரி, பாராட்டுக்குரியதாக இருந்திருக்கும்.

ஆனால், இன்று த.மா.காவின் நிலை பரிதாபத்துக்குரியதாக இருக்கிறது. வரவிருக்கும் சட்டமன்றத் தேர்தலில் மூன்றாவது அணி மூக்குடைபட்டு நிற்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

தி.மு.கவுடன் கூட்டணி கொள்ள மூப்பனார் அதிகாரபூர்வமாக எந்த முயற்சியும் செய்யவில்லை என்பதும் தெளிவாகியிருக்கிறது. 'த.மா.கா பொதுச் செயலாளர்களில் ஒருவரான அழகிரி, தி.மு.க. வட்டாரங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியது அதிகாரபூர்வமாக அல்ல' என்று மூப்பனாரே அறிவிக்க, இனி த.மா.காவுக்குத் தாம் காத்திருக்கப் போவதில்லை என்று தெளிவுபடுத்திவிட்டார் கருணாநிதி.

மூப்பனார் போன்றொரு தலைவர், இவ்வாறு சந்தேகத்துக்கிடமின்றித் தோல்வியைத் தழுவுகிற ஒரு முடிவை எடுத்திருப்பது விஷயமறிந்த வாக்காளர்களிடையே வேதனையையே ஏற்படுத்தும்.

கடும் தோல்வியைச் சந்திக்கப்போகும் தொண்டர்களும் சோர்ந்து போவார்கள். ○

மௌனம் கலையுமா?



"ரஜினி என்ன செய்யப் போகிறார்?" தேர்தலுக்குத் தேர்தல் எழும் இந்தக் கேள்வி இப்போதும் ஒலிக்கத் துவங்கிவிட்டது. "அவர் மௌனமாகி விடுவார். தேர்தலின்போது சென்னையிலேயே இருக்க மாட்டார்", "கலைஞரும், மூப்பனாரும் பிரிந்திருக்கும் பட்சத்தில், மனசாட்சிப்படி தமது ரசிகர்களை வோட்டுப் போடச் சொல்வார்.", "அவர் எப்படி முடிவெடுத்தால் என்ன? முன்பிருந்த செல்வாக்கு அவருக்கு இப்போது இல்லை" - இப்படி அரசியல் பிரமுகர்கள் மத்தியிலும் பத்திரிகைகளிலும், ரஜினி பற்றிய செய்திகள், ஊகங்கள், அடிபட்டுக் கொண்டிருக்கின்றன.

"1996 சட்டமன்றத் தேர்தலில் மிகவும் தெள்ளத் தெளிவாக "அந்தம்மா மீண்டும் ஆட்சிக்கு வந்தால் தமிழ்நாட்டை ஆண்டவனாலும் காப்பாற்ற முடியாது" என்று ரசிகர்களுக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் வழிகாட்டிய சூப்பர் ஸ்டார், இந்தத் தேர்தலில் மௌனமாக இருந்து விடக் கூடாது. காரணம், ஐந்தாண்டு காலம் தமிழகத்தை இருளில் மூழ்கடித்த ஜெயலலிதா தாம் மீண்டும்

ஆட்சிப் பொறுப்புக்கு வந்துவிடப் போவதாக ஒரு தோற்றத்தை உருவாக்கி இருக்கிறார். அவர் மேல் போடப்பட்டுள்ள வழக்குகள் அரைக் கிணறு தாண்டிய நிலையில் இருக்கின்றன. இந்த நிலையில் அவர் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் மக்களுக்கு, நீதி, நியாயம், ஜனநாயகம் ஆகியவற்றின் மீதுள்ள நம்பிக்கை போய்விடும். எனவே இப்போது தான் ரஜினிகாந்துக்குப் பொறுப்பு அதிகமாகியிருக்கிறது. தார்மிக ரீதியாக இந்தத் தேர்தலிலும் அவர் ஜெயலலிதாவுக்கு எதிராக தமது கருத்தைத் தைரியமாகச் சொல்ல வேண்டும். அப்படிச் சொல்லாமல் மௌனம் காத்தால், கடமையிலிருந்து நழுவியவர் ஆவார்" என்கிறார்கள் நடுநிலையாளர்கள்.







'ரஜினி என்ன நினைக்கிறார்' என்பதை அறிந்து கொள்ள அவருக்கு நெருக்கமானவர்களைத் தொடர்பு கொண்டோம். 'நான் எங்கிருக்கிறேன்' என்று யாருக்கும் சொல்லக்கூடாது என்ற கண்டிப்பான உத்தரவுடன் பெங்களூர், ஹைதராபாத் பகுதிகளில் இடம் மாறி மாறித் தங்கி வருகிறாராம் ரஜினி. இந்நிலையில் அவருக்கு நெருக்கமானவர்கள் பதில் சொல்லத் தடுமாறுவதில் ஆச்சர்யம் இல்லை.

தமிழ்நாட்டில் கிட்டத்தட்ட இருபதாயிரம் ரஜினி ரசிகர் மன்றங்கள் இருக்கின்றன. ஒரு மன்றத்தில் சராசரி நூறு உறுப்பினர்கள் என்றால்கூட கிட்டத்தட்ட இருபது லட்சம் ரஜினி ரசிகர்கள் இருக்கிறார்கள். தேர்தல் நெருங்க நெருங்க ரஜினிக்கு துடிப்பு அதிகமாகிறதோ என்னவோ, அவரது ரசிகர்களுக்கு நாடித் துடிப்பு எகிறுகிறது. "தலைவர் என்ன செய்யப் போகிறார்?" இதுதான் அவர்களின் கேள்வி.

காலை ஐந்து மணி முதற்கொண்டு கோபாலபுரத்தில் உள்ள ரசிகர் மன்றத் தலைவர் சத்தியநாராயணா வீட்டிற்கு முடிச்சு, முடிச்சாக வருகிறார்கள் ரஜினி ரசிகர்கள். பலவிதமான உதவிகள் கேட்டு வரும் அவர்களிடம் இதமாகப் பேசி முடிந்ததைச் செய்து அனுப்புகிறார்கள். தமிழ்நாட்டில் எந்த மூலையில் ரஜினி ரசிகர் திருமணம் நடந்தாலும் தேதி கொடுத்திருந்தால் தட்டாமல் சென்று ஆஜராகி விடுகிறார் சத்தியநாராயணா. அப்படிச் செல்லும் இடங்களில், துடிப்புள்ள ரசிகர்கள் 'ஏதாவது வழிகாட்டச் சொல்லுங்க... இல்லாவிட்டால் எங்களைச் சில அரசியல் கட்சிகள் பகடைக் காய்களாகப் பயன்படுத்திக் கொள்ளும் ஆபத்து உண்டு' என்று வெளிப்படையாகச் சொல்கிறார்களாம்.

எல்லோரையும் பொறுமையாக இருக்கச் சொல்கிறார் சத்தியநாராயணா. "ரசிகர்கள் முதலில் அவர்களது பெற்றோர்களையும் குடும்பத்தையும் கவனிக்க வேண்டும். இதுதான் ரஜினி சாரின் ஆசை" என்பேன் அவர்களிடம்.

"ரஜினி சார் என்ன செய்வார்? என்ற கேள்விக்கு நான் பதில் சொல்லக்கூடாது. அப்படி ஏதாவது சொன்னால் அது தவறாகவும் யூகத்தின் அடிப்படையிலும் அமைந்துவிடும். எனது வேலை ரசிகர் மன்றங்களைக் கவனிப்பது. ரஜினி சார் ஏதாவது முடிவெடுத்து எங்களிடம் சொன்னால் அவரது உத்தரவுபடி செயல்படுவோம்" என்று நம்மிடம் சொன்னார் சத்தியநாராயணா.

மக்களின் எண்ண ஓட்டமும் ரஜினியின் உணர்ச்சிக் கொந்தளிப்பும் 1996

தேர்தல் சமயத்தில் சரியாகப் பொருந்தி வரவே, அவரது பேச்சு கிளிக் ஆகிவிட்டது. 'பாட்சா' படவிழாவில் வெடிகுண்டு கலா சாரம் பற்றி கண்டித்து, "தில்லியை விலைக்கு வாங்கலாம். தமிழ்நாட்டை விலைக்கு வாங்க முடியாது" என்று ஜெயலலிதா ஆணவத் திற்கு முடிவு கட்டும் வகையில் பேசியதை மறக்க முடியுமா? அதே சமயம் 1998 பாராளு மன்றத் தேர்தலில் கோவை குண்டு வெடிப்பையொட்டி நடந்த தேர்தலில், ரஜினி சொன்னக் கருத்து மக்கள் கருத் தோடுப் பொருந்தி வரவில்லை. எனவே 1999 பாராளுமன்றத் தேர்தலில் ரஜினி அதிகம் பேசவில்லை. "அடிக்கடி தேர்தல் வருவது நாட்டுக்கு நல்லதல்ல. நல்லாட்சி, நிலையான ஆட்சி வர வோட்டுப் போடுங்கள்" என்று பட்டும் படாமலும் சொன்னார் ரஜினி.

"இப்போது சட்டமன்றத் தேர்தலும் வந்துவிட்டது. 1996ல் அவர் ஜெயலலிதாவை எதிர்த்து மேற்கொண்ட நிலையை மீண்டும், தொடர்வதற்கான காரணங்கள் அப்படியே இருக்கின்றன'' என்று சொல்கிறார்கள் தி.மு.க. பிரமுகர்கள். ரஜினி நேரிடையாக தி.மு.க.வை ஆதரிக்க வேண்டும் என்ற 'சின்ன' ஆசை அவர்களுக்கும் இருக்கிறது. "ஜெயலலிதா விட்டுப் போன குப்பையைச் சரி செய்யவே கலைஞருக்கு ஐந்து வருடம் ஆகும். கலைஞர் இருக்கிற வரைக்கும் அவர் தான் சி.எம்." என்று 1996ல் ஒரு திரையுலக நிகழ்ச்சியில் ரஜினி பேசியதை நினைவு கூர்கிறார்கள் அவர்கள்.


ரஜினி ஊரிலிருக்கும்போது ஆற்காடு வீராசாமி, ஸ்டாலின் ஆகியோர் அடிக்கடி அவரைச் சந்தித்து விவாதிக்கிறார்கள். 'ஏதேனும் செய்ய வேண்டுமா!' என்று பரிவுடன் விசாரிக்கிறார்கள். ராகவேந்திரா கல்யாண மண்டப நிலப் பிரச்னையின் போது தி.மு.க. தரப்பிலிருந்து உதவிக் கரங் கள் நீள, நாசூக்காக அதை மறுத்து 'கோர்ட் டில் நீதி கிடைக்கும்' என்று சொல்லிவிட் டார் ரஜினி. தமது குடும்பத்தாருக்கும், நெருக்கமானவர்களுக்கும், அரசிடமிருந்து சிபாரிசுகள், சலுகைகள் எதையும் பெறக் கூடாதென்று கண்டிப்பான உத்தரவு போட்டிருக்கிறாராம்.


ரஜினிக்கு மிக நெருக்கமான ஆர்.எம். வீரப்பன்கூட, ரஜினி என்ன மன ஓட்டத்தில் இருக்கிறார் என்று சொல்ல முடியாத நிலை யில் இருக்கிறார். "அவருக்கு நெருங்கியிருக் கும் ஒரே காரணத்திற்காக நான் அவரது முடிவுகள் தெரியாத நிலையில் அவரது நிலைப்பாட்டைப் பற்றிப் பேசுவது சரியா காது" என்று மறுக்கிறார் ஆர்.எம்.வீ. 1996ல் ரஜினியை மையப்படுத்தி, ஜெயலலிதா எதிர்ப்பு அலையை ஒருமுகப்படுத்தியதில் ஆர்.எம்.வீக்குப் பெரும் பங்கு உண்டு.


வெளியூர்களில் சுற்றிக் கொண்டிருந் தாலும் தமிழ்நாட்டில் நடக்கும் அரசியல் நிகழ்வுகளைப் பற்றி அன்றாடம் சத்திய நாராயணாவிடம் கேட்டுத் தெரிந்து கொள் கிறார் ரஜினி. தம்மை பற்றி வரும் ஊகங் களைக் கண்டு மெல்லியதாக புன்னகைப் பாராம். எந்தவித தயக்கமுமில்லாமல் அவர் சந்திக்கும் ஒரு பிரமுகர் சோ. ஆனால் அவ ருடன் பல விஷயங்களை விவாதித்தாலும் அவரால் தாம் நிலை மாறாமல் கவனமாக இருக்கிறார் ரஜினி. 'சோ'வின் விருப்பம், 'ரஜினி, இந்தத் தேர்தலில் எந்த வித கருத்தும் தெரிவிக்கக் கூடாது, நடுநிலை வகிக்க வேண்டும்' என்பது. ஆனால் ரஜினி தமது நிலை சம்பந்தமாக அவரிடம் சொல்வ தில்லையாம்.


"த.மா.கா.வையும் தி.மு.க.வையும் இந்தத் தேர்தலையொட்டி மீண்டும் இணைத்து வைக்கும் முயற்சியை ரஜினி எடுத்திருக்க வேண்டும். ஆனால் அவருக்கு நெருங்கிய வர்கள் த.மா.கா. - தி.மு.க. உறவை வெட்டி விடுவதற்கு உண்டான வாதங்களையே அவரிடம் சொல்லியிருக்கிறார்கள். த.மா.க. தி.மு.க.வுடன் இருந்திருந்தால், 1996 நிலையை ரஜினி எடுப்பதற்கு வசதியாக இருந்திருக்கும். ரஜினி இருப்பதால் வெற்றி நிச்சயம் என்று நாங்களும் தயங்காமல் தி.மு.க. அணியில் இணைந்திருப்போம். இப்போது நாங்கள் தனியாகவோ அல்லது ஜெயலலிதாவோடு கூட்டு சேர்ந்தோ அவரது ஆதரவை எப்படி எதிர்பார்க்க முடியும்" என்று கேட்கிறார் த.மா.கா. பிரமுகர் ஒருவர்.

ஆனால் ரஜினி எடுக்க வேண்டிய நிலை யைப் பற்றி வெளிப்படையாகப் பேச த.மா.க.வினர் தயங்குகிறார்கள். "ஜனநாய கத்தை வலுவூட்டுவதில் ஒவ்வொரு குடி மகனுக்கும் பங்கு உண்டு. அதிலும் ரஜினி போன்று மக்களி டம் செல்வாக்கு பெற்றவர்களுக்குப் பாராளுமன்ற ஜன


• ராதாரவி


• பீட்டர் அல்போன்ஸ்


• ஆர்.எம்.வீ.


• சத்தியநாராயணா

நாயகத்தைக் கட்டிக் காப்பதில் நிறையவே பொறுப்புண்டு" என்று சொல்கிறார் பீட்டர் அல்போன்ஸ்.

ரஜினி பற்றி ரொம்பவும் அலட்டிக் கொள்ளாமல் இருக்கிறது அ.தி.மு.க. 'ரஜினி எந்த நிலை எடுத்தாலும் எங்களுக்குக் கவலை இல்லை. நாங்கள் மீண்டும் ஆட்சியைப் பிடிப்பதை யாராலும் தடுக்க முடியாது' என்கிறார்கள் அவர்கள். ரஜினி பேச்சு இனி தமிழ்நாட்டில் எடுபடாது என்பது அவர்கள் வாதம்.

"ரஜினி தமது 'சொல்'வாக்கால், தமது செல்வாக்கை இழந்துவிடக்கூடாது. இப்போதிருக்கும் கட்சிகள், தலைவர்கள், பற்றி ரஜினிக்கு நன்றாகவே தெரியும். எனவே அவருக்கு அரசியலில் ஆர்வம் இருக்குமென்றால் தனிக்கட்சி துவங்குவது தான் நல்லது" என்கிறார் நடிகர் ராதா ரவி.

'1996ல் ரஜினிக்கு நல்ல வாய்ப்பு கிடைத்தது. அப்போது கிடைத்த வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டு தனிக்கட்சித் துவங்கியிருந்தால் நிச்சயம் பலன் கிடைத்திருக்கும். 'he has missed the bus' என்று சொல்பவர்களும் உண்டு. இனி அவர் பொறுமையைக் கையாள வேண்டும். வரும் தேர்தலுக்குப் பின் உருவாகும் நிலையை வைத்து அடுத்த அடியை எடுக்கலாம் என்பதும் சில ரஜினி ரசிகர்களின் கருத்தாக இருக்கிறது.

"தலைவர் படம் 'படையப்பா' திரையிடப்பட்டு ஒரு வருட காலத்திற்கும் மேலாகிறது. அடிக்கடி வரும் தேர்தலால் வில்லங்கத்தில் மாட்டாதிருக்க எங்கள் தலைவர் தலைமறைவாகி விடுகிறார். இதனால் அவரது படங்களின் தயாரிப்பு தள்ளிப் போய் விடுகிறது" என்று கவலைப்படுகிறார் ரஜினியின் தீவிர ரசிகரான 'ரஜினி' கண்ணன்.

இந்த நிலையில் ரஜினி என்ன செய்யப் போகிறார்? என்ற ஊகங்கள் தொடர்கின்றன. த.மா.கா.வும், ஜெயலலிதாவும் ஒன்று சேரும் பட்சத்தில் கடைசி நிமிடத்தில் ஆபத்பாந்தவனாக தி.மு.க.வுக்கு ரஜினி கைகொடுக்கக் கூடும் என்ற எதிர்பார்ப்பும் தி.மு.க.வில் உண்டு.


"நான் யாரோட பாதையிலும் போக விரும்பவில்லை. நான் போகும் இடமெல்லாம் பாதையாகணும்" என்று ஒரு படத்தில் ரஜினி வசனம் பேசுவார். அவரது அரசியல் நிலைப்பாடு பற்றி இந்த வசனம் மறைமுகமாக ஏதாவது உணர்த்துகிறதா?

- சஞ்சயன்


படங்கள் : ராஜன்

அட்டை வண்ணப்படம் : யோகா


நடக்குமென்பார் நடக்கும்!




மேஷம் : எடுத்த காரியம் வெற்றி அடையணும்னு ராப்பகலா உழைப்பீங்க, ஆனால் மனசு மட்டும் சஞ்சலப்பட்டுக்கிட்டே இருக்கும். உறவினர்களும் நண்பர்களும் உங்களுக்குத் துணை நிற்பாங்க, கவலைப் படாதீங்க. அம்மா உடம்பை பத்திரமா கவனிச்சுக்கங்க. மாணவர்கள் படிப்பில் முழு கவனம் செலுத்துங்க. இதுதான் உழைக்க வேண்டிய நேரம். பணநடமாட்டத்தைப் பொறுத்தவரை எந்தப் பிரச்னையும் இருக்காது. கல்யாணம், காட்சின்னு மங்களகரமான நிகழ்ச்சிகளில் பங்கேத்துக்குவீங்க.



ரிஷபம் : நல்லவர்களோட உறவை, நட்பை பலப்படுத்திக்கிட்டு அவங்களோட ஆலோசனைப்படி நடக்கறதுதான் உங்களுக்கு நல்லது. கெட்ட சகவாசத்தை எல்லாம் தூர தூக்கிப் போட்டுடுங்க. வெளியூர்ப் பயணம் எல்லாம் அப்புறம் பார்த்துக்கலாம். மனசில் சலனம் இருந்துக்கிட்டே இருக்கும். எடுத்த காரியத்தை நினைத்தபடி செயலாக்க முடியாமல் குறுக்கீடுகள் வந்துக்கிட்டே இருக்கும். தெய்வத்தின் மேல் எல்லா பாரத்தையும் போட்டுட்டு உங்க கடமையை செஞ்சுக் கிட்டே போங்க.




மிதுனம் : எதிரிகள் எல்லாம் காணாமல் போய், கோர்ட் கேஸ் விஷயங்களில் நல்ல திருப்பம் ஏற்படும். இதுவரை இருந்த பிரச்னைகள் விலகி மனசில் துணிவும் தன்னம்பிக்கையும் பிறக்கும். புது நபர்களோடு பழகும் போது கொஞ்சம் ஜாக்கிரதையாகவே பழகுங்க. கைப்பொருளைப் பத்திரமாகப் பார்த்துக்கங்க, ஏமாறப் போறீங்க. கணவன் - மனைவி உறவில் சின்னச் சின்ன சலசலப்பு இருந்துக்கிட்டே இருக்கும். விட்டுக் கொடுத்து நடந்துக்கங்க. பெண்களுக்கு மனசுக்கு இனிமையான சம்பவங்கள் நடக்கும்.



கடகம் : உங்கள் எண்ணங்கள், ஆசைகள் எல்லாம் நிறைவேறுகிற நேரம் வந்தாச்சுங்க. நண்பர்கள், முக்கியமானவங்க எல்லாம் உதவுவதற்கு ஓடி வருவாங்க. பணம் தாராளமாய்ப் புழங்கும், அதிர்ஷ்ட வாய்ப்பு கூட அடிக்கலாம். புது சொத்து ஏதாவது வாங்கறதுக்குச் சான்ஸ் இருக்கு. கணவன் - மனைவி உறவு தெளிந்த நீரோடையாக இருக்கும். ஆன்மிக விஷயத்தில் நாட்டம் அதிகமாகும். குடும்பத்தில் சுபகாரியம் நடக்கும். உடம்பை ஜாக்கிரதையாகப் பார்த்துக்கங்க, உஷ்ணம் சம்பந்தப்பட்ட பிரச்னைகள் ஏற்படலாம்.





சிம்மம் : இந்த வாரம் எல்லாமே நல்ல பலன்கள்தான்னு சொல்ல முடியாது. ஆனால் நண்பர்களும் உறவினர்களும் உதவிக் கையை நீட்டுவாங்க. குடும்பத்தில் மகிழ்ச்சி, குதூகலம் நிலவும். உங்க பேச்சே 'ஸ்வீட்'டாக இருக்கும். மாணவர்களோட எண்ணங்கள் நிறைவேறிடும். திறமை, உழைப்பு எல்லாம் வீண்போகாது. பெண்கள் ஆசைப்பட்ட காரியம் ஒன்று நடக்கப் போகுது. பணம் தாராளமாகப் புழங்கும். அதுக்காக 'கன்னாபின்னா'ன்னு செலவழிக்காதீங்க. புது முயற்சிகள் எல்லாம் அப்புறம் பார்த்துக்கலாமே?



கன்னி: எடுத்த காரியமெல்லாம் ஜெயம்தான் போங்க. எல்லாருடைய பாராட்டும் வந்து குவியப் போகுது. சாதனைகள் செய்ய சந்தர்ப்பம் கூடி வரப் போகுது. புத்திசாலித்தனமாகப் பயன்படுத்திக்கங்க. பண விஷயத்




"என் மனைவி என்னை அப்படியே தாங்கறா."

"உன் மேல் அவ்வளவு அன்பா?"


"ம்...ம்... சம்பளத்தை அப்படியே 'தா'ங்கறா...!"

— சாயம் வெ. ராஜாராமன்


தில் ஒரு திடீர் வளர்ச்சி இருக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி அலை வீசும். பாக்கி இருக்கிற தெய்வப் பிரார்த்தனைகள் எல்லாம் செஞ்சு முடிச்சிடுவீங்க.




துலாம் : உங்களுக்கு நிறையப் பிரச்னைகள் வரப் போகுதுங்க, ஆனால் பக்குவமாக நடந்துக்கிட்டீங்கன்னா எதையும் சமாளிச்சிடலாம். பதற்றமோ அவசரமோ படாதீங்க. உங்க வீட்டு ஸ்வீட்டில் இனிப்பு இருக்கோ இல்லையோ உங்க பேச்சில் அது நிச்சயம் இருக்கணும். யார் மனசையும் நோகடிக்காதீங்க. புது முயற்சிகளில் இறங்குவதற்கு இது சரியான நேரம் இல்லைங்க. சின்னச் சின்ன பிரச்னைகள் தலை தூக்கிக்கிட்டே இருக்கும். வேலையில் இருக்கிறவங்க மேலதிகாரிகளை அனுசரிச்சு நடந்துக்கங்க. பணம் நிலைமை 'ஓஹோ'ன்னு இருக்காது.




விருச்சிகம் : உங்க மதிப்பும் செல்வாக்கும் 'ஜிங்'குனு ஏறப் போகுது. நல்ல மனசுக்காரங்க உங்களுக்குப் பக்கபலமாக இருக்கப் போறாங்க. மனசில் தன்னம்பிக்கையும் உறுதியும் கூடி அசுர வேகத்தில் செயல்படுவீங்க. எடுத்த காரியத்தை முடிக்கிற வரைக்கும் உட்காரவே மாட்டீங்க. மாணவர்களுக்கு வெற்றி மேல் வெற்றிதான் போங்க. துணிமணி, நகை, நட்டுன்னு ஏதாவது வாங்குவீங்க, குடும்பத்தாருடைய சந்தோஷத்துக்குக் கேட்கவா வேணும்?



தனுசு : உங்க பொருளாதார நிலைமை 'ததிங்கிணதோம்'தான். செலவு கட்டுக் கடங்காமல் போய் எங்கேயோ நிற்கப் போகுது. கைப்பொருள் ஜாக்கிரதை. எந்த கொடுக்கல் வாங்கல் விஷயமானாலும் ஒரு தடவைக்கு இரண்டு தடவை யோசிச்சு செய்யுங்க. பசங்க வேற பிரச்னை பண்ணிக்கிட்டே இருப்பாங்க. உங்க உடல்நலம் பாதிக்கப்படலாம், எச்சரிக்கையா இருந்திட்டா கவலை இல்லை. கோபப்பட்டா காரியம் கெட்டுடும், நிதானமாக நடந்துக்கங்க. பெரியவங்க பேச்சைக் கேட்டு நடங்க, அவங்க அனுபவத்தை விட பெரிய வழிகாட்டி ஏதாவது இருக்க முடியுமா?



மகரம் : உங்க முக்கியமான திட்டமெல்லாம் வர்க்-அவுட் ஆயிடும். அதுவே மனசுக்கு துணிவையும் தன்னம்பிக்கையையும் கொடுத்திடும். எடுத்த காரியத்தைத் திறமையா செஞ்சு அதில் வெற்றியும் அடைஞ்சிடுவீங்க. புது சொத்துக்களை வாங்கறதுக்குக் கூட சான்ஸ் இருக்கு. பிள்ளைகளால் பெற்றோர்களுக்கும், பெற்றோர்களால் பிள்ளைகளுக்கும் பரஸ்பரம் நன்மை உண்டாகும். வாரக் கடைசியில் செலவுகள் அதிகமாகப் போகுது. இப்பவே சிக்கனமாக இருந்தால்தான் அப்ப நிலைமை கையைக் கடிக்காமல் இருக்கும்.



கும்பம் : மனசில் தன்னம்பிக்கையும் துணிவும் அதிகரிச்சு, உங்க மதிப்பும் அந்தஸ்தும் எங்கேயோ உயரப் போகுது. நீங்கள் வேலை இல்லாதவரா? நிச்சயம் வேலை வாய்ப்பு கூடி வரும். வேலையில் இருப்பவரா - கண்டிப்பாக ஊதிய உயர்வு உண்டு. பக்தி விஷயத்தில் உங்களுக்கு ஈடுபாடு ஜாஸ்தி ஆகி மனசில் தெளிவு பிறக்கும். எல்லாரும் மூக்கில் விரல் வைக்கிற மாதிரி சில விஷயங்களை செஞ்சு முடிப்பீங்க. விருந்து, உபசாரம், டூர், உல்லாசம்னு ஜமாய்ப்பீங்க. ஆனால் வாரத்தோட பின் பகுதியில் சில எதிர்பாராத செலவுகள் வந்திடும். சிக்கனத்தைக் கடைப்பிடியுங்க.



மீனம் : சின்னச் சின்ன குழப்பங்கள் இருந்துக்கிட்டே இருக்கும். அதனால் எதிலேயும் ஒரு பெரிய வளர்ச்சி இருக்கும்னு எதிர்பார்க்காதீங்க. பணம் கொடுக்கல் வாங்கலில் உஷார். ஏமாறுவதற்கு நிறையவே சான்ஸ் இருக்கு. பெரியவங்க சொல்ற பேச்சைக் கேட்டு நடந்துக்கங்க. எதிலும் பதற்றமோ அவசரமோ கூடாது. வெளிநாட்டிலிருந்து ஒரு குட் நியூஸ் வரலாம்! ஆன்மிக விஷயத்தில் திடீர்னு உங்களுக்கு ஆர்வம் ஜாஸ்தியாகப் போகுது! ○



அருள்மிகு விசாலாட்சி ஸமேத விஸ்வநாதர் ஆலயம், கூந்தலூர் – 609 501.

திருப்பணி கைங்கர்ய பத்திரிக்கை

புண்ணிய பூமியாகிய இப்பரத கண்டத்திலே எங்கும் பிரகாசமாய் விளங்கும் ஸர்வேச்வரனான சிவபெருமான் தம்மை ஆன்மாக்கள் தரிசித்து உய்யும் பொருட்டு திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் பற்பல அற்புதஸ்தலங்களில் ஒன்றாக சிறந்து விளங்குவது கூந்தலூர். சிறந்த புண்ணிய க்ஷேத்ரமாக விளங்கும் கும்பகோணத்திற்கு கிழக்கும், சமயக்குரவர்கள் நால்வராலும் புகழ்ந்து பாடப்பட்ட திருவீழிமிழலைக்கு மேற்கும், தென்காசி க்ஷேத்திரம் என்று போற்றப்படும் ஸ்ரீ வாஞ்சியத்திற்கு வடக்கும், திருநல்லம் என்று தேவாரத்தில் குறிப்பிடப்படும் கோனேரிராஜபுரத்திற்கு தெற்குமாக மையங்கொண்டு விளங்கும் கிராமம் கூந்தலூர்.

ஸ்ரீஇராமர், லெக்ஷ்மணன், சீதாதேவி இவர்கள் பரத்வாஜர் ஆஸ்ரமம் செல்லும்போது இவ்வூர் குளத்தில் நீராடிச் சென்றதாக ஐதீகம்.

ஸ்ரீகாஞ்சி காமகோடி மடத்தில் ஸ்ரீ சங்கராச்சாரிய ஸ்வாமிகளுக்கு ஆசானாக விளங்கிய ஸ்ரீ ராம்கிருஷ்ணசாஸ்திரிகள் பிறந்த ஊர் கூந்தலூர். 18 கிராம வாத்யம கிராமங்களுக்கும் தலைக்கிராமமாகும். இத்தகைய **கூந்தலூர் கிராமத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ விசாலாட்சி அம்பிகா ஸமேத ஸ்ரீ விச்வநாதர் ஆலயத்திற்கு** இறையருள் நற்பணி மன்றம், மற்றும் கூந்தலூர் கிராமவாசிகளாலும் இறையருளையும் சிவனடியார்களின் நல்லாசிகளையும் துணையாகக் கொண்டு திருப்பணி செய்து குடமுழுக்கு நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. தாங்கள் இந்த பூர்த்த தர்மத்துக்கு உதவி இறைவனின் அருளைப் பெற வேண்டுகிறோம். மங்களம் பெருக்கும் புண்ணியதர்மம் சிவ தர்மம்.

கூந்தலூர்,
09.01.2001

இங்ஙனம்,
V. கல்யாணசுந்தரம், தலைவர்
S. ராமன், செயலர்.

பொருளுதவி அளிப்பவர்கள் இறையருள் நற்பணி மன்றம், கூந்தலூர் என்ற பெயருக்கு காசோலையோ அல்லது டிமாண்ட் டிராப்டோ எடுத்து G. ஜெயராமன், பொருளாளர், இறையருள் நற்பணி மன்றம், அக்ரஹாரம், கூந்தலூர் – 609 501. எரவாஞ்சேரி என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டுகிறோம்.

1

குறையொன்றுமில்லை

சாந்தோக்ய உபநிஷத்திலே ஒரு கதை வருகிறது - பௌர்ணமி முடிந்த மறுநாள் பிரதமையிலேயிருந்து ஆரம்பித்து, தம் சிஷ்யனுக்கு ஒவ்வொரு நாளாக ஆகாரத்தைக் குறைத்துக் கொண்டே வந்தாராம் குரு.

முதலில் மூன்று வேளை சாப்பிட்டுக் கொண்டிருந்தான் சிஷ்யன். அப்புறம் அது இரண்டு வேளை ஆயிற்று; அப்புறம் ஒரு வேளை... அதற்கப்புறம் வெறுமே கொஞ்சம் தீர்த்தம் கொடுத்தார். அதற்கப்புறம் 'ஒண்ணும் இல்லை' என்று சொல்லி விட்டார்!

அமாவாசை அன்றைக்கு முழு உபவாஸம் அவன்!

அந்த சிஷ்யனைப் பார்த்து, "ஊம்! மேலே வேதத்தைச் சொல்" என்று பணிக்கிறார் குரு!

ஒரு அக்ஷரம் கூட ஓடவில்லை அவனுக்கு. எல்லாம் மறந்தே போய் விட்டது? ஒரு சப்தம் வரவில்லை. எல்லாவற்றையும் அவ்வளவு அழகாகச் சொல்லக்கூடியவன் அவன். அப்படிப்பட்டவனுக்கு ஒன்றும் ஞாபகம் வரவில்லை.

மறுபடியும், அமாவாசை முடிந்து பிரதமையிலிருந்து ஆரம்பித்து சிஷ்யனுக்கு மெள்ள கொஞ்சம் கொஞ்சமாக அன்னத்தைக் கொடுத்துக் கொண்டே வருகிறார். பௌர்ணமி அன்றைக்கு அவனுக்குப் பூரணமாக அன்னம் இடப்படுகிறது.

"ம்! இப்போ வேதத்தைச் சொல்லு..." என்றதும் ரொம்ப அழகாகச் சொல்கிறான் அந்த சிஷ்யன்!

இப்போது புரிகிறதல்லவா...? இந்தச் சரீரம் எதனால் ஆக்கப்பட்டது என்று நன்றாகப் புரிகிறதல்லவா?

அன்னமயம் இந்த சரீரம். இதை ஜாக்கிரதையாக அன்னத்தால் வளர்க்க வேண்டியிருக்கிறது. மண்ணால் கட்டிய வீட்டை மண்கொண்டு மெழுகினால் அழகாக இருக்கும். அந்த மாதிரிதான் உடலும். பஞ்ச பூதத்தினால் ஆனது இந்த சரீரம். அதனால்தான் சரீரத்தின் சூக்ஷ்மாம்சங்கள் அடங்கிய அன்னத்தினால் அதை வளர்க்க வேண்டியதாயிருக்கிறது.

மனிதனுக்குப் பரம வைரி - விரோதி - யார் என்று கேட்கிறபோது, வேதம் சொல்கிறது :

"பசிதான் மனிதனின் முதல் விரோதி!"

'நான் சொல்கிறேன் கேட்டுக் கொள்' என்று ஆரம்பித்து விவரிக்கிறது... "பசி என்பது எவ்வளவு கொடுமை என்று உங்களுக்குத் தெரிகிறது இல்லையா...? நான் சொல்வதனால் மட்டுமே இல்லாமல் அனுபவத்தினாலே தெரிகிறது அல்லவா!..." என்று வேதம் கேட்கிறது.

அந்தப் பசியை யாரால் கட்டுப்படுத்த முடியும்? எல்லாமே மடிந்து போய்விடுகிறது பசியாலே!

ஆனால், பாருங்கள், பரீக்ஷித் மகாராஜா மட்டும் பசியே இல்லை என்கிறான்! "தாகமே இல்லை" என்று சொல்லி விட்டான்.

ஏன்...?


சுகப்ரும்ம மஹரிஷி சொல்ல, எம்பெருமானுடைய கதையைக் கேட்டுக் கொண்டிருக்கிறான் பரீக்ஷித் மகாராஜா. சுகபிரம்மர் வாக்கிலிருந்து அருவியாய் அது ஓடி வருகிறது!

கேட்கிற பரீக்ஷித் சொல்கிறான் :

"ஹரிகதாம்ருதமாகிய திவ்ய அம்ருதத்தை நான் பருகிக் கொண்டிருக்கிறேன்! எனக்குப் பசியில்லை; தாகம் இல்லை; காலம் போவதும் தெரியவே இல்லை..."

[illegible] லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

நான்காம் பாகம்



தவகதாம்ருதம் தப்த ஜீவனம்!

– தவித்துக் கொண்டிருக்கும்படியானவர்களுக்கு ஜீவனை – வாழ்வை – உண்டாக்கிக் கொடுக்கக்கூடியது எம்பெருமானுடைய சரித்திரம்.

இதைத்தான் நம்மாழ்வாரும் அனுபவித்துச் சொல்கிறார் :

உண்ணும் சோறும் பருகும் நீரும்
தின்னும் வெற்றிலையெல்லாம்
கண்ணன்

சாப்பிடுகிற சாதம் இருக்கிறதே...? அது யார் என்று கேட்டால், கண்ணன்! அதே போல் தீர்த்தம் இருக்கிறதே – தாக சாந்தி ஏற்படுத்துகிற தீர்த்தம்... அது யார் என்று கேட்டால் அதுவும் கண்ணன். தாம்பூலமெல்லாம் உள்ளதே அது யார்...? அதுவும் கண்ணன்.

– இவ்வாறு யார் யார் நினைக்கிறார்களோ அவர்களுக்கு அன்னம் எதற்கு? தீர்த்தம் எதற்கு? தாம்பூலம் எதற்கு...? எல்லாம் கண்ணனாக இருக்கும் போது இதெல்லாம் வேண்டியதேயில்லையே!

ஆனால், அவனை விட்டோமானால் இது மொத்தம் வேண்டும். கிருஷ்ணனை விட்டு விட்டோம் என்று வைத்துக் கொள்ளுங்கள், ஏகமாக பசியெடுக்கும்! அவனை நினைத்துக் கொண்டேயிருந்தால் பசி ஓடிப் போய்விடும்!

அதனால்தான் பரீக்ஷித் மகாராஜா எல்லாவற்றையும் விட்டு விட்டு, சுகபிரம்மர் வாக்கிலிருந்து அப்படியே ஓடி வருகிற எம்பெருமான் கதைகளைக் கேட்கிறான். தவகதாம்ருதம் அவன் கதைகள்!

அவன் மங்களம்; அவனை விட மங்களம் அவனுடைய கதைகள்! – இதையும் வேதமே சொல்கிறது.

விஷ்ணு கதை இருக்கிறதே – அது விஷ்ணுவைக் காட்டிலும் நம்மிடம் அன்பு கொண்டது; வாத்ஸல்யம் கொண்டது. ஆகையினால்தான் அதை நாம் ஒன்றுகூடி அனுபவிக்க முடிகிறது.

விஷ்ணுவை நாம் அனுபவிக்கப் போகிறோம் என்றால் எப்படி அனுபவிப்பது...? அவன் எப்படி இருப்பான் என்று நமக்குத் தெரியுமா...?

மஹரிஷிகள், மகான்கள், ஆசார்ய புருஷர்கள், ஆழ்வாராதிகள் அவன் பிரபாவத்தை எடுத்துச் சொல்வதனாலே அதையெல்லாம் கேட்டுக் கொண்டிருக்கிறோம்; பேசிக் கொண்டிருக்கிறோம்.

'சொல்லினால் சொல்லப்படும் பொருள் நீ; அதற்கப்பாற்பட்டவனும் நீ!' என்று அவன் தன்மையை வேதம் விவரித்து விட்டு இறுதியில் என்ன சொல்கிறது தெரியுமா...?

'இதையெல்லாம் காட்டிலும் பத்து அங்குலம் அவன் தள்ளி இருக்கிறான்' என்று சொல்கிறது!

இந்த மாதிரி சொன்னால் அவனுடைய பெருமையை நம்மால் உணர முடியுமா!? எப்படி உணர்வது? எப்படி அனுபவிப்பது?

அணுவுக்கு அணுவாய் இருக்கிறான். மிகப் பெரியதைக் காட்டிலும் பெரிதாக இருக்கிறான். அப்படியிருக்க அவனுடைய தன்மை இன்னது என்று யார் நினைக்க வல்லரே...?

திருமழிசை ஆழ்வார் அதை விவரிக்கப் போய்த் தவியாய்த் தவிக்கிறார் :

'மண்ணுளாய் கொல்!
விண்ணுளாய் கொல்!'

யக்ஞம் செய்யும்போது பிரார்த்திக்கிறார்கள் – நீ எங்கே இருந்தாலும் இப்போதே வந்து இந்த ஹவிஸை வாங்கிக் கொள் என்கிறார்கள்.

அவன் எங்கே இருந்தாலும் ஓடி வருகிறான்!

ஒருத்தருக்குச் சந்தேகம் வந்து விட்டது. டெல்லியில் ஒரு யக்ஞம் நடந்து கொண்டிருக்கிறது; கல்கத்தாவிலே நடக்கிறது, இங்கே மெட்றாஸில் நடக்கிறது, விஜயவாடாவில் மட்டபள்ளியில் நடக்கிறது.. ஒரே மந்திரம், ஒரே சமயத்தில் எல்லா இடங்களிலேயும் சொல்லும்படியான நிலை ஏற்பட்டுப் போயிற்று. ஒரே சமயத்தில் எல்லோரும் கூப்பிடுகிறார்கள். அப்போது என்ன செய்வான்...?

முதலில் டெல்லியில் வந்து இறங்கி விட்டு, அந்த யக்ஞத்தை முடித்துக் கொடுத்துவிட்டு, அப்புறம் ஒவ்வொரு

நடம்பயின்ற நாதன்!

கடம் கலந்த வன்கரி மருப்பு ஒசித்து, ஓர் பொய்கைவாய்
விடம் கலந்த பாம்பின் மேல் நடம் பயின்ற நாதனே!
குடம் கலந்த கூத்தன் ஆய கொண்டல்வண்ண! தண்துழாய்
வடம் கலந்த மாலை மார்ப! காலநேமி காலனே!

– திருமழிசை ஆழ்வார்.

இடமாகப் போய்க் கொண்டிருப்பானா...?

கிடையாது! எந்த இடத்தில் இருந்தாலும் எந்த இடத்தில் கூப்பிட்டாலும் அந்த இடத்திலே அப்படியே வந்து நிற்கிறான் பரமாத்மா. அதுதான் அவனுடைய விசேஷமான திவ்யாத்ம ஸ்வரூபம் என்று சொல்லலாம். மகான்கள் வாக்கும் உபநிஷத்களும் அப்படித்தான் சொல்கின்றன – 'திவ்யாத்ம ஸ்வரூபன்' என்று அவனைச் சொல்கின்றன.

ஆடி ஆடி அகம் கரைந்து, இசை
பாடிப் பாடிக் கண்ணீர் மல்கி, எங்கும்
நாடி நாடி நரசிங்கா! என்று
வாடி வாடும் இவ்வாள் – நுதலே

என்று நம்மாழ்வார் பாடினார்.

இதிலே 'எங்கும்' என்ற பதத்தைக் கவனிக்க வேண்டும்.

நரசிம்ஹன் தூணிலிருந்து – ஸ்தம்பத்திலிருந்துதானே வந்தான் என்று எல்லோரும் ஸ்தம்பத்தையே பார்த்துக் கொண்டிருப்பார்களாம். ஒருமுறை ஸ்தம்பத்திலேயிருந்து வந்தான். அதனால் திரும்பவும் ஸ்தம்பத்திலிருந்தே வருவான் என்று பார்க்கிறார்கள். அப்படியிருக்காதீர்கள் என்பதுதான் நம்மாழ்வார் வாக்கு – ஸ்தம்பத்தையே பார்த்துக் கொண்டிருக்காதீர்கள்.

'எங்கும் நாடி நாடி அவனைத் தேடுங்கள். அவன் சர்வவியாபி. எந்த இடத்திலேயிருந்தும் வரக்கூடும். எப்படி வேண்டுமானாலும் வரக்கூடும்...' என்கிறார்.

அப்படிப்பட்டவனின் சக்தியை நம்மால் சொல்ல முடியுமா...?

பரமாத்மாவினுடைய சக்தியானது 'விவிதைவ ச்ரூயதே' என்று சொல்கிறது உபநிஷத் – அது இப்படித்தானென்று நிர்ணயம் பண்ண யாரால் முடியும்?

அப்படிப்பட்ட ஏற்றமுடையவனை அனுபவிப்பதற்காகத்தான் அவனைப் பற்றிய கதைகளைக் கேட்கிறோம்.

நைமிசாரண்ய வனத்திலே சமஸ்த மஹரிஷிகளும் உட்கார்ந்து இதிகாச புராணங்கள் அனைத்தையும் சொன்னார்கள். வேத வேதாந்தங்களெல்லாம் பேசப்பட்ட இடம் அது. அந்த நைமிசாரண்யத்துக்குத் துல்யமாக வேறொரு இடமே இல்லை. அங்கே போனாலே ஒரு நிர்வேதம் வந்துவிடும் மனத்திலே.

வாள் நிலா முறுவல், சிறு நுதல்
பெருந்தோள்
மாதரால் வன முலைப் பயனே
பேணினேன்; அதனைப் பிழை எனக்
கருதி
பேதையேன் பிறவி நோய் அறுப்பான்.
ஏன் இலேன் இருந்தேன்; எண்ணினேன்;
எண்ணி
இளையவர் கலவியின் திறத்தை
நாணினேன்; வந்து உன் திருவடி
அடைந்தேன்
நைமிசாரண்யத்துள் எந்தாய்!

என்றார் திருமங்கை ஆழ்வார். அந்த நைமிசாரண்யத்துக்குப் போனவர் நடு நடுங்கிப் போய் விட்டார். அவ்வளவு நிர்வேதம் ஏற்பட்டுப் போயிற்று அவருக்கு – அல்பமான இந்த இந்த்ரியங்கள் படுத்தும் பாட்டிலே, அஸ்திரமான விஷயங்களில் இத்தனை நாளாக உழன்று போயிருந்தேனே... ஹே நைமிசாரண்யத்துள் எந்தாய்! என்னைக் காப்பாற்று! என்கிறார்.

அப்படிப்பட்ட நைமிசாரண்யத்தில் அவனுடைய பிரபாவங்கள் பேசப்படுகிற இடத்தில் – அடியெடுத்து வைக்கும்போதே இத்தனை வைராக்கியம் – நிர்வேதம் வருகிறது.

நிர்வேதம் என்றால், 'பழுதே பலகாலும் போயின' என்று அஞ்சி அழுதல்' இத்தனை நாள் அநியாயமாய் அவனை நினையாது வீணாகிப் போய்விட்டதே என்ற வருத்தம்.


அப்படி வருத்தப்படுவதுதான் முதல் படி. அதனால்தான் ஆழ்வார் கதறி அழுகிறார். உலக விஷயங்களெல்லாம் நிர்வேதப்பட வேண்டும். நித்யம் ஒரு ஐந்து நிமிடமாவது பிரும்ம விசாரம் பண்ணி நிர்வேதப்பட வேண்டும். இல்லாவிட்டால் மனிதன் வாழ்வு வீண் என்கிறார்.

அப்படி நிர்வேதம் ஏற்படுத்தும்படியான இடம் பகவத் பிரபாவம் ஒலிக்கிற நைமிசாரண்யம்.

அந்த இடத்தை அடைகிறபோதே இத்தனை மாற்றம் என்றால் அவன் பிரபாவத்தைக் கேட்கக் கேட்க, அவன் கதைகளைக் கேட்கக் கேட்க நமக்கு எப்பேர்ப்பட்ட உயர்வுதான் ஏற்படாது!

(வளரும்)

KALKI SHOPPING PAGE





காக்க, காக்க மயில்களைக் காக்க!

'க்கெக்கே...' என்று சப்தமிட்டுக் கொண்டு, கழுத்தைச் சாய்த்து 'கோயிலுக்கு வந்தீங்களா?' என்பது மாதிரி ஒரு பார்வை பார்த்துவிட்டுக் கூட்டமாகச் சென்று கொண்டிருக்கும் விராலிமலை முருகன் கோயில் மயில்களை இப்போது அங்கே பார்க்க முடியாது. இதற்குக் காரணம் குரங்குகளா? அல்லது மயில்கள் வேட்டையாடப்படுகின்றனவா? என்கிற சர்ச்சை விராலிமலை முழுவதும் எதிரொலிக்கிறது.

நான்கைந்து ஆண்டுகளுக்கு முன்னர் மலை முழுவதும் மயில்கள் என்றிருந்த நிலை மாறி இப்பொழுது, மலையெங்கிலும் குரங்குகள்! குரங்குகளின் ஆதிக்கம் அதிகரித்து விட்டதால் மலையில் மயில்கள் வந்து தங்குவது படிப்படியாகக் குறைந்து போய் விட்டது என்கிறார்கள் வழக்கமாக வந்து செல்லும் பக்தர்கள்.

விராலிமலை வனச்சரக அலுவலகத்தின் சார்பாக கடந்த ஐந்து ஆண்டுகளாக மயில் பாதுகாவலராக பணியாற்றி வரும் முத்தையாவைச் சந்தித்தோம்.

"மயில்களுக்கு உணவாக மலை மீது வெள்ளைச் சோளம் போடுவேன். மயில்களுக்குச் சோளம் போட்டதும் குரங்குகள் வநது அவற்றை விரட்டி விடும். அதற்காக நான் எப்போதும் ஒரு நீண்ட தடி கொண்டு குரங்குகளை

விரட்டி விட்ட பிறகே மயில்களுக்குச் சோளத்தைத் தூவவேண்டியிருக்கிறது. மூன்று நான்கு வருடமாகத்தான் இந்தக் குரங்குகளின் தொல்லை அதிகமாகி விட்டது. இதுக்கு முன்பு இந்தளவுக்குக் குரங்குகள் மலையிலே இல்லை. குரங்குகளைக் கட்டுப்படுத்திட்டா திரும்பவும் மயில்கள் இங்க வந்து தங்கும்" என்கிறார் அவர்.

பெருமளவு எண்ணிக்கையில் மயில்கள் குறைந்து வரக் காரணம் என்ன?

விராலிமலை வாரச் சந்தைக்குக் கல்குத்தான்பட்டி கிராமத்திலிருந்து வந்திருந்த பொன்னுசாமி சொன்ன தகவல் அதிர்ச்சியைத் தந்தது.

"கிராமப் பகுதிகள்ல வந்து தங்குகிற நரிக்குறவர்கள் ராத்திரி வேட்டைக்குப் போகும் போது மயில்களைச் சுட்டுட்டுப் போய்டுறாங்க. கேட்டால், மருந்துக்கு வேணும்... மயில் எண்ணெய் காய்ச்ச வேணும்ன்னு சொல்லிடறாங்க. எங்கப் பக்கத்துல மயில்களை யாரும் அசைவ உணவுக்குப் பயன்படுத்துறது இல்லே. ஆனால் திருச்சி, கரூர், கோயம்புத்தூர்லேந்து இரவு நேரத்துல மோட்டார் பைக்ல, கார்ல, வேன்ல வந்து மயில் வேட்டையாடிட்டுப் போறாங்க. நான் கூட ரெண்டு மூணு முறை வழிமறிச்சிக் கேட்டேன். 'வைத்தியத்துக்கு வேணும்... வழியெ வுடு'ன்னு மிரட்டிட்டுப் போய்ட்டாங்க" என்கிறார் இவர். வாரச் சந்தைக்கு வந்திருக்கும் பெரும்பாலான கிராமப் பகுதி மக்களின் ஒட்டுமொத்தக் கருத்தும் மேற்கூறிய வார்த்தைகளையே எதிரொலித்தன.

விராலிமலைப் பகுதியில் பெருமளவில் உலவும் குரங்குகளிடமிருந்தும், கிராமப்புறங்களில் வேட்டையாடிப் போகும் நரிக்குறவர்கள் மற்றும் வெளியூர்க்காரர்களிடமிருந்தும் மயில்களைக் காக்க, 'காப்பகம்' நிறுவுவது நல்லது என்கிறார்கள் இப்பகுதி பொதுமக்கள்.

விராலிமலையில் கோவில் கொண்ட முருகனின் வாகனமே மயில்தான் என்றபோதிலும் அவற்றுக்குப் பாதுகாப்பு இல்லாமல் போனது வேதனையான விஷயம்.

— ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு


உங்கள் வாழ்க்கையுடன்
விளையாட வேண்டாம்.
எய்ட்ஸ்
சென்னை-8
பாதுகாப்பற்ற உடலுறவு
பலபேருடன் வைத்து கொள்வதால்
எய்ட்ஸ் வர வாய்ப்பு இருக்கிறது.
ஆணுறையை பயன்படுத்துங்கள்.
எய்ட்ஸை தவிர்த்திடுங்கள்.
தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம்,
417. பாந்தியன் சாலை. எழும்பூர். சென்னை 8. தொலைபேசி 825 5467.

குப்தமாயும் இருக்கிறது

க.சீ. சிவகுமார்

மத்தியானமே ஊரில் போலீஸ்காரர்களின் நடமாட்டம் துவங்கி விட்டது. காவல் நிலையம் இல்லாத ஊர்தான் அது. அங்கு இப்படி காவலர்களின் நடமாட்டம் எப்பொழுதாவது ஏற்படுவது வாடிக்கையே. அதிலும் பதினெட்டு வயதுக்காரர்களுக்கும் வாக்குரிமை என்றானபின் இந்த வாடிக்கை சற்று எண்ணிக்கைக் கூடியிருக்கிறது. இப்படி காவலர்கள் வருகிற நாளில் இரவு ஒன்பது மணிக்கு மேல் உள்ளூர் இளைஞர்களை அவர்களது வழக்கமான இடங்களில் அமர்ந்து பேச விட மாட்டார்கள்.

"என்ன... என்னய்யா இங்கே வேலை?" என மிரட்டி அனுப்பி வைப்பார்கள்.

அவர்களுக்கு எங்கேதான் என்ன வேலைதான் இருக்கிறது. முன்னிரவில் தூங்கப் போய்விடுகிற இளைஞர்களை, நாடும் காவல் துறையும் இருகரம் உயர்த்தி ஆசிர்வதிக்கிறது.

காவலர்கள் லாரியில் வந்திறங்கியபின் ஊரிலுள்ள மூன்று தேநீர் விடுதிகளிலும் போண்டா மற்றும் தேநீர் விற்பனை அதிகரிக்கிறது. எப்போது மறுநாள் வரும் எனக் காத்திருப்பவர்கள் அடிக்கடியும் சிகரெட்டும் குடித்து ஆசுவாசம் கொள்கிறார்கள். சிலர் போலீஸ்காரர்களைப் பார்த்துப் புன்னகைக்கவும் முயற்சி செய்கிறார்கள். சிலருக்கு இடது கை ஆட்காட்டி விரலில் நமைச்சல் ஏற்படுவது போலவும் கண்ணாடிக் குழல் ஒன்று நரம்பாய் மாறி ஓடுவது போலவும் உணர்வெடுக்கிறது.

பல்லி முட்டை சைஸ் குளிகைகள் தரும் சித்த மருந்து டப்பாக் குப்பியிலிருந்து இத்தனூண்டு அழியா மை எடுத்து ஆட்காட்டி விரல் இட நகத்தில் இருக்கிக் கொண்டு ஒரு வாக்கும் அளித்தால்தான் அவர்கள் அமைதியடைவார்கள்.

போலீஸ் மட்டுமின்றி போலிங் ஆபீஸர்களும் வந்து விட்டார்கள். பெட்டிகள், பேப்பர்கள், பெயிண்டுகள், பேலட் பேப்பர்கள் (எத்தனை 'பெப்பே'யப்பா!) சகிதம். ஊரின் துவக்கப் பள்ளியில் இரண்டு வகுப்பை எடுத்து வாக்காளர் ஆ/பெ என இரண்டாய் வகிர்கிறார்கள். பிறகு வாக்குச் சாவடி எண் எழுதுகிறார்கள். அதன் கீழ் 'மாதிரி பிரம்மாண்ட வாக்குச் சீட்டு' ஒட்டப்படுகிறது.

வாக்குச் சாவடி எண் எழுதப்பட்டதும் அந்தக் கட்டடங்கள் ஆட்சி அதிகாரத்தைத் தீர்மானிக்கும் சிறிய அலகாக மாறுகின்றன.

தண்டல் தலையாரி வகையினர் மற்றும் குற்றேவலுக்கு ஆள் ஏற்படுத்தி பெஞ்சக நாற்காலிகளைப் போடுகின்றனர். கிழக்கு மேற்காக 'கட்சி ஏஜெண்ட்டுகள்' அமரும் பெஞ்ச். அவர்கள் பார்வையில் பட வாக்குப் பெட்டி. செவ்வக உண்டியல் வடிவம் உடையது. பெரும்பான்மை பீரோக்களின் நிறம் அதற்கு.

வாக்குமுத்திரை பதிக்கும் இடமோ ரகசியமானது. காக்கி அட்டையில் வளைத்த பரிமாணமுள்ள 'ப' மேஜை மேல் உயர்ந்து நிற்கிறது. வாக்குகளும் ஏக்கங்களும் ரகசியமாய்ப் பேணப்பட வேண்டியவை.

இடது கையின் பெருவிரலைப் பயன்படுத்தப் போகும் தற்குறி (எ) கைநாட்டுகளுக்காக மசியுமிழ் மெதுதுகில் (இங்க் பேடு) வைக்கப்பட்டாயிற்று. இடக்கைப் பெருவிரலுக்கு ரேகை. ஆட்காட்டி விரலுக்கு வாக்களித்த மை அடையாளம். மீதி மூன்று விரல்கள் எதன் நாமத்தாலோ விட்டு வைக்கப்பட்டுள்ளன.

ஏற்பாடுகள் நடந்தவண்ணமுள்ளன. தன்னிகரற்ற ஜனநாயகம் நமதே எனும்படிக்கான காரணங்கள் வேறு வலுத்து வருகின்றன.

வா.சா.விலிருந்து இருநூறு மீட்டர் தூரம் அளந்து போலிங் ஆபீஸர் கோடு போட வைக்கிறார். கோடு போடத் தோதாகத் தார்ரோடு இருக்கிறது. சுண்ணாம்புக் கோடு. இந்தக் கோட்டைத் தாண்டி காற்று அண்டலாமே தவிர கட்சிச் சின்னத்தை நினைவுபடுத்தும் எந்தச் சங்கதியும் வரக்கூடாது.



இந்தக் கோட்டைத் தாண்டி கொசுக்கள் உள்ளே வரலாம். நல்ல நேரமாய்க் கொசு வாக்குச் சின்னமாய் அங்கீகரிக்கப்படவில்லை. மெஜாரிட்டி தீர்மானிப்பதே ஜனநாயகம் என்றால் கொசுதான் தேசியப் பறவை. அது தேசியப் பறவையாக இருந்திருந்தால் தனது ஊசி அலகைப் பயன்படுத்தித் தேர்தல் சின்னமாக மாறியிருக்கும்.

இந்தத் தொகுதியில் நான்கு முனைப் போட்டி.

முதலாமவர், அரங்கநாதன். இவர் போன மே மாதம் வரை ரங்கநாதனாக இருந்தவர். பிறகு முன்னணி வேட்பாளராக மாற உத்தேசித்து கெஜட்டில் பெயர் மாற்றி அரங்கநாதன் ஆகிவிட்டார். ஒரு ஸ்டேஜுக்கு வருவதென்றால் பல காரியங்கள் பார்க்க வேண்டியுள்ளது. அடுத்த வேட்பாளர் சின்னதுரை.

அதற்கடுத்து சின்னசாமி.

ஒரே நீள அகலத்தில் காட்சியளிக்கும் இந்தப் பெயர்களின் மயக்கத்திலிருந்து உய்ய சின்னத்தின் உபயத்தைக் கைக்கொள்ளுவது தான் ஒரே வழி. கடைசியாக கருமுத்து. இவ்விடம் உயிர் ஆசை கருதி இவர்களது இனிஷியல், கட்சி, சின்னம் ஆகியன குறிப்பிடப்படவில்லை.

உண்மையில் வாக்காளர் சீட்டில்தான் நான்கு முனைப் போட்டி. மக்கள் அலையளவில் இருமுனைப் போட்டிதான். அரங்கநாதன் Vs சின்னதுரை. மற்ற முனைகள் மழுங்கிய முனைகள். இதில் கருமுத்து விடுதலை வந்த நாள் முதல் இந்த நாள் வரை அடாது போட்டியிடுகின்றார். வயது எண்பதோ அதற்கும் பத்திருபது கூடுதலாகவோ இருக்கலாம். தன் ஆவி பிரியுமுன் 'ஜாமீன் தொகை'யை ஒருமுறையாவது வாங்கி விடுவது அவரது இலட்சியமாக இருக்கலாம்.

கடந்த தேர்தல் நாளன்று அவர் ஆஸ்பத்திரியிலும் அவர் மனைவி துணையாகவும் இருந்ததால் தம்பதி வாக்களிக்கவில்லை. பெற்ற வாக்குகள் 998. ஒரு கால் ஆயிரம் வாக்கு பெற்றிருந்தால் இந்தத் தேர்தலைப் புறக்கணித்திருக்கக்கூடும். ஆனால் அபூர்வ சிகாமணிகளுக்கு ஓய்வே இல்லை. அவர் பிரசாரத்தின் போது பயன்படுத்தும் வார்த்தைகளில் மாதிரிக்குச் சில... அபேட்சகர், ஜாபிதா, கஸ்ப்பா, ஜில்லா, ஜில்லா போர்டு...

கோழிகள், ஆடுகள், மைனாக்கள், மரங்கள், மனிதர்கள் யாவை/யாவற்றுக்குமான பொழுது விடிந்தது. தேர்தல் நாள். ஊரின் வெவ்வேறு திக்குகளிலிருந்து மூன்று பேர் நண்பர்கள் - வாக்களிக்கச் சென்றார்கள். மொத்தம் 1117 வாக்குகளில் பதிவானவை 928.

1. குமாரசாமி. ஏழு மணிக்கு எழுந்தார். வீறுகொண்டு எழுந்தவர் ஏறுபோல் நடந்து வாக்களித்தார் அரங்கநாதனுக்கு. திரும்பினார் வீட்டுக்கு.

2. சக்திவேல். ஏழு இருபதுக்கு எழுந்தார். குளித்து முடித்து உணவு உண்டு பவுடர் பூண்டு ஜில்லென்று நடந்து போய் சின்னதுரைக்கு வாக்களித்தார். ரத்தத்தின் அணுக்களெல்லாம் மகிழ்ச்சி ததும்ப வீட்டுக்கு நடந் தார்.

3. ஞானசம்பந்தன். வாக்குச்சாவடிக்குப் புறப்பட்டுப் போகும்போதே இம்முறை கருமுத்துவுக்கு வாக்களித்தால் என்ன என யோசித்தார். வாக்குச் சீட்டுக்கு முன் நிற்கிற போது வெல்லுகிற கட்சிக்கு வாக்களிக்க வேண்டும் என நினைத்தார். குழப்பத்துடன் நீண்ட அவரது முத்திரை சின்னசாமிக்கும் சின்னதுரைக்கும் மையமாய் உள்ள கோட்டில் விழுந்து இரண்டாய்ப் பிளந்தது. வெட்கத்துடன் வீடு திரும்பினார்.

இவர்கள் மூவரும் சாயங்காலம் வழக்கமாய்க் கூடுகிற தேநீர் விடுதியில் சந்தித்துக் கொண்டார்கள். தங்களது அனுபவங்களையும் அனுமானங்களையும் பகிர்ந்து கொண்டனர். இடையிடையே ஞானசம்பந்தனைக் கிண்டல் செய்தனர் மற்ற இருவரும். "செல்லாத ஓட்டு... செல்லாத ஓட்டு."

அடுத்த வாரம்... அதே இடம்... அரங்கநாதன் தேர்தலில் வென்றிருந்தார். குமாரசாமி சக்திவேலுவைப் பார்த்துக் கொக்கரித்தார்.

"சின்னதுரை தோத்துட்டார்ல. நீ போட்டதும் செல்லாத ஓட்டுதான்."

அடுத்த மாதம். அன்று வேறு கிழமை. தேநீர்க் கடை.

ஞானசம்பந்தன் உற்சாகமாக இருந்தார். குமாரசாமி சோர்வாக இருந்தார். சக்திவேல் பெருமிதத்துடன் காணப்பட்டார். இதற்கெல்லாம் காரணம் அரங்கநாதன் கட்சி மாறியிருந்ததுதான். ஞானசம்பந்தன் மற்ற இரு நண்பர்களையும் தோளில் தட்டிக் கூச்சலிட்டார். கொஞ்சம் அதிர்ச்சியூட்டும் வாசகங்கள். "நாம எல்லோரும் போட்டது செல்லாத ஓட்டுத்தான்!" ○

வேருக்குப் பெருமை!



தமிழ்நாட்டின் ஓவியம் சிற்பம் ஆகியவற்றின் தோற்றம் வளர்ச்சி- இன்றைய நிலை குறித்து பரந்துபட்ட ஆவணத் தொகுப்பைத் தயாரிக்கச் சொல்லி ஓவியம் மற்றும் கலை விமர்சகரான இந்திரனை நியமித்திருக்கிறது தமிழ்நாடு ஓவிய நுண் கலைக் குழு. தமிழகத்தின் சந்து பொந்துகளில் உள்ள கிராமியப் பண்பாட்டைப் புகைப்பட ஆவணங்களாகப் பதிவு செய்வதுதான் இவரது முதல் வேலையாம். இதற்காகத் தாம் பணியாற்றிய வங்கியின் சீனியர் மானேஜர் வேலையை உதறி விட்டு இதில் குதித்திருக்கிறார் அவர்.

''இன்றைக்குக் கிராமிய ஓவியங்கள் எதுவும் ஆவணமாக்கப்படவில்லை. அவைதான் நமது வேர். வேருக்குப் பெருமை சேர்க்கப் போகிறேன்'' என்கிறார் இவர்.

– ஏக்

சூப்பர் சலவை தரும்!
‘டோட்டல்’ முழுதிருப்தி அளிக்கும்!!



அதிகபட்ச
விலை
500 கிராம் ரூ.12.75
300 கிராம் ரூ.8.25

Total

நீல டிடேர்ஜெண்ட் பார்

டோட்டல் அற்புதமான சலவை பார் மிக செறிந்த நுரைவளத்துடன், தண்ணீரில் மிருதுவாகும் தன்மை கொண்டது. உங்கள் துணிகளுக்கு முழுமையான சலவை தருகிறது நியாயமான விலையில் !

ஒரு MSIL தயாரிப்பு
MSIL

மைசூர் சேல்ஸ் இண்டர்நேஷனல் லிமிடெட்
கன்ஸ்யூமர் புராடெக்ட் டிவிஷன்
36, கன்னிங்ஹாம்ரோடு, பெங்களூர் 560 052.









அறுபத்து மூன்றாம் அத்தியாயம்

பினாகபாணியின் வஞ்சம்

பொன்னியின் செல்வரும் குந்தவை தேவி முதலாயினோரும் பாதாளச் சிறைக்குச் சென்று பார்த்தபோது அங்கே அவர்கள் வந்தியத்தேவனைக் காணவில்லை. அவனுக்குப் பதிலாக வைத்தியர் மகன் பினாகபாணியைக் கண்டார்கள். பினாகபாணி சுவரில் இருந்த இரும்பு வளையங்களில் சேர்த்துக் கட்டப்பட்டிருந்தான். "ஐயையோ! கொலைகாரன் தப்பி ஓடிவிட்டான்! பைத்தியக்காரன் தப்பி ஓடிவிட்டான்" என்று கூச்சலிட்டுக் கொண்டுமிருந்தான்.

அவனைக் குந்தவை தேவிக்கும் வானதிக்கும் நன்கு நினைவிருந்தது. முதன் முதலில் வந்தியத் தேவனுக்குத் துணையாக அவனையும் கோடிக்கரைக்கு அவர்கள் அனுப்பினார்கள் அல்லவா? பினாகபாணியை விடுதலை செய்யப் பண்ணி விசாரித்தபோது அவன் சற்று முன் அங்கு நடந்த நிகழ்ச்சிகளைச் சுருக்கமாகத் தெரியப்படுத்தினான். தப்பி ஓடிப் போனவர்களை விரைவாகத் தொடர்ந்து பிடிக்க வேண்டுமென்றும் ஆத்திரப்பட்டான்.

ஆனால், அவனுடைய வரலாற்றைக் கேட்டவர்கள் அது விஷயத்தில் அவ்வளவு ஆத்திரம் கொள்ளவில்லை. வந்தியத்தேவனுடைய சாமர்த்தியத்தைப் பற்றி மனத்திற்குள் அவர்கள் மெச்சிக் கொண்டதுடன், அச்சமயம் அவன் தப்பி ஓடிப் போனதே ஒருவிதத்தில்

அமரர் கல்கி

நல்லது என்று எண்ணிக் கொண்டார்கள். மணிமேகலை தனது எண்ணத்தை வெளிப்படையாகத் தெரிவிக்கத் தொடங்கியபோது, குந்தவை, அவளைத் தடுத்து, "தங்காய், பேசாமலிரு! இது பெரிய இராஜாங்க விஷயம். பெண் பிள்ளைகளாகிய நமக்கு அதைப் பற்றி என்ன தெரியும்? உன் மனத்தில் இருப்பதை என்னிடம் தனியாகச் சொல்லு!" என்றாள்.

எல்லாரும் பாதாளச் சிறையின் வாசலில் வந்தபோது அங்கே சேநாதிபதி பெரிய வேளாரும் வந்து சேர்ந்தார். சிறையில் ஏதோ தவறு நடந்துவிட்டது என்ற செய்தி அவர் காதுக்கு அதற்குள் எட்டியிருந்தது. நடந்தவற்றை அறிந்த போது சேநாதிபதியும் தப்பி ஓடியவர்களைப் பிடிப்பதில் அவ்வளவாகப் பரபரப்புக் காட்டவில்லை. உண்மையில் அவருடைய மனத்திற்குள்ளேயும் வந்தியத்தேவன் மீது சாட்டப்பட்டிருந்த குற்றத்தைப் பற்றிச் சிறிதும் நம்பிக்கை உண்டாகியிருக்கவில்லை. அருள்மொழி வர்மர், குந்தவை தேவி முதலியோர் வந்தியத்தேவனிடம் கொண்டிருந்த அபிமானத்தையும் அறிந்திருந்தார். ஆகையால், கோபங் கொள்வதற்குப் பதிலாக வந்தியத்தேவனுடைய கெட்டிக்காரத்தனத்தைக் குறிப்பிட்டுச் சிரித்தார்.

"அந்த வாணர் குல வாலிபன் ரொம்ப சாமர்த்தியசாலி! இலங்கை மாதோட்டச் சிறையிலிருந்தும் அவன் இப்படித்தான் ஒரு தடவை தந்திரமாகத் தப்பிச் சென்றான்!" என்றார்.

வைத்தியர் மகன் குறுக்கிட்டு, "ஐயா! தப்பி ஓடியவர்களைத் தேடிப் பிடிக்க ஏற்பாடு செய்ய வேண்டாமா?" என்றான்.

"ஆ! அவர்கள் எங்கே தப்பிச் சென்றுவிடப் போகிறார்கள்? இந்தக் கோட்டைக்குள்ளேதானே இருக்க வேண்டும்? பார்த்துக் கொள்ளலாம்!" என்றார் சேநாதிபதி பெரிய வேளார்.

பினாகபாணி ஆத்திரத்துடன் "இல்லை, இல்லை! அந்தக் கொலைகாரனுக்குச் சுரங்கப் பாதை தெரியும். அதன் வழியாக அவன் வெளியேறிப் போய் விடுவான்!" என்று அலறினான்.

சேநாதிபதி இதனால் கோபம் அடைந்து, "முட்டாளே! நீ எனக்குப் புத்தி சொல்ல முன் வந்துவிட்டாயா? அவர்கள் தப்பிச் செல்வதற்கு நீதானே காரணம்? வேண்டுமென்றே அவர்களுடன் சேர்ந்து நீயே இந்தச் சூழ்ச்சி செய்தாயோ, என்னமோ? இவனைப் பிடித்து மறுபடியும் பாதாளச் சிறையிலே போடுங்கள்!" என்று பக்கத்தில் நின்ற வீரர்களைப் பார்த்துக் கூறினார்.

பினாகபாணி நடுநடுங்கிப் போனான். "இல்லை, ஐயா! சத்தியமாக நான் அவர்களுடைய சூழ்ச்சியில் சேர்ந்தவன் அல்ல. முதன்மந்திரி அனுப்பி நான் வந்தேன்!" என்று முறையிட்டான்.

பொன்னியின் செல்வர் குறுக்கிட்டு, "ஆமாம்; இவன் முதன் மந்திரியின் ஆள் அல்லவா? தக்க காவலுடன் அவரிடம் அனுப்பிச் சேர்த்து விடலாம். முதன் மந்திரியே இவனுக்குத் தக்க தண்டனை கொடுக்கட்டும்!" என்றார்.

அவ்வாறே சேநாதிபதி வைத்தியர் மகனை முதன்மந்திரி அநிருத்தரிடம் கொண்டு போய் ஒப்புவித்து விடும்படி தம்முடைய வீரர்கள் நால்வருக்குக் கட்டளை பிறப்பித்தார்.

முதன்மந்திரி அநிருத்தர் பினாகபாணியிடம் சிறையில் நடந்தவற்றைக் கேட்டு அறிந்தபோது அவரும் அவ்வளவாகப் பரபரப்புக் காட்டவில்லை.

அநிருத்தர் எந்த முக்கியமான காரியத்துக்கும் ஒரு ஆளை மட்டும் நம்பி அனுப்புவதில்லை. எங்கேயாவது ஒற்றனை அனுப்பினால், அவனைக் கவனித்துக் கொள்ளப் பின்னால் இன்னொருவனையும் அனுப்பி வைப்பது அவர் வழக்கம். அவ்வாறே இப்போதும் ஆழ்வார்க்கடியானை அனுப்பியிருந்தபடியால் அவர் கவலைப்படவில்லை. ஓடிப் போனவர்களை அவன் பிடித்துக் கொண்டு வருவான், அல்லது அவர்களைப் பற்றிய செய்தியாவது கொண்டு வருவான் என்று நம்பினார். ஓடிப் போனவர்கள் இருவரும் ஒருவழியாக அகப்படாமலே ஓடிப் போய்விட்டால்

பல தொல்லைகள் தீர வகை ஏற்படும் என்ற எண்ணமும் அவர் மனத்தில் இருந்தது.

எனவே, பினாகபாணி பாதாளச் சிறையில் நடந்தவற்றைச் சொல்லிவிட்டு, "ஐயா! என்னுடன் நாலு ஆட்களை அனுப்பி வைத்தால் நானே அவர்களைத் திரும்பவும் கைப்பற்றி வருகிறேன்'' என்று சொன்னபோது, அநிருத்தரும் அவன் பேரில் எரிந்து விழுந்தார்.

"முட்டாளே! காரியத்தை அடியோடு கெடுத்து விட்டாய்! அந்தப் பைத்தியக்காரனைப் பற்றி வெளியில் யாருக்குமே தெரியக்கூடாது என்று அல்லவா உன்னை அனுப்பினேன்? இல்லாவிடில் நானே போய் அவனை அழைத்து வந்திருக்க மாட்டேனா? இப்போது அரண்மனையைச் சேர்ந்த பலருக்கும் அவனைப் பற்றித் தெரிந்து போய் விட்டது. அது போதாது என்று நீ வேறு மறுபடியும் விளம்பரப்படுத்தப் பார்க்கிறாயா? போதும் உன்னுடைய சேவை! நீ ஒற்றன் வேலைக்குச் சிறிதும் தகுதி அற்றவன்! போ! இனி என் முகத்தில் விழிக்காதே! இன்று நடந்தவற்றை யாரிடமும் சொல்லாதே! சொன்னதாகத் தெரிந்தால் உன்னைக் கழுவில் ஏற்றக் கட்டளையிடுவேன்!'' என்றார் அநிருத்தர்.

பினாகபாணி தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு முதன்மந்திரி வீட்டிலிருந்து வெளியேறினான். அவனுடைய உள்ளத்தில் ஆசாபங்கத்தினால் ஏற்பட்ட குரோதமெல்லாம் வந்தியத்தேவன் மீது திரும்பியது. அவனாலேதான் தனக்கு எடுத்த



காரியத்தில் தோல்வியும் அபகீர்த்தியும் உண்டாயின. சேநாதிபதியும் முதன் மந்திரியும் தன்னைக் கடிந்து கொள்ளவும் நேர்ந்தது. இவர்கள் எல்லாரும் அலட்சியமாயிருந்தால் இருந்துவிட்டுப் போகட்டும். வந்தியத்தேவனைக் கண்டுபிடித்துப் பழி வாங்கும் கடமை தன்னுடையது. பைத்தியக்காரன் தப்பி ஓடிப் போனாலும் போகட்டும்; வந்தியத்தேவனை மட்டும் விடக் கூடாது. கோடிக்கரைக்குப் பிரயாணம் சென்ற நாளிலிருந்து தன்னுடைய விரோதி அவன். கடைசியாக இந்தப் பெரிய தீங்கைத் தனக்குச் செய்திருக்கிறான். அவனைக் கண்டுபிடித்துப் பழி வாங்கியே தீர வேண்டும்...!

இவ்வாறு பினாகபாணி தீர்மானித்துக் கொண்டு தஞ்சைக் கோட்டையை விட்டு வெளியேறினான். வந்தியத்தேவன் கோட்டைக்குள் இருக்க மாட்டான் என்றும், இரகசியச் சுரங்கப் பாதை வழியாகப் போயிருப்பான் என்றும் அவன் உண்மையிலேயே நம்பினான். ஆனால் சுரங்கப்பாதை எங்கே இருக்கிறதென்றாவது, அதன் வெளி வாசல் எங்கே திறக்கிறதென்றாவது அவனுக்குத் தெரிந்திருக்கவில்லை. ஆயினும் கோட்டைச் சுவரில் எங்கேயோ ஓரிடத்தில் அந்த இரகசியச் சுரங்கப் பாதையின் வெளி வாசற்படி இருக்கத்தான் வேண்டும். சுவர் ஓரமாகப் போய்ச் சுற்றிப் பார்த்தால் ஒருவேளை கண்டுபிடித்தாலும் கண்டுபிடிக்கலாம். ஏன்? வந்தியத்தேவனும் பைத்தியக்காரனும் வெளியில் வரும்போது கையும் மெய்யுமாக அவர்களைப் பிடித்தாலும் பிடித்து விடலாம்...

இத்தகைய எண்ணத்தினால் பினாகபாணி தஞ்சைக் கோட்டையின் வெளிப்புறத்தில் மதிலை ஒட்டி ஓடிய வடவாற்றின் அக்கரை வழியாகப் போய்க்கொண்டிருந்தான். மதில் சுவரைக் கவனமாக உற்றுப் பார்த்துக் கொண்டே போனான். கொடும்பாளூர் வீரர்கள் சிலர் கையில் தீவர்த்தியுடன் அவ்வப்போது மதிலைச் சுற்றிப் போய்க்கொண்டிருந்தார்கள். வைத்தியர் மகனிடம் இன்னமும் அவன் முதன்மந்திரியின் ஆள் என்பதற்கு அடையாளமான இலச்சினை இருந்தது. ஆகையால், வீரர்கள் எதிர்ப்பட்டால் அவன் அவர்களிடமிருந்து சமாளித்துக் கொண்டு செல்ல முடியும். ஆயினும், அவன் எடுத்த காரியம் அதனால் தாமதம் ஆகும். ஆகையால், தீவர்த்தியுடன் காவல் வீரர்கள் எதிரே வந்தபோதெல்லாம் பாதை ஓரத்தில் மரங்கள் - புதர்களில் மறைந்து நின்று அவர்கள் அப்பால் போனதும் வெளி வந்தான். இப்படி அவன் ஒரு தடவை புதர்களில் மறைந்துகொண்டிருந்தபோது அவனுக்குச் சற்றுத் தூரத்தில் இன்னும் இருவர் ஒளிந்திருப்பதைப் பார்த்துத் திடுக்கிட்டான். அவர்களில் ஒருவன் கையில் வாள் இருந்தது. தீவர்த்தி வெளிச்சம் புதர்களின் வழியாக வந்து இரண்டொரு கிரணங்கள் அந்த வாளின் மீது பட்டபோது அது ஒளி வீசியது. ஆனால் ஒளிந்திருந்தவர்கள் யார் என்பது தெரியவில்லை.

காவலர்கள் அப்பால் போனதும் அந்த இரு மனிதர்களும் நதிக் கரைக்கு வந்து பினாகபாணி சென்ற திசைக்கு எதிர்ப்பக்கமாக நடந்து சென்றார்கள். பினாகபாணி தன் வழியே சிறிது தூரம் சென்றான். சட்டென்று அவன் மனத்தில் ஓர் ஐயம் உதித்தது. அவர்கள் இருவரும் தப்பி ஓடிய வந்தியத்தேவனும் பைத்தியக்காரனுந்தானோ என்னமோ? ஏன் இருக்கக்கூடாது? - கோட்டை வாசலை நோக்கி அவர்கள் சென்றபடியால், அவனுக்கு முதலில் அச் சந்தேகம் உதிக்கவில்லை. ஆனால் வந்தியத்தேவன் மிக்க தந்திரசாலி; துணிச்சலும் உள்ளவன். ஆகையால் என்ன உத்தேசத்துடன் போகிறானோ? என்னமோ...?

எனவே பினாகபாணியும் திரும்பி அவர்களைச் சற்றுத் தூரத்தில் பின் தொடர்ந்து போனான். ஒருவனுடைய கையிலே வாள் இருந்தபடியால் ஓடிப் போய் அவர்களை எதிர்ப்படவும் விரும்பவுமில்லை. அநாவசியமாக அன்னியன் ஒருவனுடன் சண்டை போடும் சமயம் அதுவல்ல. அவர்கள் தப்பி ஓடியவர்கள்தான் என்று நிச்சயம்

தெரிந்துகொண்ட பிறகுதான் எதுவும் செய்ய வேண்டும். அவனுடைய கையில் குட்டையான குத்திட்டி ஒன்று இருக்கவே இருந்தது. அதைத் திடீரென்று உபயோகித்து அவனுடைய ஜன்ம விரோதியைத் தீர்த்துக் கட்டுவதே நல்லது. அதோ வடக்குக் கோட்டை வாசல் தெரிகிறது! அடடே! அங்கே என்ன இவ்வளவு கூட்டமும் ஆர்ப்பாட்டமும்? பல்லக்குகள், தீவர்த்திகள், முன்னும் பின்னும் அரண்மனைச் சேவகர்கள்! – யாரோ முக்கியமானவர்கள் வெளியில் போகிறார்களோ, திரும்பிவருகிறார்களோ தெரியவில்லை!

கடவுளே! இவர்கள் எங்கே? சட்டென்று மாயமாய் மறைந்து விட்டார்களே? குறுக்கு வழியில் புகுந்து விட்டார்கள் போலும்? எங்கே போயிருப்பார்கள்? இராஜபாட்டைக்குப் போய் விட்டார்களா, என்ன? தப்பி ஓடிய கைதிகள் அவ்வளவு தைரியமாக இராஜபாட்டைக்குச் சென்றிருக்க முடியுமா? இல்லாவிடில் எங்கே போயிருக்க முடியும்...? சேந்தன் அமுதனுடைய நந்தவனக் குடிசை அங்கே சமீபத்தில் இருப்பது பினாகபாணிக்கு நினைவு வந்தது. முன்னொருமுறை வந்தியத்தேவன் அங்கே ஒளிந்திருந்தான் என்பதும் அவனுக்குத் தெரிந்திருந்தது! ஆமாம்! ஆமாம்! அவர்கள் வந்தியத்தேவனும் பைத்தியக்காரனுந்தான். சேந்தன் அமுதன் வீட்டுக்குத்தான் போகிறார்கள். அங்கே இரவு மறைந்து தங்கியிருப்பதற்காகப் போகிறார்கள் போலும்! அல்லது அந்தத் தந்திரசாலியான வந்தியத்தேவன் வேறு என்ன உத்தேசம் வைத்திருக்கிறானோ தெரியவில்லை.

சேந்தன் அமுதனுடைய நந்தவனம் இருந்த திசையை நோக்கிப் பினாகபாணி சென்றான். இருட்டில் வழி கண்டுபிடித்துச் செல்வது அவ்வளவு சுலபமாயில்லை. தட்டுத் தடுமாறி நந்தவனத்தை அடைந்தபோது அங்கே சிவிகைகளும் காவலர்களும் இருப்பதைக் கண்டு வியந்தான். என்ன செய்வதென்று தெரியாமல் அவன் தயங்கி நின்றபோது, சிவிகைகள் புறப்பட்டு விட்டன. காவலர்களும் பின் தொடர்ந்து சென்றார்கள்.

பினாகபாணி அந்த நந்தவனத்தில் நாலாபுறமும் உற்றுப் பார்த்தான். ஒரு வேலியின் ஓரமாக இரண்டு குதிரைகளின் தலைகள் தெரிந்தன. வைத்தியர் மகனின் ஆர்வம் அதிகமாயிற்று. மெள்ள மெள்ள நடந்து குடிசையை அணுகினான். ஒரு மரத்தினடியில் இருவர் நின்று பேசிக் கொண்டிருப்பதைக் கண்டான். அவர்கள் தான் தேடி வந்த ஆசாமிகளாகத்தான் இருக்க வேண்டும். குதிரைகள் இரண்டு ஆயுத்தமாக நிற்கின்றனவே, அது எப்படி? அவர்கள் தப்பி ஓடுவதற்கு வேறு யாராவது, பெரிய இடத்தைச் சேர்ந்தவர்கள், இரகசியமாக உதவி புரிகிறார்களா, என்ன? அவர்களைத் தப்ப வைக்கும் சூழ்ச்சியில் இராஜ குடும்பத்தினரே சம்பந்தப்பட்டிருப்பார்களோ? அந்தப் பைத்தியக்காரன் தனக்கு ஏதோ இரகசியங்கள் தெரியும் என்பதாக அலறிக் கொண்டிருந்தானே, அந்த இரகசியங்கள் வெளிப்படக் கூடாது என்பதற்காக ஒருவேளை இதெல்லாம் நடைபெறுகிறதோ...?

மரத்தின் பின்னால் மறைந்து நின்று பேசுகிறவர்கள் யார் என்று உற்றுப் பார்த்தான். அவர்களில் ஒருவன் பைத்தியக்காரன்தான், சந்தேகமில்லை. அவனுடைய கம்மல் குரலை நன்றாக அடையாளங் கண்டுபிடிக்க முடிந்தது. அப்படியானால், இன்னொருவன் வந்தியத்தேவனாகத்தானே இருக்க வேண்டும்? ஆனால் அவன்மாதிரி தோன்றவில்லையே? இது என்ன அதிசயம்? இளவரசர் மதுராந்தகரைப் போல அல்லவா தோன்றுகிறது? தலையிலே இளவரசுக் கிரீடம்! தோளில் பீதாம்பரம்! கழுத்தில் முத்து மாலைகள்! கைகளிலும் ஆபரணங்கள்...! மதுராந்தகருக்கும் இந்தப் பைத்தியக்காரனுக்கும் இடையில் என்ன அந்தரங்கப் பேச்சு இருக்க முடியும்?

அது ஏதாவது இருந்து விட்டுப்

போகட்டும். தன்னுடைய ஜன்ம விரோதியான் வந்தியத்தேவன் எங்கே? பக்கத்திலேதான் எங்கேயாவது இருக்க வேண்டும்; சந்தேகமில்லை. கையிலே வாளுடன் நடந்தவன் அவனேதான்! ஒரு வேளை, வேலி ஓரத்தில் குதிரைகளைப் பார்த்தோமே? அவற்றில் ஒன்றின் மீது ஓடுவதற்கு ஆயத்தமாக உட்கார்ந்திருக்கிறானோ? பைத்தியக்காரன் வரவுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறானோ...? ஆகா! அப்படித்தான் இருக்க வேண்டும். அவர்கள் தப்பிச் செல்வதற்குக் காரணமானவர் மதுராந்தகர்தான் போலும்! மதுராந்தகருடைய தூண்டுதலினால்தான் வந்தியத்தேவன் கரிகாலரைக் கொன்றான் போலும்! இப்போது அவர்கள் தப்பித்துக் கொண்டு புறப்படுவதற்கு முன்னால், பைத்தியக்காரனிடம் மதுராந்தகர் ஏதோ செய்தி சொல்லி அனுப்புகிறார் போலும்! கடவுளே! இவையெல்லாம் மட்டும் உண்மை என்று நிரூபிக்கவும் முடியுமானால்...?


இப்படியெல்லாம் பினாகபாணியின் கோணல் மூளை வேலை செய்தது. எல்லாவற்றுக்கும் குதிரைகளின் அருகில் போய்ப் பார்ப்பது நல்லது. அங்கே ஒரு வேளை வந்தியத்தேவன் தனியாக இருந்தால், தன் கையிலிருந்த குத்தீட்டியினால் ஒரு கை பார்க்கலாம். பிற்பாடு, இந்தப் பைத்தியக்காரனைப் பிடித்துப் பயமுறுத்தி உண்மையை அறியலாம்.

மதுராந்தகரும் பைத்தியக்காரனும் பேசிக்கொண்டு நின்ற மரத்திற்கு நேர் எதிரே வேலிக்கு அப்பால் குதிரைகள் நின்றன. அவர்களைத் தாண்டிக் கொண்டு அங்கே போக முடியாது. வழியில் தாமரைக்குளம் வேறு இருந்தது. ஆகையால் குடிசைக்குப் பின்புறத்தை அடைந்து அங்கே வேலியைத் தாண்டிப் போய்க் குதிரைகள் நின்ற இடத்தைச் சேர்வதுதான் நல்லது.

பினாகபாணி அவ்வாறே சென்று குடிசையின் பின்புறத்தை அடைந்தபோது அவனுடைய காதில் சேந்தன் அமுதனின் குரலும் பூங்குழலியின் குரலும் விழுந்தன. பூங்குழலியின் மீது கோடிக்கரையில் முதன்முதலாக அவளைச் சந்தித்தபோதே பினாகபாணி மோகம் கொண்டிருந்தான். அவள் காரணமாகவே வந்தியத்தேவன் மீது அவனுடைய குரோதம் அதிகமாயிற்று. பிற்பாடு, அவன் மந்தாகினியைக் கைப்பற்றிக் கொண்டு வரப்போனபோது, சேந்தன் அமுதனுக்கும் பூங்குழலிக்கும் ஏற்பட்டிருந்த நட்புரிமையைத் தெரிந்து கொண்டு மனம் புழுங்கினான். சேந்தன் அமுதன் மீதும் அவனுக்குக் குரோதம் உண்டாகியிருந்தது.

இப்போது சேந்தன் அமுதனும் பூங்குழலியும் மகிழ்ச்சி ததும்பிய மலர்ந்த முகங்களுடன் சல்லாபமாகப் பேசிக் கொண்டிருந்ததைப் பினாகபாணி குடிசையின் சிறு பலகணி வழியாகப் பார்த்தான். சேந்தன் அமுதன் மீது அவன் குரோதம் கொழுந்துவிட்டு எரிந்தது. இன்னும் சிறிது அருகில் சென்று அவர்களுடைய பேச்சைக் காது கொடுத்துக் கேட்டான். கல்யாணம் செய்து கொண்டு கோடிக்கரை செல்லுவது பற்றிய அவர்கள் பேச்சு அவன் காதில் விழுந்தது. கலகலவென்று அவர்கள் இருவரும் சேர்ந்து சிரித்த ஒலி அவனுடைய குரோதக் கனலைப் பொங்கி எழச் செய்தது! சீச்சீ! கடைசியில் இந்த ஊமைப் பூக்காரியின் மகனா பூங்குழலியை அடையப் போகிறான்? அந்த எண்ணத்தைப் பினாகபாணியினால் சகிக்கவே முடியவில்லை. வந்தியத்தேவனையும் பைத்தியக்காரனையும் அவர்களைப் பிடிக்கும் உத்தேசத்தையும் அச்சமயம் அடியோடு மறந்துவிட்டான். முதலில், இந்தத் தேவாரம் பாடும் சேந்தன் அமுதனை இந்த மண்ணுலகத்திலிருந்து அனுப்பி விட வேண்டும். மற்றக் காரியங்களையெல்லாம் பிற்பாடு பார்த்துக் கொள்ளலாம்...

இவ்விதம் முடிவு செய்து பலகணிக்கு வெளியே சற்று ஓரமாக நின்று குத்தீட்டியைச் சேந்தன் அமுதன்மேல் எறியக் குறி பார்த்தான். தற்செயலாக அந்த ஈட்டியையும் அதை ஏந்திய கையையும் மட்டும் பார்த்துவிட்ட பூங்குழலி, 'வீல்' என்று கூச்சலிட்டாள்.



எறிய ஓங்கியபோது பின்னால் தடதடவென்று காலடிச் சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தபோது ஓர் ஆள் வெகு சமீபத்தில் வந்துவிட்டான். இருளில் அவன் யார் என்று தெரியவில்லை. யாராயிருந்தாலும் சரி; தன்னுடைய உத்தேசத்தைத் தெரிந்துகொண்டு தன்னைப் பிடிப்பதற்கே ஓடி வருகிறான். சேந்தன் அமுதன் மீது எறிவதற்கு ஓங்கிய ஈட்டியை ஓடி வந்தவன் மீது செலுத்தினான். வந்தவன் கீழே விழுந்தான்.

அதேசமயத்தில் இரண்டு குதிரைகள் புறப்பட்ட சப்தம் கேட்டது. அவர்கள் வந்தியத்தேவனும் பைத்தியக்காரனாகவுமே இருக்க வேண்டும். அப்படியென்றால் இருட்டில் தன்னைத் தடுக்க வந்து தன் ஈட்டிக்கு இலக்கானது இளவரசர்

உடனே சேந்தன் அமுதனும் பலகணிப் பக்கம் திரும்பிப் பார்த்தான்! ஆகா! அவன் மார்பின் பேரில் ஈட்டியை எறியச் சரியான சந்தர்ப்பம்!

பினாகபாணியின் கை ஈட்டியை

மதுராந்தகராயிருக்கக்கூடும்...! இந்த எண்ணங்கள் மின்னல் வேகத்தில் பினாகபாணியின் உள்ளத்தில் தோன்றி அவனுக்குப் பயங்கரத்தை உண்டாக்கின.

குடிசைக்கு உள்ளேயிருந்து 'ஆகா!' 'ஐயோ!' என்ற குரல்கள் எழுந்தன. கதவைத் திறந்துகொண்டு வெளியில் யாரோ வரும் சப்தமும் கேட்டது.

பினாகபாணி ஓட்டம் பிடித்தான். அங்கிருந்து தப்பி ஓடுவதுதான் அப்போது முதன்மையாக அவன் செய்ய வேண்டிய காரியம். குதிரைகள் மீது ஓடியவர்களைத் தொடர்ந்து போய்ப் பிடிப்பது இரண்டாவது காரியம். தலைகால் தெரியாமல் பினாகபாணி விழுந்து அடித்து ஓடினான்.

சில கண நேரத்துக்கெல்லாம் பூங்குழலியும் சேந்தன் அமுதனும் விளக்குடன் வெளியில் வந்தார்கள். வந்தியத்தேவன் ஈட்டியால் குத்தப்பட்டு இரத்த வெள்ளத்தில் விழுந்து கிடப்பதைக் கண்டார்கள். அவர்கள் அடைந்த பயங்கரத்தையும் துயரத்தையும் சொல்லி முடியாது. மிக்க பரிவுடன் அவனை இருவரும் பிடித்துக் கொண்டு போய்க் குடிசைக்குள் சேர்த்தார்கள். அவன் இறந்து விடவில்லை என்று அறிந்து சிறிது ஆறுதல் பெற்றார்கள்.

வாணி அம்மை முன்னொரு தடவை கந்தமாறனுக்குச் செய்த பச்சிலை வைத்தியத்தை இன்று காயம் பட்ட வந்தியத்தேவனுக்குச் செய்யும்படி நேர்ந்தது.


அறுபத்து நான்காம் அத்தியாயம்

"உண்மையைச் சொல்!"

ஆழ்வார்க்கடியானை வந்தியத்தேவன் கட்டிப் போட்ட படகு ஆற்றோட்டத்தோடு சிறிது தூரம் மிதந்து சென்று கரையிலே ஒதுங்கியது. ஆற்று வெள்ளத்தில் தள்ளப்பட்ட வீரர்கள் இருவரும் தட்டுத் தடுமாறிக் கரை சேர்ந்து அந்தப் படகு ஒதுங்கியிருந்த இடத்துக்கு வந்து சேர்ந்தார்கள். ஆழ்வார்க்கடியானையும் மற்றொருவனையும் கட்டவிழ்த்து விட்டார்கள். ஆனால் ஆழ்வார்க்கடியான் படகிலிருந்து இறங்கவில்லை. அவன் படகிலேயே கட்டுப்பட்ட மாதிரியே இருந்துகொண்டு மற்றவர்களை மறைவில் இருக்கும்படி சொன்னான்.

உண்மையென்னவென்றால், வந்தியத்தேவனும் கருத்திருமனும் தப்பித்துப் போய் விட வேண்டுமென்பதே ஆழ்வார்க்கடியானுடைய நோக்கமாயிருந்தது. முதன்மந்திரியின் விருப்பமும் அதுவே என்பதை அவன் தெரிந்து கொண்டிருந்தான். அவ்விருவரும் அச்சமயம் தஞ்சையில் இருப்பதால், பழைய சம்பவங்கள் பலவற்றைக் குறித்து ஆராய்ச்சி நடத்த வேண்டியதாக ஏற்படும். வந்தியத்தேவன் குற்றமற்றவன் என்பது பற்றி முதன்மந்திரிக்கும் ஆழ்வார்க்கடியானுக்கும் சந்தேகமே இல்லை. ஆயினும், அவன் மீது விசாரணை நடத்துவதனாலேயே பல சங்கடங்கள் ஏற்படும்; பலர் மனவருத்தம் அடையும்படி நேரிடும். அந்தப் பேச்சு மக்களின் காதுக்கு எட்டும்படி செய்வதே கேடாக முடியும். அருள்மொழிவர்மர் ஓர் அருமை நண்பனை இழக்கவும் சோழ ராஜ்யம் ஒரு சிறந்த வீர ராஜ தந்திரியை இழக்கவும் நேரிடும். வந்தியத்தேவனைப் பற்றிக் குந்தவையின் மனோநிலையையும், மணிமேகலையின் வெளிப்படையான ஆர்வத்தையும் முதன்மந்திரி அறிந்திருந்தார். எல்லாவற்றையும் உத்தேசித்துத்தான் வந்தியத்தேவன் தப்பி ஓடுவதற்கு உதவி செய்வதே அச்சமயம் உசிதமானது என்று தீர்மானித்தார்.

சேந்தன் அமுதனுடைய நந்தவனத்தில் குதிரைகளைக் கண்டுபிடித்த பிறகு வந்தியத்தேவனும் கருத்திருமனும் இந்த



வடவாற்றின் கரையோடுதான் பிரயாணம் செய்வார்கள் என்று திருமலை நம்பி எதிர்பார்த்தான். கருத்திருமன் கூறியது போல், அந்த ஆற்றங்கரையோடு சென்றால், பாமணி நதியில் அது கலக்கும் இடம் வரையில் போகலாம். கோடிக்கரை வழியில் பாதி தூரம் சென்றாகிவிடும். ஆகவே அந்த வழியிலேதான் அவர்கள் வருவார்கள். போகும்போது அவர்களைத் தடுத்து நிறுத்தி வந்தியத்தேவனிடம் ஒரு செய்தி சொல்லி அனுப்ப வேண்டுமென்று ஆழ்வார்க்கடியான் எண்ணிக்கொண்டு அங்கு காத்திருந்தான்.

அவன் எதிர்பார்த்ததைக்

காட்டிலும் கொஞ்சம் நேரம் அதிகமாக ஆகிவிட்டது. "நாம் எண்ணியது தவறு; வேறு வழி போயிருக்க வேண்டும்; அல்லது ஏதேனும் எதிர்பாராதது நேர்ந்திருக்க வேண்டும்'' என்று தீர்மானித்துத் திருமலை படகிலிருந்து கரையில் இறங்க யத்தனித்தபோது, தூரத்தில் குதிரைகளின் காலடிச் சப்தம் கேட்டது. எனவே, மறுபடியும் கட்டிப் போடப்பட்டவனைப் போல் கிடந்தான்.

குதிரைகள் நெருங்கி வந்ததும், "ஓகோ! யார் அங்கே? கொஞ்சம் நில்லுங்கள்! என்னைக் கட்டவிழ்த்து விட்டுப் போங்கள்!" என்று கூவினான்.

ஆயினும் குதிரைகள் நிற்காமலே சென்றன. முதலில் வந்த குதிரையின் மேல் இருந்தவன் கருத்திருமன்தான் என்பதைக் கண்டான். எனவே, இரண்டாவது குதிரை நெருங்கிய போது, "வந்தியத்தேவா! வந்தியத்தேவா! கொஞ்சம் நில்லு!'' என்று பெருங்கூச்சலிட்டான்.

இரண்டாவது குதிரையும் நிற்காமல் போயிற்று. அப்போது அதன் மேலிருந்தவனை ஆழ்வார்க்கடியான் பார்த்தான்: கரை காணாத அதிசயத்தில் ஆழ்ந்தான். "என் கண்களில் ஏதோ கோளாறு இருக்கிறது; என் அறிவு என்னை மோசம் செய்கிறது'' என்றான்.

அவனைக் கடந்து அப்பால் சென்ற குதிரைகள் சிறிது தூரம் போன பிறகு நின்றன. ஒரு குதிரை மட்டும் திரும்பி வந்தது. அதன் மேலிருந்து கருத்திருமன் இறங்கினான். படகின் அருகில் வந்தான். ''பாவம்! இன்னுமா கட்டுப்பட்டிருக்கிறாய்? எங்களுக்கு எவ்வளவோ பெரிய உதவி செய்தாய்! அதற்குப் பிரதியாக உன்னைக் கட்டவிழ்த்து விட்டாவது போகிறேன். ஆனால் உன் தந்திரம் எதையும் என்னிடம் காட்டாதே!'' என்று சொல்லிக் கொண்டே அவன் குனிந்த போது, திருமலை திடீரென்று கரையில் பாய்ந்து அவன் கழுத்தைப் பிடித்துக் கீழே தள்ளி விட்டான்.

இதைச் சிறிதும் எதிர்பாராத கருத்திருமன் சிறிது நேரம் திகைத்துச் செயலிழந்து கிடந்தான்.

பிறகு, ''ஐயோ! அப்பா! என்னை விட்டு விடு! உனக்குப் புண்ணியம் உண்டு. நல்லது செய்ய வந்தவனுக்கு இப்படி நம்பிக்கைத் துரோகம் செய்யலாமா? அதோ உன் சிநேகிதன் வந்தியத்தேவன் காத்திருக்கிறான். ஆம்; அவன் உன்னைத் தன் அருமை நண்பன் என்று பாராட்டிக் கொண்டிருக்கிறான். இங்கு வந்து உன் காரியத்தைப் பார்த்தால் என்ன நினைப்பான்? நீ உயிரோடு தப்ப முடியாது! என்னை விட்டு விடு, அப்பனே, விட்டு, விடு!'' என்று பரிதாபமாகப் புலம்பினான்.

ஆழ்வார்க்கடியான், "அடே! எவ்வளவு துணிச்சலாகப் பொய் சொல்லுகிறாய்? அந்தக் குதிரையின் மேல் இருப்பவன் யார்? உண்மையைச் சொல்லு! சொன்னால் விட்டு விடுகிறேன். இல்லாவிட்டால் அடுத்த நிமிஷம் உன் உயிர் உடம்பில் இராது!'' என்றான்.

"ஆம், ஆம்! பொய்தான் சொன்னேன். உன்னை ஏமாற்ற முடியாதுதான். அந்தக் குதிரையில் இருப்பவன் வந்தியத்தேவன் அல்ல; இளவரசர் மதுராந்தகர். என்னை விட்டு விடு! அவரிடம் உனக்கு வேண்டிய பரிசுகள் வாங்கித் தருவேன்!''

''சரி, சரி! பரிசுகள் இருக்கட்டும்! வந்தியத்தேவன் எங்கே?''

''அந்த நந்தவனக் குடிசையில் குதிரையிலிருந்து இறங்கிப் போனான். அப்புறம் அவனைக் காணவில்லை.''

"நீங்கள் எங்கே போகிறீர்கள்?''

''வந்தியத்தேவனுடன் நான் போக உத்தேசித்த இடத்துக்குத்தான்.''

"அதாவது இலங்கைத் தீவுக்கு.''

"ஆமாம்!''

"மதுராந்தகர் எதற்காக இலங்கைக்கு வருகிறார்?''

"எனக்கு என்ன தெரியும்? அவரைக் கேள்! என்னுடன் வருகிறேன் என்று கிளம்பி வருகிறார்.''

ஆழ்வார்க்கடியான் கருத்திருமனுடைய நெஞ்சை ஒரு அமுக்கு அமுக்கி, "உண்மையைச் சொல்! மதுராந்தகன் யாருடைய மகன்!'' என்று கேட்டான்.

"இது என்ன கேள்வி? செம்பியன் மாதேவியின்... இல்லை, இல்லை!. நெஞ்சை அமுக்காதே! என் உயிர் போய் விடும்!

ஊமை மந்தாகினியின் மகன்."

"மதுராந்தகனின் தகப்பன் யார்? உண்மையைச் சொல்! இல்லாவிட்டால், உயிரோடு தப்ப மாட்டாய்!"

கருத்திருமன் இதற்குப் பதில் மிக மெல்லிய குரலில் சொன்னான்.

"நல்லது; பிழைத்தாய்! கடைசியாக இன்னும் ஒன்று மட்டும் சொல்லி விடு! சேந்தன் அமுதன் யாருடைய மகன்?"

"என்னை ஏன் கேட்கிறாய்? நீதான் முன்னமே தெரிந்து கொண்டாயே?"

"கண்டராதித்தர் - செம்பியன் மாதேவியின் மகன்தானே?"


"ஆமாம்; ஆனால் அவன் இன்று உயிரோடிருப்பதற்கு நான்தான் காரணம். செவிடும் ஊமையுமாகிய வாணி அந்தக் குழந்தை செத்துப் போய் விட்டதென்று எண்ணிப் புதைக்கப் பார்த்தாள். குழந்தை அழும் குரலைக் கேட்டு நான் காப்பாற்றினேன். அதற்காகவாவது என்னை இப்போது உயிரோடு விட்டு விடு!"

"உண்மையில், அதற்காகவேதான் உன்னை இப்போது உயிரோடு விடுகிறேன்!" என்று சொல்லி விட்டு ஆழ்வார்க்கடியான் எழுந்தான்.

கருத்திருமன் பாய்ந்து ஓடிக் குதிரை மீது ஏறிக் கொண்டான்.

இரண்டு குதிரைகளும் அந்த மழைக் கால இருட்டில் ஆற்றங் கரையோடு பாய்ந்து சென்றன.

(தொடரும்)




''இப்பல்லாம் கு
நடக்குறதுல்









ாயடிச் சண்டையே தெரியுமா?''




கலைஞர் ஆட்சியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் படைத்துள்ள சாதனைகள் பல.

தெருவுக்குத்தெரு குழாய்கள் போட்டு, வீட்டின் அருகிலேயே தண்ணீர் கிடைக்கச் செய்துள்ளது கலைஞரின் அரசு. இந்த ஆட்சியில், கட்டெரிக்கும் வெயிலாக இருந்தாலும் மக்களுக்கு தண்ணீர் இல்லை என்ற பிரச்சனையே வராமல் உள்ளது.

நிறைவான குடிநீர் வசதிபெற்ற நகரங்கள் – 249 • பகுதியளவு குடிநீர் வசதிபெற்ற நகரங்கள் – 252 • ரூ.562 கோடி மதிப்பீட்டில் 113 நகரங்களுக்குத் தொடர் திட்டங்கள்.

1.1.2000 வரை குடிநீர் தன்னிறைவு பெற்ற ஊரகங்களின் எண்ணிக்கை 61702 • 1996 முதல் இன்று வரை குடிநீருக்குச் செலவிடப்பட்ட தொகை ரூ.1352 கோடி.



DIPR.2001

அழைக்கிறது அமெரிக்கா!

கல்கி - டயானா வொர்ல்ட் டிராவல் இணைந்து வழங்கும்

குவிஸ் கூப்பன் – 17

1) வாஷிங்டனில் திருமணம் என்ற பிரபல நாவலை எழுதியவர் யார்?
2) திரைப்படமாகவும் வெளிவந்த 'ரங்கோன் ராதா'வின் கதாசிரியர் யார்?
3) ட்ரெயின் டு பாகிஸ்தான் என்ற நூலை எழுதிய பிரபல எழுத்தாளர் யார்?
4) கன்யாகுமரி, விஷ்ணுபுரம் போன்ற புதினங்களை எழுதியவர் யார்?
5) பாம்பே ஜெயஸ்ரீ பின்னணி பாடிய முதல் தமிழ்த் திரைப்படம் எது?
6) பாக்தாத் பேரழகி திரைப்படத்தில் 'பேரழகி'யாக நடித்தவர் யார்?

விடைகள்:

1)..

2)..

3)..

4)..

5)..

6)..

குவிஸ் போட்டி – 17

கேள்விகளில் ஊர்ப் பெயர் வருவதைக் கவனியுங்கள்... பதில்களில் அது இருக்காது! யோசித்து கூப்பனில் பூர்த்தி செய்து முந்தைய வாரங்களில் செய்ததைப் போலவே மற்ற கூப்பன்களோடு பூட்டி வையுங்கள். இருபத்தி ஆறு வார இறுதியில் எல்லா கூப்பன்களையும் எங்களுக்கு அனுப்புங்கள். இதில் மிக அதிகமான கேள்விகளுக்குச் சரியான பதில் எழுதும் ஒரு நபருக்கு

அமெரிக்கப் பயணம் பரிசு!

ஐரோப்பா பயணம் இரண்டாவது பரிசு!

மலேஷியா–சிங்கப்பூர் பயணம் மூன்றாவது பரிசு!

இந்த மூன்று நிலைகளிலும் ஒருவருக்கு மேல் சரியான பதிலை எழுதியிருந்தால் இருக்கவே இருக்கிறது குலுக்கல் முறை! பயணப் பரிசு பெறாதவர்களுக்கு அமரர் கல்கியின் நூல்கள் உண்டு.

ஆசிரியர் தீர்ப்புதான் இறுதி!

தலைவர் இல்லை; ஈகோ இல்லை; சேவை உண்டு; உறுதி உண்டு!



வயிற்றின் இடதுபக்கத்தில் துளை யிட்டு மாட்டப்பட்டிருக்கிறது ஒரு ரப்பர் குழாய். பதினாறு வயது மகாலிங்கத்திற்கு கை - கால்கள் போன்று உடலில் அதுவும் ஓர் அங்கம்! அந்தக் குழாய் வழியே செலுத்தப்படும் திரவ உணவில்தான் அவன் வாழ்க்கையே ஓடிக் கொண்டிருந்தது. வாயில் ஊறிக் கொண்டிருக்கும் உமிழ்நீரை, மறதியாய் ஒருமுறை விழுங்கி விட்டாலும் அடுத்தகணம் உயிருக்கே ஆபத்து என்ற நிலை!

வாழ்க்கைக்கும் வாலிபத்துக்கும் பிள்ளையார் சுழி போட வேண்டிய வயதில், கேள்விக்குறியோடு வாழ்ந்து கொண்டிருந்த மகாலிங்கத்துக்கு, 'சுயம்' அமைப்பின் இளைஞர்களும், சென்னை ரிஜிட் மருத்துவ மனையின் தலைமை மருத்துவர் டாக்டர் ராஜ்குமாரும் கண்கண்ட தெய்வங்களாகக் கருணை காட்டியிருக்கிறார்கள். மூன்றாண்டுகளுக்குப் பிறகு, மகா மகிழ்ச்சியோடு மகாலிங்கம் வாயால் சாப்பிடப் போகிறான். அதற்கு முன்பு, சோகச் சுவடுகள் நிறைந்த ஒரு ப்ளாஷ்பேக்.

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள வாகைக்குளம் என்னும் சிறிய கிராமம்தான் மகாலிங்கத்தின் சொந்த ஊர். தச்சுவேலை செய்து ஜீவனம் நடத்தி வந்த பெருமாள் ஆச்சாரி - லக்ஷ்மி தம்பதிக்கு மகனாக, ஏழு சகோதரிகளோடு, ஒரே சகோதரனாய்ப் பிறந்தவனுக்கு, படிப்பின் மீது அதீத காதல். பத்தாம் வகுப்பில் நானூற்று முப்பத்தைந்து மதிப்பெண்கள் பெற்று, பிளஸ் ஒன் வகுப்பில் சேர்ந்து விடலாம் என்ற கனவோடு இருந்தவனுக்கு, குடும்பக் கஷ்டம் பயமுறுத்தியது. வேறு வழியின்றி தனது பெரியப்பா நடத்தி வந்த வெண்கலப் பட்டறைக்குத் தினக்கூலியாக வேலைக்குச் சென்றிருக்கிறான்.

இருநூறு டிகிரி சென்டிகிரேடு கொதி நிலையில் வெண்கலத்தைத் திரவமாகக் காய்ச்சி, இதுபோன்ற பட்டறைகளில் பயன்படுத்துவது வழக்கம். அன்று கொதித்துக் கொண்டிருந்த வெண்கலக் குழம்பை, குழாய் வழியே மோல்டுகளில் பிடிக்க மகாலிங்கம் முயன்று கொண்டிருக்க, குழாயில் திடீர் அடைப்பு ஏற்பட்டிருக்கிறது. குழாயின் எதிர்முனையில் இருந்த பையன், அடைப்பை சரிசெய்ய, ஏர் கம்பிரஸரில் இருந்து காற்றைக் குழாய்க்குள் செலுத்த, கண் இமைப்பதற்குள் விதி விபரீதமாய் விளையாடி விட்டது! குழாயிலிருந்து சில துளிகள் குழம்பு மகாலிங்கம் மீது தெரித்ததால் ஆ.ஆ...

என்று வலியில் வாயைத் திறந்திருக்கிறான். அந்த அரை வினாடி இடைவெளியில் ஐம்பது கிராம் வெண்கலக் குழம்பு, மகாலிங்கத்தின் வாய்க்குள் சென்று விட, சென்ற வேகத்தில் உணவுக் குழலை, முழுவதும் பொசுக்கி சாம்பலாக்கியதோடு மூச்சுக் குழலிலும், ஓட்டைகள்! விபத்து நடந்த அடுத்த விநாடி அம்மா என்று கூட கத்தத் திராணியற்று நினைவிழந்த மகாலிங்கத்தை, திருநெல்வேலி அரசுப் பொது மருத்துவமனையில் சேர்த்திருக்கிறார்கள்.

அங்கே மூச்சுக் குழலில் ஏற்பட்ட ஓட்டைகளைத் தற்காலிகமாக அடைத்து, சிகிச்சை அளித்திருக்கிறார்கள். அதன் பிறகு மகாலிங்கம் உயிர் வாழ, உணவுப் பொருள்களை திரவ வடிவில் உட்செலுத்திக் கொண்டது, வயிற்றில் துளையிட்டுப் பொருத்தப்பட்ட ரப்பர்க் குழாய் வழியாகத் தான். இதற்கிடையில் நுரையீரலில் நோய்த் தொற்று ஏற்பட்டு, தொண்டைக் குழியில் விரல் நீளப் புழுக்கள் உற்பத்தியாகி, துர்நாற்றம் அடிக்க, மகாலிங்கத்தைத் தொட்டு மருத்துவம் பார்க்க எந்த மருத்துவரும் பக்கத்திலேயே வரவில்லை.



* டாக்டர் ராஜ்குமார்



* சிகிச்சைக்குப் பின் மகாலிங்கம்

வாழ்க்கையின் இறுதிக்கட்டத்தில் பையன் இருக்கிறான். அவன் விருப்பப்பட்டதை வாங்கிக் கொடுங்கள் என்று எல்லோரும் சொன்னார்களே தவிர, அதைக் கூட அவன் சுவைத்துச் சாப்பிட முடியாது என்பதை எல்லோரும் மறந்து போனார்கள். ஆனால் மகாலிங்கம் மனசுக்குள் மட்டும் நம்பிக்கையும், தைரியமும் வற்றிவிடவில்லை. 'நீ சாதிக்காமல் சாக மாட்டாய்' என்று உள்ளுணர்வு சொல்லிக் கொண்டே இருந்திருக்கிறது.

திருநெல்வேலியிலிருந்து அறுநூறு கிலோ மீட்டர் தள்ளி சென்னையில் செயல்பட்டுக் கொண்டிருந்த 'சுயம்' அமைப்பின் இளைஞர்களுக்கு மகாலிங்கம் பற்றித் தெரிய வந்த போது துடித்துப் போனார்கள். இந்த அமைப்பைச் சேர்ந்த உமா, தமது நண்பர்கள் சிலருடன் நேரடியாகத் திருநெல்வேலிக்குச் சென்று, அவரை ரயிலில் சென்னைக்கு அழைத்து வந்திருக்கிறார்கள்.

லட்சக்கணக்கில் பணபலம் கொண்ட சேவை நிறுவனம் அல்ல இவர்களுடையது. சுயம் அமைப்பில் உள்ள ஐம்பதுக்கும் அதிகமான இளைஞர்கள் அத்தனை பேருமே ஏதேனுமொரு வேலையில் இருந்தபடியே மாதச் சம்பளத்தில் ஒரு தொகையைச் சேமித்து, அதைக் கொண்டு கடந்த ஏழு ஆண்டுகளாக இவ்வமைப்பை நடத்தி வருகிறார்கள். படிப்படியான ஆபரேஷன்கள் மூலம் திரும்பவும் மகாலிங்கத்தைச் சாப்பிட வைத்து விடலாம் என்ற நம்பிக்கையில் களத்தில் இறங்கியவர்களுக்கு முதல் முட்டுக்கட்டை பணம்!

"மகாலிங்கத்தை நாங்கள் சென்னைக்கு அழைத்து வரும்போது கையில் ஐந்நூறு ரூபாய்தான் இருந்தது. ஆனால் கருணை மிக்க மனிதர்களும் மருத்துவர்களும் நிச்சயம் உதவி செய்வார்கள் என்று நம்பினோம். ஆனால் உதவி கேட்டுப் போன இடங்களில் எல்லாம் எங்களுக்குத் தோல்வி தான்!

''இப்படியே இரண்டு ஆண்டுகள்... சென்னையின் முன்னணி மருத்துவமனைகள் பல, மகாலிங்கத்தைக் கைவிட்டுவிட்ட நிலையில், கீழ்ப்பாக்கத்தில் உள்ள ரிஜிட் மருத்துவமனையின் தலைமை மருத்துவர் சர்ஜன் ராஜ்குமாரைத் தெய்வம் போல் எங்களுக்கு அறிமுகப்படுத்தி வைத்தது.



• மகாலிங்கத்தின் பெற்றோர்

ரோட்டரி கிளப் ஆஃப் சென்னைப் பட்டினம்.

மகாலிங்கத்தின் சோகத்தைக் கேட்ட டாக்டர் எப்படியாவது அவரைச் சாப்பிட வைத்து விடுவோம் என்று படிப்படியாகப் பல கட்ட சிகிச்சை அளித்தார். மருந்து மாத்திரைகளுக்குக் கூட எங்களிடம் பணம் வாங்கிக் கொள்ளாமல், கடந்த பிப்ரவரி மாதம் பத்தாம் தேதி ஏழரை மணி நேர அறுவை சிகிச்சை மூலம் மகாலிங்கம் சாப்பிடும் நிலையை உருவாக்கி சாதனை படைத்து விட்டார்'' என்று ஆனந்தமாய்க் கண்கலங்கினார் உமா.

'கணிதாலயா' என்ற பெயரில் டியூஷன் சென்டர் நடத்தி வருகிறார் உமா. கல்லூரியில் படிக்கும் போது, சென்னை பல்கலைக் கழகம் நடத்திய பர்சனாலிட்டி டெவலப்மெண்ட் பயிற்சி முகாமில் கலந்து கொண்டதால் சமூக சேவையில் ஈடுபாடு வந்தது என்கிறார். நளினி, முத்துராமன், கல்யாணி, லோகேஷ்வரன், லோகநாதன், பிரபாகர், பிரபு என்று மருத்துவமனையில் நாம் சந்தித்த 'சுயம்' குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் இருபதிலிருந்து இருபத்தைந்து வயதுக்கு உட்பட்டவர்கள். சுயம் அமைப்பில் ஐம்பதுக்கு மேற்பட்டவர்கள் இருக்கிறார்கள். ''தலைவர் என்று யாரும் கிடையாது. இது கூட்டு முயற்சியால் செய்யும் சேவை. எங்களில் தனிப்பட்ட யாருக்கும் பெருமையோ, ஈகோவோ கிடையாது. அதனால்தான் கடந்த ஏழு வருடமாக எங்களால் சிறப்பாகச் செயல்பட முடிந்திருக்கிறது'' என்கிறார்கள்.

''டாக்டர் ராஜ்குமாரும், உதவும் உள்ளங்கள் அமைப்பைச் சேர்ந்த சங்கர் மகாதேவனும், உதவியதால்தான் மகாலிங்கத்துக்கு மறுவாழ்வு கிடைத்திருக்கிறது...'' என்று வார்த்தைக்கு வார்த்தை நன்றியோடு சொல்கிறார்கள்.

நவமணி, நாராயணன், பாரதி ஆகிய மூன்று குழந்தைகளை தத்தெடுத்திருக்கிறார்கள் 'சுயம்' அமைப்பினர்.

சினிமா ஆசையில் வீட்டை விட்டு ஓடி வந்து விடும் இளம் பெண்களைக் காவல் துறையின் உதவியுடன் பெற்றோர்களிடம் சேர்ப்பது, பெற்றோர்களால் கல்யாணத்திற்குக் கட்டாயப்படுத்தப்படும் மைனர் பெண்ணின் எதிர்காலத்துக்காக உயர் நீதி மன்றம் வரை சென்று ஜெயிப்பது, இப்படித் தொடர்கிறது 'சுயம்' இளைஞர்களின் சுவடு தெரியாத சமூக சேவை!

மகாலிங்கத்துக்கு அறுவை சிகிச்சை செய்த மருத்துவர் ராஜ்குமாருக்குக் குறைந்தது ஐம்பது வயதாவது இருக்கும் என்று எதிர்பார்த்தபடியே சென்ற நமக்கு இனிய ஆச்சரியம்! டாக்டர் ராஜ்குமாருக்கு முப்பத்தைந்து வயது! இந்தச் சிறிய வயதிற்குள்ளாகவே, குடல், கல்லீரல், மண்ணீரல் தொடர்பான மேஜர் அறுவை சிகிச்சைகளில் பெயர் வாங்கி விட்டார். மகாலிங்கத்திற்கு ஆபரேஷன் நடந்த அன்று இந்தியாவிலேயே முதன் முறையாக 'எண்டோஸ்கோபி' முறையால் மண்ணீரல் ஆபரேஷன் செய்து சாதனை புரிந்திருக்கிறார் டாக்டர் ராஜ்குமார்.

''மகாலிங்கத்தைச் சாப்பிட வைத்து விட்டால் ஒவ்வொரு முறை சாப்பிடுகிற போதும், அவன் என்னை வாழ்த்திக் கொண்டே இருப்பான். அதுதான் எனக்குக் கிடைக்கும் மிகப் பெரிய ஃபீஸ்'' என்றார் டாக்டர் ராஜ்குமார் மனப்பூர்வமாக!

- ஆர்.சி. ஜெயந்தன்

படங்கள் : **ஜரிஸ்**

செ.கு. தமிழரசன்
தேசிய பொதுச் செயலாளர்
இந்தியக் குடியரசுக்கட்சி

“நாங்கள் தலையாட்டிப் பொம்மைகளல்ல!”



பல்வேறு பெரிய கட்சிகளே, சிதறி, வெவ்வேறு அமைப்புகளாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கும் போது, ஒன்றரை கோடி மக்கள் தொகையுடைய தலித் சமூக அமைப்புகள் பல்வேறு சிறு, சிறு பிரிவு களாகப் பிரிந்து இருப்பதில் ஆச்சர்யம் இல்லை.

எங்கள் குடியரசுக் கட்சியைப் பொறுத்த மட்டில் எண்பது ஆண்டுகால பாரம்பரியம் உண்டு.

தமிழகத்தில் குறைந்தபட்ச தலித் ஒற்றுமை, தலித் வாக்கு வங்கி உருவாக்க வேண்டும் என்ற அடிப்படையில் சகோதரர்கள் கிருஷ்ணசாமி, திருமாவளவன் ஆகியோரோடு ஒருங்கிணைந்து த.மா.கா. ஆதரவோடு கடந்த நாடாளுமன்றத் தேர்தலை நாங்கள் சந்தித்தோம். வேலூரிலும், தர்மபுரியிலும் பொதுத் தொகுதிகளில் பரீட்சார்த்தமாகப் போட்டியிட்டோம். வரும் சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.க. த.மா.கா. உள்ளிட்ட மதச்சார்பற்ற சக்திகளெல்லாம் ஒருங்கிணைந்து மதவாத பா.ஜ.க.வையும், மக்கள் விரோத – தலித் விரோத தி.மு.க. அரசையும் வீழ்த்த வேண்டும் என்பதுதான் எங்கள் நோக்கம். தி.மு.க. அரசைப் பொறுத்த வரையில் அது தலித் விரோத அரசு என்பதுதான் எங்கள் மதிப்பீடு. கடந்த ஐந்தாண்டு காலத்தில் அவர்கள் தலித்துகளுக்கு எதிராக மேற்கொண்ட நடவடிக்கைகளைப் பட்டியலிட்டால் அது நீண்டு கொண்டே போகும். தேர்தல் நெருங்கும் இந்தச் சமயத்தில் கூட பதவி உயர்வில் இடஒதுக்கீடு வழங்கும் 44ம் எண்ணுள்ள அரசு ஆணையை ரத்து செய்துள்ளதை, தலித் மக்கள் மிக வேதனையோடு எதிர்த்துக் கொண்டிருப்பதை நாடறியும். சமத்துவபுரம் என்பது மிக நாசூக்காக, தலித் மக்களுக்கு எதிராக இழைக்கப்படும் அநீதி. இந்த நிலையில் தி.மு.க. அரசைத் தோற்கடிக்க வேண்டியது எங்களது கடமையாகிறது. எனவே நாங்கள் அ.தி.மு.க., த.மா.கா. உள்ளிட்ட மதச்சார்பற்ற கூட்டணியில் இருக்கிறோம்.

பா.ம.க. இந்தக் கூட்டணியில் இருப்பதற்கு எங்களுக்கு ஆட்சேபணை கிடையாது. கூட்டணியில் இருக்கும் எல்லா கட்சிகளுக்கும் தனித் தனி செயல் திட்டங்கள், கொள்கைகள் இருக்கின்றன.

தலித்துகள் தலையாட்டி பொம்மைகளாகவும் எடுப்பார் கைப்பிள்ளையாகவும் இருப்பார்கள் என்று சிலர் நம்புகிறார்கள். ஆனால் தலித்துகள் அப்படிப்பட்டவர்கள் அல்ல; மகத்தான சக்தி பெற்றவர்கள் தலித்துகள். தங்களது கொள்கை, தங்களுக்கான இயக்கம், தங்களுக்கான தலைமை என்பதிலே ஒரு மாறுபட்ட பார்வையோடு தற்போது தலித்துகள் உருவாகி வருகிறார்கள். ஒரு வலிமையான தலைமை உருவாகும்போது இம் மக்கள் ஒன்றுபட்ட உணர்வோடு பொங்கி எழுந்து தங்களை அடையாளம் காட்டுவார்கள். அந்த நிலைமையை உருவாக்கத்தான் இந்தியக் குடியரசு கட்சி எல்லா நிலைகளிலும் திட்டமிட்டுப் பணியாற்றி வருகிறது.

படம் : **ராஜன்**



முதுபனி நிலவு

வருணின் இருதயம் ஒரு கடிகாரத்தின் பெண்டுலமாய் மாறி மார்பின் இடது வலது விலாப்பகுதிகளில் போய் மோதித் திரும்பியது. பின்னங் கழுத்தில் கணிசமாய் வியர்த்த வியர்வை முதுகுப் பரப்பில் ஒரு கால்வாயாக உருவாகி வழிந்தது. மூளையில் சில ந்யூரான்கள் சிவப்பாய் ஒளிர்ந்தன.

ராஜேஷ்குமார்

8

'இந்த இடம் சரியில்லை...! இவனோடு புறப்பட்டு வந்திருக்கக் கூடாது... அதற்குப் பதிலாக லாயல் க்ரூப்ஸ் எம்.டி. தயானந்திடமே போய், தான் ஜெயிலில் இருந்த உண்மையைச் சொல்லியிருக்கலாம். அவருக்கு இஷ்டமிருந்தால் வேலைக்கு வைத்துக் கொள்ளட்டும். இல்லாவிட்டால் ஒரு 'குட்பை' சொல்லிவிட்டு வேறு வேலை தேடக் கிளம்பினால் போயிற்று...!'

"வருண்..."

காதுக்கு வெகு பக்கத்தில் பெப்பர்மின்ட் வாசனையோடு பர்வதராஜகுமாரியின் குரல் கேட்டது.

வருணின் எண்ண ஓட்டம் சிதைந்து சுய உணர்வுக்கு மீண்டான்.

"ம்..."

"என்ன யோசனை...?"



"ஒண்ணுமில்லை..."

"இப்படி... வேர்க்குது! பயமாயிருக்கா...?"

கண்டுபிடித்து விட்டான்!

இவளிடம் பயத்தைக் காட்டிக் கொள்ளக் கூடாது!

"எனக்கென்ன பயம்...?"

"உள்ளே போகலாமா?"

"ம்..."

இருவரும் நிசப்தமான பங்களாவை நோக்கி நடந்தார்கள். சவுக்கு மரங்களுக்கு அப்பால் கடல் அலைகள் ஆக்ரோஷமாய்ச் சீறுவது கேட்டது. உப்புக் காற்று முகத்தில் மோதி பிசுபிசுத்தது.

போர்டிகோ படிகள் ஏறி வராந்தாவில் நடைபோட்டு அந்தப் பழங்கால பெரிய மரக்கதவுக்கு முன்பாய் வந்து நின்ற பர்வதராஜகுமாரி அந்தக் கதவை மெல்லத் தள்ளினாள். சப்தமே காட்டாமல் கதவு திறந்து கொள்ள உள்ளே ஹால் அரையிருட்டில் இருந்தது.

"வாங்க... வருண்..."

உள்ளே நுழைந்தார்கள். வருண் பிரமித்தான். ஹாக்கி மைதானம் போன்ற பெரிய ஹால். தொங்கும் லஸ்தர் விளக்குகளுக்குக் கீழே நீலநிற வெல்வெட் சோபாக்கள்.

"வருண்..."

"ம்..."

"அந்த சோபாவில் உட்கார்ந்து ஒரு ஃபைவ் மினிட்ஸ் வெய்ட் பண்ணுங்க. நான் இப்ப வந்துடறேன்..." சொல்லிவிட்டு பக்கவாட்டில் தெரிந்த மாடிப்படிகளை நோக்கிப் போனாள் அவள்.

வருண் தயக்கமாய் நடைபோட்டு, சோபாவுக்குப் போய்ச் சாய, அது அவனை அப்படியே மெத்தென்று உள்வாங்கிக் கொண்டது. யாராவது பார்வைக்குக் கிடைக்கிறார்களா என்று ஹால் பூராவும் பார்வையைத் துரத்திப் பார்த்தான் வருண்.

யாரும் கிடைக்கவில்லை. ஹாலின்

எல்லா திசைகளிலும் ஆழ்கடலின் நிசப்தம்.

சரியாய் ஐந்து நிமிடங்கள் கரைந்திருந்த போது சோபாவுக்கு முன்பாய்ப் போடப்பட்டிருந்த டீபாயின் மேல் அந்த இன்டர்காம் டெலிபோன் குரல் கொடுத்தது.

யாராவது ரிஸீவரை எடுக்க வருவார்களோ என்று காத்திருந்து பார்த்துவிட்டு பின் ரிஸீவரை எடுத்து காதை உரச விட்டான். மறுமுனையில் பர்வதராஜகுமாரியின் குரல்.

"வருண்..."

"என்ன...?"

"மேலே வாங்க... மாடியில் இரண்டாவது ரூம்..."

அவள் சொல்லிவிட்டு ரிஸீவரை சாத்தி விட, வருணும் ரிஸீவரை வைத்துவிட்டு எழுந்தான். பக்கவாட்டில் 'S' போட்டுக் கொண்டு போன அரையிருட்டான மாடிப் படிகளில் ஏறினான். தலைக்கு மேலே எரியாத சாண்ட்லியர் விளக்குகள் காற்றுக்கு அசைந்தன. மாடிப்படிகளின் ஓரங்களில் பித்தளைப் பாத்திர தொட்டிகளில் 'ஷேடோ ப்ளாண்ட்ஸ்' புஷ்டியாய்த் தெரிய வருண், நிதானமாய் ஏறினான். மரத்தாலான மாடிப் படிகள் மிகச் சன்னமாய் அதிர்ந்தன.

"க்ர்ர்ர்க்... க்ர்ர்ர்க்."

பயத்தில் இப்போது இதயம் முரண்டு பிடிக்க நெற்றியில் புதிதாய் வியர்வை.

'வந்தது தப்போ...?'

'நீ இனி திரும்பிப் போக முடியாது வருண்...! வந்தது வந்தாயிற்று. பிரச்னையை எதிர்கொள்ள வேண்டியதைத் தவிர வேறு வழியில்லை...!'

மாடிப்படிகளின் வளைவில் திரும்பி மேலே ஏற முயன்ற போது வருணின் கால்கள் சட்டென்று 'ப்ரேக்' போட்ட மாதிரி நின்றன.

மேலே படிகளின் ஓரமாய் யாரோ ஒரு நபர் உயரமாய்த் தெரிந்தான்.

கையில் உயர்த்திப் பிடித்த ஏதோ ஒரு ஆயுதம்.

வருணின் வியர்வை சுரப்பிகள் ஒரு மைக்ரோ விநாடியில் அவிழ்ந்து கொண்டன.

மெல்ல ஓரடி பின்வாங்கி நின்றான். ஓடி விடலாமா என்று நினைத்த விநாடி பார்வைக்கு அந்த நிஜம் கிடைத்தது.

அது ஒரு ரோமானிய வீரனின் சிலை.

வருணின் வியர்வை நின்று போய் இருதயம் நார்மலுக்கு வந்து 'லப் டப்' என்று தறி நெய்ய ஆரம்பித்தது.

> "தலைவர் சந்தோஷமா துள்ளிக் குதிச்சுக்கிட்டிருக்காரே, என்ன விஷயம்?"
>
> "அவருக்கு டெபாசிட் கிடைக்கும்னு ஜோசியர் சொல்லிட்டாராம்!"
>
> – வந்தவாசி பா. ஜெயக்குமார்

வருண் மாடிப்படிகளை முடித்துக் கொண்டு மேலே வந்தான். முதல் அறை பூட்டப்பட்டிருக்க இரண்டாவது அறையின் வென்டிலேட்டர் கண்ணாடியில் ட்யூப் லைட் வெளிச்சம் ஒட்டியிருந்தது.

கதவு வெறுமனே சாத்தப்பட்டிருக்க அதன் மேல் மெல்ல கைவைத்துத் தள்ளினான். கதவு, சத்தம் இல்லாமல் பின்வாங்கிக் கொள்ள –

உள்ளே அந்தப் பெரிய அறையில் பர்வதராஜகுமாரி நாற்காலியில் சாய்ந்து உட்கார்ந்தபடி தெரிந்தாள்.

"உட்காருங்க..."

"எங்கே உன்னோட பாஸ்...?"

"அவரை நீங்க பார்க்கிறதுக்கு முன்னாடி நான் உங்க கூட கொஞ்சம் பேசணும்..."

"கார்ல வரும்போதுதான் எல்லாம் பேசிட்டோமே. இனி என்ன...?"

"கொஞ்சம் பாக்கியிருக்கு."

வருண் அவளை எரிச்சலாய்ப் பார்த்தான். "என்னோட பொறுமையை நீ ரொம்பவும் சோதிக்கிறே...! கூப்பிடு உன்னோட பாஸை. அவர் என்கிட்ட பேச வேண்டியதைப் பேசட்டும்..."

"பொறுமை... பொறுமை வருண்...! பாஸ் உங்களை மாதிரி வேலை வெட்டி இல்லாதவரா...? பக்கத்து ரூம்ல ஒரு ஃபாரின் காலுக்காக வெயிட் பண்ணிட்டிருக்கார். ஐம்பது கோடி ரூபாய் பிசினஸ். அவர் பேசிட்டு வர்ற வரைக்கும் இப்படி உட்காருங்க..."

அவளை முறைத்துக் கொண்டே நாற்காலிக்குப் போய் தன் உடம்பைக் கொடுத்தான் வருண்.

"ஏதாவது சாப்பிடறீங்களா வருண்?"

"ஒண்ணும் வேண்டாம்."

"ஹாட் ட்ரிங்க்ஸும் இங்கே அவெய்லபிள்."

"ஒரு மண்ணும் வேண்டாம்..."

"இந்தக் கோபம்தான் அந்தக் கொலைக்குக் காரணமா?"

வருண் முறைக்க அவள் சிரித்தாள்.



"ஓ...கே... ஓ.கே...! உங்க ஃப்ளாஷ்பேக்கை நான் டச் பண்ணலை. நீங்க என்னோட பாஸைப் பார்க்கிறதுக்கு நான் உங்ககிட்ட கொஞ்சம் பேச வேண்டியிருக்குன்னு சொன்னேன். அதைப் பத்தி பேசலாமா?"

"என்ன பேசணுமோ அதைப் பேசு..."

"உங்களுக்கு வேலை போட்டுக் கொடுத்திருக்கிற லாயல் க்ரூப்ஸ் கம்பெனியின் எம்.டி. தயானந்த் என்னோட பாஸுக்குப் பிசினஸ் ரீதியா பரம எதிரி. அந்த எதிரியை பிசினஸ் ஃபீல்டிலிருந்து அப்புறப்படுத்த அவர் எவ்வளவோ முயற்சிகளைப் பண்ணிப் பார்த்துட்டார். முடியலை. தயானந்த் நாளுக்கு நாள் பிசினஸ்ல விஸ்வரூபம் எடுத்துட்டிருக்கார். அந்த விஸ்வரூபத்தைக் கொஞ்சம் தட்டி வைக்கணும். அதுக்காக சில அண்டர் க்ரவுண்ட் வேலைகளை ஆரம்பிச்சு பூஜை போட்டிருக்கோம். இதுல உங்களுக்கும் ஒரு பெரிய பங்கை கொடுக்க பாஸ் திட்டம் போட்டிருக்கார். லாயல் க்ரூப்ஸ்ல நீங்க செக்யூரிட்டியாக வேலை பார்த்துக்கிட்டே சில காரியங்களைப் பண்ணினா போதும்."

வருண் கோணலாய்ச் சிரித்தான்.

"ஓ...! உண்ட வீட்டுக்கு ரெண்டகமா...?"

"எப்படி வேணும்ன்னாலும் வெச்சுக்கலாம். லாயல் க்ரூப்ஸ்ல நீங்க செக்யூரிட்டியா வேலை பார்க்கிறதுக்கு மாதம் சம்பளமா எட்டாயிரம் ரூபாய் கொடுப்பாங்க. ஆனா நாங்க சொல்ற சின்னச் சின்ன வேலைகளை செஞ்சுட்டு வந்தா நாங்க கொடுக்கப் போகிற மாதச் சம்பளம் எவ்வளவு தெரியுமா ரூபாய் ஐம்பதாயிரம்."

வருண் அவளையே பார்த்தான்.

"என்ன அப்படிப் பார்க்கறீங்க...?"

"இதுக்கு நான் ஒத்துக்கலைன்னா...?"

"உங்க ஃப்ளாஷ்பேக்கான ஜெயில் வாழ்க்கை வெளியே வரும். வேலையும் போகும். காதலும் போகும்..."

"அப்பட்டமான ப்ளாக்மெயில்..."

"மே... பி...! உங்க பதில் என்ன...? நீங்க இதுக்கு 'எஸ்'ன்னு சொன்னா என்னோட பாஸைப் பார்க்கலாம். 'நோ'ங்கிறது உங்க பதிலாக இருந்தால் வெளியே போய்க்கிட்டிருக்கலாம்..."

"நோ..." என்றான் வருண்.

"கொஞ்சம் யோசனை பண்ணலாமே...!"

"இதுல யோசனை பண்ண எதுவும் கிடையாது. எனக்கு வேலை கொடுத்த லாயல் க்ரூப்ஸுக்குத் துரோகம் பண்ண மனசாட்சி இடம் கொடுக்கலை. இதை உன்னோட பாஸ்கிட்டே சொல்லிடு..."

"இதோ...! பாஸே வந்துட்டார். அவர்கிட்டேயே ஒரு வார்த்தை சொல்லிட்டு போயிடுங்க வருண்."

அறையின் பக்கவாட்டுக் கதவு திறக்கப்படும் சப்தம் கேட்டு வெளியே போக முயன்ற வருண், திரும்பிப் பார்த்தான்.

தயானந்த் வெளிப்பட்டார்.

யமுனாவுக்குள் ஒரு பூகம்பம் நிலைகொண்டு உறுமியது.

'என்னைப் பார்க்க யார் வந்திருப்பார்கள்?'

'இன்ஸ்பெக்டர் பால்பாண்டியனாக இருக்குமோ?'

ஹரிதாவிடம் சிவப்ரகாசம் கேட்டுக் கொண்டிருந்தார்.

"அண்ணியையா பார்க்க வந்திருக்காங்க?"

"ஆமாப்பா..."

"யார்ன்னு கேட்டியா...?"

"கேட்டேன்ம்ப்பா. அதுக்கு அந்த ஆளு போய் யமுனாவைக் கூட்டிட்டு வான்னு சொல்றாரு..."

யமுனா தவிப்போடு எழ முயல சிவப்ரகாசம் கையமர்த்தியபடி சொன்னார்.

"நீ படுத்துக்கோம்மா. அது யார்ன்னு நான் போய்ப் பார்க்கிறேன்..."

"இல்ல மாமா... என்னோட உடம்புக்கு இப்ப ஒண்ணுமில்லை. அது யார்ன்னு நானே வந்து பார்க்கிறேன்..."

"முக்கியமானவங்களாயிருந்தா நானே கூப்பிடறேன். நீ படும்மா..." சொல்லிவிட்டு அறையிலிருந்து வெளிப்பட்டு ஹாலுக்குள் நுழைந்தார் சிவப்ரகாசம்.

போர்டிகோ வராந்தாவில் அந்த இளைஞன் தெரிந்தான். இலேசாய்ச் சிலும்பிய தலை, பட்டன்கள் இல்லாத சட்டை, பாதி மார்பைக் காட்ட, இடுப்பில் கட்டப்பட்ட ஒரு சிவப்பு லுங்கி, எந்த விநாடியும் அவிழும்

தேவ புத்ருடு



தெலுங்கு ஹீரோ வெங்கடேஷின் 'தேவ புத்ருடு' (தெய்வ மகன்) என்ற படம் ஜனவரி 14ம் தேதி ரிலீசானது. இதில் கச், பூஜ் பகுதிகளில் பூகம்பம் ஏற்படுவதாகவும் மக்களை ஹீரோ காப்பாற்றுவதாகவும் கற்பனையாக இயக்கியிருக்கிறார் இயக்குனர்.

முதல் பதினைந்து நாட்கள் படம் சுருண்டு விட, இருபத்தி ஆறாம் தேதி கச், பூஜ் ஆமதாபாத் பகுதிகளில் நடந்த பூகம்பத்திற்குப் பிறகு தியேட்டர்களில் சக்கைபோடு போடுகிறது இந்தப் படம்!

– ஆமதாபாத் பாண்டு.

அபாயத்தில் இருந்தது. கண்களில் சாராயம் தெரிந்தது.

சிவப்ரகாசத்தைப் பார்த்ததும் கோணலாய் இரண்டடி முன்னால் வந்து, "வணக்கம் பெரீவரே!" என்றான்.

"நீ யாரப்பா...?"

"யமுனா இல்லீங்களா பெரீவரே.....?"

"நீ யார்ன்னு கேட்டேன்..."

"நான் சத்தியமூர்த்தி... யமுனாவுக்கு முறை மாப்பிள்ளை."

சிவப்ரகாசம் திடுக்கிட்டார்.

"என்னது முறைமாப்பிள்ளையா...?"

"ஆமாங்க பெரீவரே... லட்சுமியக்காவோட மகன்னு சொன்னா யமுனாவுக்குத் தெரியும். யமுனாவைக் கூப்பிடுங்க அவளுக்கு என்னைத் தெரியும்..."

சாராயத்தின் நெடி தாங்காமல் தோளில் போட்டிருந்த துண்டால் மூக்கைப் பொத்திக் கொண்டார் சிவப்ரகாசம்.

"சரி! இப்ப உனக்கு என்ன வேணும்?"

"யமுனாவைப் பார்க்கணும்."

"எதுக்கு?"

"ரெண்டு வார்த்தை பேசிட்டுப் போகணும்."

"யமுனா வீட்ல இல்லை..."

"ஏன் பெரீவரே... பொய் சொல்றீங்க...? யமுனா உள்ளாற இருக்கிறா எனக்குத் தெரியும். கூப்பிடுங்க."

"இப்ப நீ போகப் போறியா இல்லையா?"

"இது என்னா நியாயம் பெரீவரே. ஜெயிலுக்குப் போய் ஒரு ரெண்டு வருஷம் உள்ளாரயிருந்துட்டு வந்துட்டா உறவு முறையெல்லாம் அத்துப் போயிடுமா என்ன.... யமுனாவை நான்தான் கட்டிக்கிறதாயிருந்தேன். ஒருத்தனை வெட்டிட்டு ஜெயிலுக்குப் போயிட்டதால ரூட் மாறிப் போச்சு..."

சிவப்ரகாசம் ஆத்திரம் தலைக்கேற காருக்குப் பக்கத்தில் நின்றிருந்த டிரைவரைப் பார்த்து இரைந்தார்.

"மாணிக்கம்."

"அய்யா..."

"இந்த ஆளை வெளியே தள்ளி கேட்டைச் சாத்து."

மாணிக்கம் அவனைத் தள்ளிக் கொண்டு போக சிவப்ரகாசம் திரும்பினார்.

ஹாலில் எல்லோரும் இறுகிய முகங்களோடு நின்றிருந்தார்கள்.

மையமாய் யமுனா.

சிவப்ரகாசம் கோபமாய் அவளை நெருங்கினார். "என்னம்மா இது... எவனோ ஒரு குடிகாரப் பய அதுவும் ஜெயிலுக்குப் போனவன் நம்ம வீட்டு வாசலுக்கு வந்து உனக்கு முறை மாப்பிள்ளைன்னு சொல்லிட்டுப் போறான்...! அப்பா அம்மா எந்தச் சொந்த பந்தமும் இல்லாத உன்னை என் பையன் விரும்பிட்டான்கிற ஒரே ஒரு காரணத்துக்காகத்தான் இந்த வீட்டுக்கு மருமகளா உன்னைக் கொண்டு வந்தோம். உறவுன்னு சொல்லிக்க யாரும் கிடையாதுன்னு நீயும் சொல்லியிருக்கே..."

"மாமா... அது... வந்து..."

"எனக்கு இந்த இழுப்பு பேச்செல்லாம் வேண்டாம். அந்த ஆளு உனக்கு முறை மாப்பிள்ளையா?"

யமுனா தயங்கி விட்டு மெல்ல தலையசைத்தாள். "ஆமா... மாமா..."

சிவப்ரகாசத்தின் விழிகளில் சிவப்பு பரவியது. "இந்த விஷயத்தை நீ ஏன் மறைச்சே..? ஒரு விஷயத்தை மறைக்கிறதும் பொய் பேசறதும் இந்த வீட்டைப் பொறுத்த வரைக்கும் மன்னிக்க முடியாத குற்றம்ன்னு உனக்குத் தெரியாதா...?

யமுனா உறைந்தாள்.

(தொடரும்)

அலை ஓசை அஞ்சல் அட்!



• மூப்பனார்



முல்லைவேந்தன்



தியாகராஜன்

● மூப்பனாருக்குப் பிரசார ஊர்தி தயாராகிறது. உடல்நிலை சரியில்லாததால் ஓய்வு எடுப்பதற்கு வசதியாக ஊர்தியைத் தயார் செய்கிறார்கள். திருநாவுக்கரசு கடந்த ஆறு தேர்தல்களாகப் பயன்படுத்தி வரும் பிரசார ஊர்தியைச் சமீபத்தில் பார்வையிட்ட மூப்பனார், சில மாற்றங்களுடன் அதேபோன்ற வாகனத்தைத் தயார் செய்யச் சொல்லியிருக்கிறார். இது சம்பந்தமான ஏற்பாடுகளைக் கவனிப்பவர் மூப்பனாரின் மகன் கோவிந்தவாசன்!

● பொதுவாகவே அறிவாலயத்துக்கு வருகை தரும்போது, மாலையில், கட்சிப் பிரமுகர்களோடு கலந்தாலோசித்துவிட்டு எட்டு மணிக்குத் துவங்கும் சன் தொலைக்காட்சி செய்தியைப் பார்த்துவிட்டுத்தான் வீட்டிற்குக் கிளம்புவார் கலைஞர். ஆனால் சமீப காலங்களில் ஒரு மாற்றம். எட்டு மணிக்கே கிளம்பி விடுகிறாராம்.

● இப்போதுள்ள தி.மு.க அமைச்சர்களில் குறைந்தது அரை டஜன் அமைச்சர்களுக்கு மீண்டும் சீட்டு கிடைக்காது என்று அறிவாலய வட்டாரங்களில் கிசுகிசுக்கப்படுகிறது. அந்தப் பட்டியலில் முதலில் இருப்பவர் முல்லை வேந்தன். தொடர்பவர்கள் செங்குட்டுவன், அந்தியூர் செல்வராஜ், ஜெனிபர் சந்திரன், பிச்சாண்டி, என்.கே.கே. பெரியசாமி ஆகியோராம்.

● போயஸ் தோட்டத்தில் அம்மாவுக்குச் சசிகலாவைத் தவிர உதவியாக இருப்பவர்கள் இருவர். ஒருவர் நமது எம்.ஜி.ஆர். தினசரியின் ஆசிரியர் புலவர் சங்கரலிங்கம். இன்னொருவர் அவரது மகன் பூங்குன்றன்.

● சமீபத்தில் காங்கிரஸிலிருந்து அ.தி.மு.க.வுக்கு மாறினார் சென்னை நகர காங்கிரஸ் பிரமுகரான கராத்தே தியாகராஜன். காங்கிரஸில் இருந்தாலும் அடிதடி அரசியலில் இருந்து அடுப்பங்கரை அரசியல் வரை அனுபவம் உள்ள கராத்தே தியாகராஜனை அம்மா இழுத்துக் கொண்டதற்குக் காரணம் சென்னை நகரத்தில் கிட்டுவுக்கெல்லாம் சவால் விடும் அளவுக்கு ஒரு வலுவான கட்சிப் பிரமுகரை உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்தில்தானாம்! தியாகராஜன் கட்சிக்கு வந்துவிட்டப்படியால் தம் பதவிக்குத் தலைவி வேட்டு வைத்து விடப் போகிறாரே என்று பதற்றப்பட்டுக் கொண்டிருக்கிறாராம் தென் சென்னை அ.தி.மு.க செயலாளர் 'வீடியோ' சரவணன்.

● பா.ம.க சார்பில் 'தமிழோசை' என்ற ஒரு தினசரி பத்திரிகை தொடங்க இருப்பதாக சில நாட்களுக்கு முன் பேச்சு அடிபட்டது. இப்போது அது பற்றி மறு சிந்தனை செய்கிறாராம் டாக்டர். ஆனால் அவரது மகன் அன்புமணி பத்திரிகை துவங்குவதில் பிடிவாதமாக இருக்கிறாராம்.

● மயிலை கிருஷ்ணசாமி அவென்யூவில் கண்ணப்பனின் மக்கள் தமிழ்தேசம் அலுவலகம் இருக்கிறது. அதே இடத்தில் முன்பு காங்கிரஸ் அலுவலகம் இருந்தது. அந்த 'அதிர்ஷ்டக் காற்று' தன் மீதும் வீசக்கூடாதென்று, வாஸ்துபடி கட்டடத்தில் சில மாற்றங்களைச் செய்ய இருக்கிறாராம் கண்ணப்பன்!

— ரமா

பங்காரு அடிகளாருக்கு மார்ச் முதல் வாரத்தில் மணி விழா. 'அம்மா' என்று லட்சக்கணக்கான மக்களால் பக்திப் பெருக்குடன் அழைக்கப்படும் அடிகளாரைப் பற்றி ஒரு சிலிர்ப்புடன் இங்கே சொல்கிறார் விசாலாட்சி நெடுஞ்செழியன்.



"முக்காலமும் உணர்ந்தவர்!"



என் மகனுக்கு 1977ல் திருமணம் நடைபெற்றது. மூன்று ஆண்டுகளாகியும் மகப்பேறு கிட்டவில்லை. எங்களுக்கு ஓரே மனத்தாங்கல். நண்பர்களும், உறவினர்களும் மேல்மருவத்தூர் பற்றிச் சொல்லக் கேட்டு 1980ம் ஆண்டு அங்கு சென்றேன். அம்மனை தரிசித்து அருள் நிலையிலிருந்த அடிகளாரை அணுகி மனத்தாங்கலைச் சொன்னேன். "நானே உன் இல்லத்தில் எழுந்தருள்கிறேன்; பின்னர் ஆண் வாரிசும் தருகிறேன். விரைவில் நீ அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெறப் போகிறாய்; அதன் பிறகு இங்கே இருந்துதான் தொண்டு செய்வாய்'' என்று கூறினார்கள். எனக்கு ஒரே ஆச்சர்யம்! 'நான் யார் என்று சொல்லாமலேயேதான் சக்தி மடத்திற்குச் சென்றேன். ஆனால் நான் அரசுப் பணியிலிருப்பதும், ஓய்வு பெறப் போவதும் அருள்வாக்கில் சொல்லப்பட்டது கேட்டு நெகிழ்ந்து போய்விட்டேன். அதற்கு முன் நிறைய மகான்களையும் துறவிகளையும் சந்தித்திருக்கிறேன். ஆனால் அடிகளாரைத் தரிசனம் செய்தது, அதற்கு முன் பெற்றிராத ஒரு மன நிறைவைக் கொடுத்தது. சென்னைக்குத் திரும்பிய பிறகு அடுத்த தரிசனத்திற்காக என் மனம் ஏங்கியது. அதன் பிறகு என் மேல்மருவத்தூர் விஜயம் வாரா வாரம் தொடர்ந்தது.

எந்த ஒரு ஆலயத்திலும் இல்லாத சிறப்பு, மேல்மருவத்தூரில் பெண்களுக்குக் கொடுக்கும் முக்கியத்துவம். பெண்களே கருவறைக்குச் சென்று குங்கும அர்ச்சனை, யாகம் செய்யலாம். 'உள்ளத் தூய்மை' மட்டும்தான் முக்கியம். இன்று மேல்மருவத்தூர் என்றாலே பெண்களுக்கான ஆலயம் என்று வழி வகுத்து விட்டார் அடிகளார்.

1980-82 கால கட்டங்களில் ஆன்மிக மாநாடுகளைப் பெண்களே நடத்த வேண்டும் என்று தீர்மானித்தார் அடிகளார். மேல்மருவத்தூரிலும், சென்னையிலும் மாநாடுகள் நடைபெற்றன. அந்த மாநாடுகளை நடத்தும் பொறுப்பை அம்மா எனக்கு வழங்கினார்கள். பல்லாயிரக்கணக்கான பெண்கள் 'ஓம் சக்தி' என்று உச்சரித்தவாரே ஊர்வலம் சென்ற போது ஆன்மிக விழிப்புணர்ச்சி பெற்றார்கள். அப்போது சென்னையில் மழை பொய்த்துப் போய் இருந்தது. எங்கும் குடிநீர் பஞ்சம். 'மாநாடு முடிந்தபின் மழை பெய்யும்'என்று அம்மா அருள்வாக்குச் சொன்னார்கள். அது போலவே மழை ஒரு போடு போட்டது. மக்கள் வியந்து போனார்கள். அம்மா தொட்டது துலங்கும். முக்காலமும் உணர்ந்தவர் அவர்.

இன்று வரை என் வாழ்க்கையை வழி நடத்திச் சென்று கொண்டிருப்பவர் அம்மா தான். எனக்கு வரப்போகும் இன்னல்களைப் பற்றி முன்கூட்டியே கனவில் வந்து எச்சரிக்கை மணி அடிப்பவரும் அவர்தான். எனக்கு மட்டுமல்ல; லட்சக்கணக்கான அவரது பக்தர்களுக்கு உணர்விலும் உடலிலும் ஒளிமுகம் காட்டிக் கொண்டிருப்பவர் அவர் தான். ஓம் சக்தி!

சந்திப்பு: ப்ரியன் ஸ்ரீநிவாசன்
படம்: ராஜன்



ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணி இந்தியாவுக்குள் நுழையும் முன்பே ஆரம்பித்துவிட்டது கிரிக்

சபாஷ், சரியான போட்டி!

கெட் போர்.

"தொடர்ந்து பதினைந்து போட்டிகளில் வலுவில்லாத அணிகளுடன் மோதிதான் ரெக்கார்டு வைத்திருக்கிறது ஆஸி. அணி" என்று கங்குலி போட்டு வைக்க, அடுத்த நொடியே முகத்திலறைந்தது மாதிரி பதில். "அந்த வலுவில்லாத அணிகளுள் இந்தியாவையும் தோற்கடித்திருக்கிறோமே" என்று.



• வி. சிவராமகிருஷ்ணன்

'ஏண்டா வாயைக் கொடுத்தோம்' என்று கங்குலி நினைத்திருக்கலாம். இருந்தாலும், "இந்திய மண்ணில் இந்திய அணியை தோற்கடிக்காவிட்டால் நாங்கள் பெற்ற பதினைந்து வெற்றிகளுக்கும் அர்த்தமில்லாமல் போய் விடும்" என்று ஸ்டீவ் வாஹ் உறுமியது நம் அணியினரைக் கொஞ்சம் உஷார் படுத்தியிருக்கிறது.

"என்னதான் இருந்தாலும் பிரஷர் என்பது ஆஸி. அணிக்குத்தான். தொடர்ந்து வெற்றிகளைப் பெற்ற அணி இப்போது தோற்றால் இந்திய அணிக்குத்தான் பெருமை. இந்திய அணியினர் அவர்கள் வெல்ல வாய்ப்புக் கொடுக்க மாட்டார்கள்" என்கிறார் இந்திய அணியின் முன்னாள் பேட்ஸ்மேன் ஒருவர்.

ஸ்டார் பேட்ஸ்மேன்களான சச்சின் கங்குலி, டிராவிட் ஆகிய மும்மூர்த்திகளின்





கிராஃபிக்ஸ் : ராஜன்

கையில்தான் இந்திய அணியின் ஆட்டம் இருக்கிறது. இவர்களால் மட்டுமே ஆட்டத்தின் போக்கை மாற்ற முடியும். மற்ற ஆட்டக்காரர்கள் இருந்தாலும் தங்களை நிரூபிப்பார்களா? என்பது சந்தேகமே.

கடந்த முறை ஆஸி. அணி இந்தியா வந்தபோது ஷேன் வார்னே பந்தை சச்சின் விளாசியதில் இந்தியாவின் வெற்றி அடங்கியிருந்தது.

"அதையும் இதையும் ஒப்பிடாதீர்கள். அது நடந்து முடிந்த கதை. அப்போதைய நிலைவேறு. இப்போதைய நிலைமை வேறு. போட்டி இந்திய அணிக்கும் ஆஸி. அணிக்கும்தான். குறிப்பிட்ட பந்துவீச்சாளரையோ பேட்ஸ்மேனையோ குறிப்பிடாதீர்கள்" என்கிறார் சச்சின்.

"உலகின் தலைசிறந்த அணிதான் அந்த அணி. ஆனால் அதைத் தோற்கடிக்க முடியாது என்பதில்லை. சமீபத்தில் நடந்த நைரோபி போட்டியில்கூட வென்றிருக்கிறோம்" என்கிறார் அவர்.

ஆஸி. அணியைப் பொறுத்தவரை பந்து வீச்சு, பேட்டிங், பீல்டிங் என்ற எல்லா நிலைகளிலும் யானை பலம் கொண்டிருக்கிறது. வேகப்பந்து வீச்சாளர்களான மெக்ராத், கில்லெஸ்பி, பிளம்மிங், (நல்லவேளையாக பிரெட்லீ ஆப்சென்ட்!) ஸ்பின்னர்



அந்தச் சிவப்பு கைக்குட்டை!

"எங்களுக்கு வெற்றி என்பது பழக்கமாகி விட்டது!" என்கிறார் வரிசையாகப் பதினைந்து மாட்சுகளில் வெற்றி வாகை சூடியிருக்கும் ஆஸி. கேப்டன் ஸ்டீவ் வாஹ்.


• ஸ்டீவ் வாஹ்

"வாஹ் ஒரு பர்ஃபெக்ஷனிஸ்ட். அதோடு அவருடைய மன உறுதி இதர ஆட்டக்காரர்களையும் நிமிஷத்தில் தொற்றிக்கொண்டு விடுகின்றது. உலகத்திலேயே சிறந்த அணியாக ஆஸ்திரேலியா இருப்பதற்கு இது ஒரு முக்கியமான காரணம்!" என்கிறார் மார்க் டெய்லர், ஆஸ்திரேலியாவின் முந்தைய காப்டன்.

எப்பொழுது ரன்கள் அத்தியாவசியமாகத் தேவைப்படுகிறதோ வாஹ் அடித்துத் தள்ளி விடுகிறார்! இது ஒரு பெரிய விஷயம். சென்ற உலகக் கோப்பை போட்டியில், ஆஸ்திரேலியா – தென் ஆப்ரிக்கா போட்டியில் 110 பந்துகளில் 120 அடித்து ஆஸ்திரேலியா அணியை இறுதிச் சுற்றுக்குக் கொண்டு சென்றவர் அவர் தானே?

"புதுமையான யுக்திகளைக் கண்டுபிடிக்கும் திறமையும் அதை நடைமுறைப்படுத்தும் தைரியமும் ஆஸி காப்டனுக்கு மட்டுமே உண்டு!" என்கிறார்கள் கிரிக்கெட் ஜாம்பவான்கள்.

வாஹ் இதுவரை ஆறு புத்தகங்கள் எழுதியிருக்கிறாராம்! எல்லாமே அவருடைய விளையாட்டு அனுபவங்களைப் பற்றி. நேரம் கிடைக்கும்போதெல்லாம் கல்கத்தாவுக்கு வந்து 'உதயன்' என்ற அனாதைக் குழந்தைகள் இல்லத்துக்கு விஜயம் செய்யும் பழக்கமும் அவருக்கு உண்டு என்கிறார்கள்.

வாஹ் சென்ட்டிமெண்ட் ஏதாவது? அது இல்லாமலா? ஒரு சிவப்பு கைக்கூட்டை எப்பொழுதுமே அவரது பாக்கெட்டில் இருக்குமாம். அதை லாண்டரிக்குக்கூட அனுப்பாமல் அவரே துவைத்துக் கொள்வாராம். "பைத்தியக்காரத்தனம்தான். ஆனால் அது இருந்தால் எனக்கு ஒரு தனி உற்சாகம்" என்கிறார் ஸ்டீவ் வாஹ் புன்சிரிப்போடு.

கள் வார்னே, மில்லர் ஆகியோர் மிரட்டும் வகையில் இருக்கிறார்கள்.

இவர்களின் பந்து வீச்சைப் பதம்பார்த்த அனுபவம் நம் மும்மூர்த்தி பேட்ஸ்மேன்களுக்கு இருக்கிறதென்றாலும் ஆஸி. மண்ணில் நம்மைத் திணறடித்தவர்களும் இவர்கள்தான்.

"இந்திய அணியில் பந்துவீச்சு, பீல்டிங் இரண்டிலும் நம்பகத்தன்மை இல்லை" என்கிறார் ரஞ்சி மற்றும் தென் மண்டல முன்னாள் ஆட்டக்காரர் வி. சிவராமகிருஷ்ணன்.

"ஆஸி. அணி வலுவானதுதான் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் நமது பிட்ச் இந்திய அணிக்குச் சாதகமானது. வெல்வதற்கான வாய்ப்புகள் அதிகம் இருந்தாலும் நமது ஓபனிங் பேட்ஸ்மேன்களைப் பொறுத்தே இந்த வெற்றி இருக்கிறது. அனில் கும்ளே இல்லாதது நம் அணிக்குப் பெரும் பின்னடைவு. அவரின் இடத்தை ஹிர்வாணி ராகுல் சங்வி, ஹர்பஜன்சிங், நிறைவேற்றினால் நம் வெற்றி நிச்சயம். ஆனால் ஆஸி. அணியினர் எல்லாருமே 'பார்மி'ல் இருக்கிறார்கள். அவர்கள் அனைத்து நிலைகளிலும் சிறப்பாகச் செயல்படுகிறார்கள். பிறகு ஸ்டீவ் வாஹ். இந்த டேஞ்சரஸ் கேப்டனின் சரியான கணிப்பு நிலை குலைய வைக்கிறது." என்கிறார் சிவராமகிருஷ்ணன்.

ஆனால் இந்திய கேப்டன் கங்குலி இதைப் பற்றியெல்லாம் கவலைப்படவில்லை. "அவர்களின் பலம், பலவீனம் பற்றிக் கவலையில்லை. எங்கள் பலத்தின் அடிப்படையில்தான் நாங்கள் ஆட இருக்கிறோம். கடந்த ஆறு மாதமாக சிறப்பாகத்தான் ஆடி வருகிறோம். இந்தியாவுடனான போட்டி ஆஸிக்குச் சவாலாகத்தான் இருக்கும்.

— சலாம்ஜி
படம் : ஜரிஸ்

KALKI SHOPPING PAGE



ஸ்ரீ சாரதா சக்தி பீடம்



72, காமராஜ் சாலை, பழைய பெருங்களத்தூர்,
(வழி) தாம்பரம், சென்னை - 63. Tel & Fax: 237 6129.
E-mail: sspeetam@md3.vsnl.net.in, sspeetam@hotmail.com
Please visit our website at: www.intamm.com/sspeetam

குருகுல் ஏழை மாணவர்களுக்கு உதவுங்கள்

• காலை சிற்றுண்டி (150 பேருக்கு)	ரூ.	1,000/-
• மதிய உணவு	ரூ.	2,000/-
• இரவு சிற்றுண்டி	ரூ.	1,000/-
• பிஸ்கட், மற்றும் பால் வழங்குதல்	ரூ.	750/-
• ஒரு மாணவனுக்கு ஓராண்டிற்கு கல்வி உதவித் தொகை	ரூ.	1,000/-
• ஒரு மாணவனுக்கு கம்ப்யூட்டர் பயிற்சி (ஓராண்டிற்கு)	ரூ.	3,000/-
• ஒரு மாணவனுக்கு பராமரிப்பு செலவு ஓராண்டிற்கு (உணவு, உடை, கல்வி)	ரூ.	9,000/-
• குருகுலத்தின் ஒரு மாதத்திற்கான பராமரிப்பு செலவு	ரூ.	2,00,000/-



-: விவேகானந்தர் தேசீய இயக்கம் :-

ஸ்ரீ சாரதா சக்தி பீடத்தின் சார்பில் "விவேகானந்தர் தேசீய இயக்கம்" என்ற அமைப்பு கிராமபுறத்தில் உள்ள ஏழை மாணவ, மாணவியர்களின் கல்வி, மத நல்லிணக்கம், மனித நேயம், சமய சமரசம் மற்றும் ஆன்மீக முன்னேற்றத்திற்காக ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதன்மூலம் 350 கிராமங்களில் சுமார் 12,250 ஏழை மாணவ, மாணவியர்களுக்கு மாலை நேரத்தில் இலவச சிறப்புக் கல்வியும், (டியுஷன்) ஆன்மீக பயிற்சியும் அளிக்கப்படுகிறது. இந்த மேலான தொண்டுகள் சிறப்பாக நடைபெற தங்களின் அன்பையும், உதவியையும் நாடுகிறோம்.

ஒரு மையத்தின் (கிராமத்தின்) ஒரு மாதத்திற்கான பராமரிப்பு செலவு (பௌர்ணமி அன்று சிறப்பு விருந்து உட்பட)	ரூ.	**1,500/–**
ஒரு மையத்தின் ஓராண்டிற்கு பராமரிப்புத் தொகை (12 மாதம் பௌர்ணமி சிறப்பு விருந்து உட்பட)	ரூ.	**18,000/–**

தாங்கள் அளிக்கும் தொகை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்கிறோம். தங்கள் நன்கொடைகளை "ஸ்ரீ சாரதா சக்தி பீடம்" என்ற பெயருக்கு **Cheque / DD / MO** மூலம் அனுப்பி வைக்கும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

நன்கொடைகளுக்கு 80G பிரிவின்படி வருமானவரி விலக்கு உண்டு.

இறைவன் தொண்டில்
சுவாமி ஸ்ரீ ஸர்வாத்மானந்தர்



பட்ஜெட் போடுகிறார் மாதவன்!

"இன்று எனக்கு பெரிய ஸ்டார் அந்தஸ்த்து இருக்கிறது. ஆனால், அதை வைத்துக் கொண்டு, பணம் பண்ணுவது என் நோக்கமில்லை. 'அலைபாயுதே' படம் ரிலீஸ் ஆவதற்கு முன்னாலேயே நான் ஒப்புக் கொண்ட படங்கள் மின்னலே, என்னவளே. இரண்டும் ரிலீஸ் ஆனபின், ஏகப்பட்ட வாய்ப்புகள் வந்தாலும் நான் ஒப்புக் கொள்ளவில்லை. அலைபாயுதே வெளியாகி சுமார் எட்டு மாதங்கள் கழித்துத்தான் என் இரண்டாவது படம் ரிலீஸ் ஆனது. இப்போது மின்னலே வெளிவந்திருக்கிறது. நிதானம் ரொம்ப முக்கியம் என்பது என் பாலிசி" என்கிறார் மாதவன்.

இப்போது மாதவன் கையில் மூன்று படங்கள். கே. பாலசந்தரின் நூறாவது படமான 'பார்த்தாலே பரவசத்தில்' மாதவன் தான் ஹீரோ. இன்னொரு படமான டும்..டும்..டும்.. மணிரத்தினத்தின் மெட்ராஸ் டாக்கீஸ் தயாரிப்பு. டைரக்ஷன் அழகம் பெருமாள். மின்னலே படம், இந்தியில் எடுக்கப்படவுள்ளது. அதிலும் மாதவன் தான்.

"இந்த மூன்று படங்களுக்கும் இந்த வருடம் டிசம்பவர் வரை தேதி கொடுத்தாகி விட்டது. அடுத்த வருடம் என்ன என்பதை நான் இபோதே தீர்மானிக்க வேண்டிய அவசியமில்லை என நினைக்கிறேன்."

"அலைபாயுதேவுக்குப் பின் உங்கள் வாழ்க்கை எப்படி மாறி இருக்கிறது?"

"ரொம்ப... ரொம்பவே மாறிப்போச்சு. ஆனால் மாதவன் என்ற மனிதன் மாறவில்லை என்பதை ரொம்ப சந்தோஷத்துடன் சொல்லிக் கொள்ளுவேன். அரவிந்தசாமிக்கு, மணிரத்னம் படத்தில் அறிமுகமானதன் மூலம் கிடைத்த ஸ்டார் அந்தஸ்த்தை நான் பார்த்திருக்கிறேன். எனவே, அலைபாயுதே எனக்குப் பேரையும், புகழையும் பெற்றுத் தரும் என்பது நான் எதிர்பார்த்ததுதான் ஆனால், நான் எதிர்பார்த்ததைவிட, பலமடங்கு எனக்குக் கிடைத்திருக்கிறது!"

"இந்த ஸ்டார் அந்தஸ்த்து, உங்களுக்கு மனத்திருப்தி, சந்தோஷத்தைக் கொடுத்துள்ளதா?"

"நிச்சயமாக... நடிப்பு எனக்குப் பிடித்திருக்கிறது. ஆர்வமுடனும், சந்தோஷத்துடன் நடிப்பதால், எனக்கு இது ஒரு வேலையாகவே தெரியவில்லை. இன்னொரு விஷயம்– நான் நடிக்க வரவேண்டும் என்பது திட்டமிட்டு நடந்த ஒன்றல்ல. பள்ளி, கல்லூரி நாட்களிலேயே நான் ஒரு ஆல் ரவுண்டர். தேசிய அளவில் பாஸ்கட் பால்

அசத்தல் பல்கலைக்கழகம்!

தமிழக முதல்வருக்கு வரும் தேர்தலில் ஓட்டு வாங்கித் தருகிறதோ இல்லையோ, வரலாற்றில் அவர் பெயரை நிரந்தரமாய் நிலைக்கச் செய்யும் அவரது பல சாதனைகளில் தமிழ் இணையப் பல்கலைக் கழகத்திற்குத் தனியிடம் உண்டு என்கிறார்கள் இணையத்துறை வல்லுனர்கள்.



தமிழ் மொழியின் அத்தனை கூறுகளையும் உள்ளடக்கி கடந்த ஓராண்டு காலத்திற்குள் வெர்சுவல் யுனிவர்சிட்டி எனப்படும் இணைய தளப் பல்கலைக் கழகத்தை ஒலி ஒளி காட்சிகளோடு அமைத்திருக்கிறார்கள்.

ஆங்கிலம் வழி, தமிழைக் கற்று, சான்றிதழ், பட்டயம், பட்டம் ஆகிய நிலைகளில் இந்த தமிழ் இணையப் பல்கலைக் கழகத்தில் பட்டம் பெறலாம். கடந்த பிப்ரவரி பதினோராம் தேதி சென்னை கலைவாணர் அரங்கில் நடந்த விழாவில் முதல்வர் தொடங்கி வைக்க, தமிழ் இணையப் பல்கலைக் கழகம் எப்படி இணைய தளத்தில் இயங்குகிறது என்று அதன் இயக்குனர் பொன்னவைக்கோ ஒலி ஒளி திரையில் 45 நிமிடம் அதை இயக்கிக் காட்டினார்.

நூலகம் சென்று தேடித் திரிந்து களைத்து விடாமல் தமிழ் மொழி குறித்த எந்த தகவலையும் மிக விரைவாக 'டவுன்லோட்' செய்ய முழுமையான இணைய நூலகமும் இந்த பல்கலைக்கழகத்தில் உண்டு. www.tamilvirtualuniv.org என்ற முகவரிக்குள் நுழைபவர்கள் அத்தனை சீக்கிரம் வெளியே வர முடியாதபடி வெப் டிசைனில் கலக்கியிருக்கிறார்கள்.

— சக்கரம்

ஆடியிருக்கிறேன். தவிர என்.சி.சியிலும் ஆக்டிவாக இருந்தேன். பேச்சுப் போட்டிகளில் பங்கேற்றுப் பரிசுகள் வென்றிருக்கிறேன். இளைஞர் எக்ஸ்சேஞ்ச் திட்டத்தின் கீழ், ஜப்பான், இங்கிலாந்து நாடுகளுக்குச் சென்று வந்த அனுபவமும் உண்டு. ஆனால் என் அப்பா போட்ட ஒரு கண்டிஷன்தான் நான் சொந்தக் காலில் நிற்க வேண்டும் என்ற உந்துதலை ஏற்படுத்தியது.

"அது என்ன கண்டிஷன்?"

"இருபத்தியோரு வயது வரை நான் உன் தேவைகளைக் கவனித்துக் கொள்ளுவேன். அதற்குப்பின், உனக்காக ஒரு ரூபாய் கூட நான் செலவழிக்க மாட்டேன். உன் தேவைகளுக்காக, நீயே சம்பாதித்துக் கொள்ளும்படி உன்னை நீ தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டும்" என்று என் அப்பா கூறுவார். அதுதான் இன்றைய மாதவனின் உயர்வுக்கு அஸ்திவாரம்.

"சீரியல், சினிமா என்று வந்தபின் பண வரவு சரளமாகியிருக்குமே!"

"பண விஷயத்தில் நான் எப்போதுமே ஒரே மாதிரிதான். உழைக்காமல், ஒரு ரூபாய் சம்பாதிக்கக் கூடாது; அதே சமயம், உழைத்துச் சம்பாதித்த பணத்தில் ஒரு ரூபாய் கூட வீணாய்ப் போய் விடக் கூடாது. கடன் விஷயத்தில் நான் ரொம்ப கறார். ரொம்ப அவசியம் என்கிறபோது, யாரிடமாவது பணம் கடன் வாங்கினால் இன்றைய தேதியில் திருப்பித் தந்துவிடுவேன் என்று வாக்கு கொடுத்து விடுவேன். அதேபோல கொடுத்த வாக்கைக் காப்பாற்றத் தவறமாட்டேன். என்னிடமிருந்து கடன் வாங்குகிறவர்களிடமும் நான் இதையே எதிர்பார்ப்பேன். அப்படி, அவர்கள் நடந்து கொள்ளாதபோது, கடுமையாய் நடந்து கொள்ளுவேன்.


"செலவு விஷயத்தில் நீங்கள் எப்படி?"

"அதுதான் சொன்னேனே! பணத்தை விரயமாக்கக் கூடாது என்பது என் பாலிசி. எது அவசியமோ அதை வாங்குவதற்குத் தயங்க மாட்டேன். ஆனால், கொடுக்கிற பணத்துக்கு, வாங்கும் பொருள் மதிப்புள்ளதா என்று பார்த்துதான் வாங்குவேன்.

"உங்கள் வீட்டில் யார் பட்ஜெட் போடுவார்கள்?"

"நான் சம்பாதிக்கிற எல்லா பணத்தையும் என் மனைவியிடம் கொடுத்து விடுவேன். எனக்கு எப்போது வேண்டுமானாலும் ஐந்நூறு ரூபாயோ, ஆயிரம் ரூபாயோ அவளிடமிருந்து கேட்டு வாங்கிக் கொள்ளுவேன். வீட்டின் எல்லாவிதமான செலவுகளுக்குமாகச் சேர்த்து மாதம் ஒரு லட்சம் ரூபாய் போல ஆகிறது. வீட்டுச் செலவுகளை என் மனைவி பார்த்துக் கொள்ளுகிறார்; என் வருமானத்திலிருந்து முதலீடுகளை என் நண்பர் ரபீக் பார்த்துக் கொள்கிறார். வருமானத்துக்கு உரிய வரியை ஒழுங்காகக் கட்டிவிட்டு, நான் ஜாலியாய் நடித்துக் கொண்டிருக்கிறேன்."

சந்திப்பு: **எஸ். சந்திரமௌலி**
படங்கள்: **யோகா**



குன்னியூர் பிரபல மிராசுதர், **K.S. சாம்பசிவ ஐயர்**, சுதிராமங்கலம் பிரபல மிராசுதார் **K.V. நடராஜ ஐயர்** இவர்களுடைய பேத்தியும், **ஸ்ரீமதி ரமா துரைஸ்வாமி & ஸ்ரீ K.S. துரைஸ்வாமி** இவர்களின் புத்திரியுமான **சௌ. இந்துமதிக்கும்**, கனடாவில் வசிக்கும் ஸ்ரீமதி. அபிராமி சுப்ரமண்யன் அவர்களின் புத்திரன் **சிரஞ்சீவி. ராமகிருஷ்ணனுக்கும்**, 29.1.2001 அன்று சென்னையில் திருமணம் மிகச் சிறப்பாக நடந்தேறியது. திருமணத்திற்கு உறவினர் களும் நண்பர்களும் பிரமுகர்களும் வந்து புதுமணத் தம்பதிகளைவாழ்த்தினர்.

வாழ்க மணமக்கள்!



• குணங்களும் ரணங்களும்

இளம் விதவை துளசி. மனைவியை இழந்து இரண்டு குழந்தைகளுடன் இருக்கும் ஒருவனை மணக்கிறாள். பரிவோ பாசமோ நன்றியோ நாகரிகமோ இல்லாத பொம்மை வாழ்க்கை நடத்தி, கடைசியில் பொறுக்க முடியாமல் வெடிக்கிறாள். அந்தக் கட்டத்தில் அனுராதா ரமணனின் கதை அற்புதமாய் ஜொலித்தது. (ராஜ் - மைக்ரோ தொடர் 'குணங்களும் ரணங்களும்')

'நீங்கள்ளாம் ஒரு மனுஷனா?' என்று மிகத் தாழ்ந்து ஆரம்பித்து, இஞ்ச் இஞ்ச்சாய்க் குரலை உயர்த்தி, பாயின்ட் மேல் பாயின்ட்டாக அடுக்கி, கணவனைச் சுக்குச் சுக்காய்க் கிழித்துப் போடுகிறார் சொர்ணா. சரமாரியாய்க் கொட்டும் அந்தச் சில நிமிட வசனத்தில், மூந்தின நாலு நாட்களும் பார்க்காதவர்களுக்கும்கூட மொத்தக் கதையும் புரிந்துவிட்டது. A poem in capsule.

எல்லாம் சரி. ஒரு மனிதனின் மரணத்தைச் சட்டி, சேகண்டி, பச்சை மட்டை, பல்லக்கு, மூக்கில் பஞ்சு மோவாயில் கட்டு முதலான crudity இல்லாமல் with subtlety காட்ட, பாலசந்தரின் யூனிட்டில் இருப்பவர்களுக்குக் கூடவா தெரியவில்லை? ஆச்சரியம்.

ரிமோட்

பெண்களிடம் பணம் இருப்பது ஆபத்தா?

பாங்க்கில் பணி புரியும் இரண்டு பெண்கள் சந்தித்தால், போன மாதம் வரையில் கேட்டுக் கொண்டிருந்த கேள்வி: 'நீ அப்ளை பண்ணி விட்டாயா?''

இந்த மாதம் கேட்டுக் கொண்டிருக்கும் கேள்வி: 'உனக்குக் கிடைத்து விட்டதா?'

வேறொன்றுமில்லை. வீஆர்எஸ் படுத்தும் பாடு. ராஜ் டிஜிடலில் நிர்மலா ராமன் பேட்டி கண்ட ஒரு பெண்மணி (யூனியன் நிர்வாகி) 'பணம் வருகிறதே என்று இந்த ஸ்கீமைப் பெண்கள் ஏற்றுக் கொள்ளக் கூடாது; என்றார். கையில் பணம் வைத்திருப்பது

'இந்த மூவரில் யார் தமிழ் எழுத்தாளர் இல்லை?' என்று கேட்டார் சரத்குமார். A. அசோகமித்திரன், B. அகிலன், C. முகுந்தன்.

கோடீஸ்வரன் போட்டிக்கு வந்திருந்தவர், பளீரென்று 'சி – முகுந்தன்!' என்று பதிலளித்தார். 'சரியான பதில்!' என்று கை தட்டிய சரத்குமார், அவருக்கு எட்டாயிரமோ பத்தாயிரமோ பரிசும் கொடுத்து அனுப்பி வைத்தார்.

பாவம், முகுந்தன்.


• முகுந்தன்

இருபத்தைந்து வருடமாகக் கல்கி, கலைமகள் முதலான பத்திரிகைகளில் நானூறுக்கும் மேற்பட்ட சிறுகதைகளும், ஒரு டஜன் நாவல்களும் எழுதி என்ன புண்ணியம்? துக்ளக்கில் ஏராளமான ஹாஸ்யக் கட்டுரைகள் வெளிவந்து என்ன புண்ணியம்? ஆனந்தவிகடனிலும் சாவியிலும் தினமணி கதிரிலும் உதவி ஆசிரியராகப் பணியாற்றி என்ன புண்ணியம்?

அவர் தமிழ் எழுத்தாளர் அல்ல என்று சரத்குமார் தீர்ப்பளித்துவிட்டார். ஆர்டர்! ஆர்டர்! All appeals rejected.

பெண்களுக்குக் கெடுதல். நாத்தனாரோ மைத்துனரோ 'வீடு கட்டுகிறேன். பணம் தேவைப்படுகிறது' என்று கேட்டால் எப்படி மறுக்க முடியும்?' என்று கூறிப் பல பெண்களின் மனசை மாற்றியதாகச் சொன்னார் இவர். I find it is more trouble to watch after money than to get என்று கூறிய மாண்ட்டேய்ன் பிரபுவின் கட்சி.

அதிருக்கட்டும். பெண்கள் பணம் வைத்திருப்பது ஆபத்தா? சாலமன் பாப்பையா தலைமையில் பட்டிமன்றம் நடத்த வேண்டியதுதான்.

'விடு! விடு என்னை!' என்று திமிறுகிறார் கே.ஆர். விஜயா. வில்லன் விடவில்லை. அவரைக் கடத்திக் கொண்டு ஹெலிகாப்டரில் பறக்கிறான். It is a beautiful bird that gets caged என்கிறது ஒரு சீனப் பழமொழி.


• கே.ஆர். விஜயா

ஹீரோ ஜெய்சங்கர் கையைப் பிசைந்து கொண்டு தவிக்கிறார். திடீரென்று ஜீபூம்பா அவதாரம். அவரைக் காரில் ஏற்றிக் கொள்ள, ஹெலிகாப்டரை நோக்கிக் கார் வானத்தில் பறக்கிறது. வில்லன் டுப்டுப்பென்று ஜீ பூம்பாவைச் சுடுகிறான். ஆனால் எல்லாத் தோட்டாக்களும் வெண்டைக்காய்க் காம்பு மாதிரி ஜீபூம்பாவின் நெற்றியிலும் கன்னத்திலும் மூக்கிலும் ஒட்டிக் கொள்ள, 'சைத்தான் கா பச்சா! தோட்டா சுடறானாம் தோட்டா!' என்று சிரித்தபடி ஒவ்வொன்றாய்ப் பறித்து எறிகிறது ஜீ பூம்பா. (ஜாவர் சீதாராமன்.) வில்லனை வீழ்த்தி, ஹீரோவையும் ஹீரோயினையும் சேர்த்து வைத்தபின், 'நாட்டுக்கு நல்லது செய்ய வேண்டிய வேலை நிறைய இருக்கிறது. நான் வருகிறேன்' என்று கூறி விடை பெற்றுச் செல்கிறது.

'பட்டணத்தில் பூதம்' மாதிரி அட்டகாசமான ஒரு ஜீபூம்பா கைவசம் கிடைத்தால் பூகம்பம் முதல் புழுவேரி வரை எவ்வளவு பிரச்னைகளை எத்தனை சுலபமாய்ச் சமாளிக்கலாம்!

No chance.

வினோத்

''அடிக்கடி கோர்ட்டுக்குப் போறதால தலைவர் ரொம்ப தடு மாறிட்டார்!''

''என்ன விஷயம்?''

''தேர்தல் சின்னமா குற்றவாளிக் கூண்டு கேட்கிறார்!''





''குருவே சித்தி அடைய என்ன வழி''

''டீவி வாங்கினால் போதும் சிஷ்யா!''

- அம்பை தேவா



''என்னோட கணவர் குழந்தை மாதிரி!''

''அதுக்காக அவருக்குப் போலியோ முகாம்ல வந்து சொட்டு மருந்து குடுத்தே யாகணும்னு நீங்க அடம்பிடிக்கறது நல்லா யில்லீங்க!''

- புளியரை கணேசன்



''என்னை எப்படியும் தோற்கடிச்சிட தலைவர் முடிவு பண்ணிட்டார்னு தோணுது.''

''எப்படிண்ணே...?''

''என்னை என்னோட பழைய தொகுதியிலயே நிற்கச் சொல்லிட்டாரே!''

- சீர்காழி வி. ரேவதி

சித்தி அடைய என்ன வழி?

அப்பாவின் முகம் அறியேன்!

அண்மையில் இந்தியாவுக்கு வந்திருந்த போது, நான்கு நாட்கள் சென்னையில் தங்கியிருந்தார் அனிதா போஸ். அவர் அளித்த பேட்டியில் சில பகுதிகள் :





''நேதாஜி, ஜெர்மனியை விட்டுப் புறப்பட்டுச் சென்ற பின், உங்களை வளர்த்து ஆளாக்க, உங்கள் அம்மா மிகவும் சிரமப்பட்டாரா?''

''ஜெர்மானிய ராணுவத்தைச் சேர்ந்தவர்களின் மரணத்துக்குப் பின் அவர்களது குடும்பத்துக்கு அரசாங்க பென்ஷன் கிடைக்கும். என் அம்மாவின் நிலை மிக விசித்திரமானது என்பதால், அதுபோன்ற உதவி ஏதும் கிடைக்க வாய்ப்பு இல்லை. என் அம்மா ஆங்கிலம் தவிர, பிரெஞ்ச், ஜெர்மானிய மொழிகளையும் தெரிந்து வைத்திருந்தார். அதன் காரணமாக, ஜெர்மன் நாட்டின் தொலைபேசி எக்ஸ்சேஞ்ச்சில் அவருக்கு வேலை கிடைத்தது. தன் சொந்த வருமானத்தில்தான் என்னை வளர்த்தார்.

''உங்களுக்கு 'அனிதா' என்று இந்தியப் பெயரைத் தேர்ந்தெடுத்தது அம்மாவா? அப்பாவா?''

''அனிதா என்ற பெயர் என் அம்மாவின் சாய்ஸ். பத்தொன்பதாம் நூற்றாண்டில், இத்தாலியை ஒருமைப்படுத்திய மிக முக்கிய தலைவரின் மனைவி பெயர் அனிதா. இடுப்பில் கைக்குழந்தை, கையில் துப்பாக்கி ஏந்தி, குதிரை மீது வீற்றிருக்கும் விதமாய் அனிதா கரிபால்டிக்குச் சிலை கூட வைத்திருக்கிறார்கள். இந்தப் பெயரை எனக்குச் சூட்ட அவர் விரும்பியபோது, இந்தியப் பெயர் போலவும் இருக்கிறது என்று என் அப்பாவும் சம்மதித்தாராம்.

''உங்கள் அம்மா எமிலி ஷெங்கால், நேதாஜி பற்றிக் கூறியதில், மறக்க முடியாதது...?''

''நேதாஜியின் செயல்பாடுகள் சில குறித்து, என் தாயும், பாட்டியும் ஒரு கடிதம் எழுதியிருந்தார்களாம். அதற்கு, நேதாஜி பதில் போட்ட போது, 'நான் என்ன செய்ய வேண்டும் என்ற யோசனையை நானே செய்து கொள்ளும் விதத்தில் எனது அறிவுத் திறன் அமைந்துள்ளது. எனவே, எனக்காக, நீங்கள் சிந்தித்து ஆலோசனை சொல்லுவது அவசியமில்லாத வேலை' என்று குறிப்பிட்டிருந்தாராம்!

1941ல் என் பெற்றோர்களின் திருமணம் நடந்தது. 43ம் ஆண்டு, நாலு மாதக் குழந்தையான என்னை, என் தாயின் பொறுப்பில் விட்டு விட்டுப் புறப்பட்டுப் போய் விட்டார் அப்பா. அந்தத் தினத்தை நினைவுகூர்கிறபோதெல்லாம் அம்மா கண் கலங்கி விடுவார்.

''இந்திய அரசு, நேதாஜியை உரியமுறையில் கௌரவித்திருப்பதாக நீங்கள் நினைக்கிறீர்களா?''

''அவரைக்குறித்து, எப்போதுமே, ஒருவித கண்டுகொள்ளாத போக்கே நிலவி வந்துள்ளது. நூற்றாண்டின் போது, பாடப் புத்தகங்களில் அவருக்கு ஓரளவு முக்கியத்துவம் தந்ததைக் குறித்து சந்தோஷப்பட்டுக் கொள்ளலாம். அவ்வளவுதான்.''

''இந்தியாவுக்கு வந்து நிரந்தரமாகத் தங்கி விடும் எண்ணம் உண்டா?''

''நான் அங்கே பல்கலைக்கழகத்தில் பணி புரிகிறேன். என் கணவர் ஒரு எம்.பி. எனவே, நிரந்தரமாக இந்தியாவுக்கு வந்துவிடும் எண்ணமில்லை. ஆனால் அவ்வப்போது இந்தியாவுக்கு வரத் தயங்க மாட்டேன்; தவறமாட்டேன்.

சந்திப்பு : **எஸ். சந்திரமௌலி**

— நேதாஜியின் மகள் அனிதா போஸ்



உள்ளம் கொள்ளை போகுதே

டப்பிங் ஆர்டிஸ்ட் பிரபுதேவா. தன் தங்கையின் ஸ்நேகிதி அஞ்சலாவின் மேல் அவருக்கு ஒருதலைக் காதல். அஞ்சலாவுக்குக் கார்த்திக் மேல் இருதலைக் காதல்(?). விபத்தில் கார்த்திக் உயிரை இழக்க, அஞ்சலா கண்பார்வையை இழக்க, கதை சுவாரஸ்யத்தை இழந்து விடுகின்றது.

அஞ்சலாவுக்கு அதிர்ச்சி ஏற்படாமல் இருக்க, கார்த்திக் குரலில் பேசி தன்னுடைய டப்பிங் திறமையால் நிலைமையைச் சமாளிக்கிறார் பிரபுதேவா, உண்மை வெளியாகும் வரை. பிறகு இருவரும் ஒன்று சேர்கிறார்கள் ஒரு நீளமான க்ளைமாக்ஸில். (மெகா சீரியல்களைப் பார்த்துப் பார்த்து நமது டைரக்டர்களும் 'ஜவ்' ஸ்பெஷலிஸ்டுகளாக ஆகிக் கொண்டு வருகிறார்கள்!)

நடிப்பைப் பொறுத்தவரை கஞ்சப் பிரபுவாக இருக்கும் பிரபுதேவாவுக்கு இத்தனை க்ளோஸ்-அப் ஷாட்கள் ஏனோ?... மிஸ்டர் குஷ்பூ தான் பதில் சொல்ல வேண்டும்.

அஞ்சலாவுக்கு அழகு + நடிப்பு + நளினம் இருக்கிறது. ஆனால் 'பேல் பூரி' வாசனையைத் தவிர்க்க முடியவில்லை.

கார்த்திக் @ இளமை என்று தாராளமாக டைட்டிலில் போட்டுவிடலாம்.

விவேக்குக்குப் படம் முழுவதும் தண்ணியில் கண்டம். இதே ரீதியில் போனால் அவருக்கு நடிப்பில் கண்டம் உறுதி.

'காலேஜ் ஃபீஸ்'ஐக் கட்டவே முழி பிதுங்கும் ஹீரோக்களின் வீடுகளை ஏன் தான் இப்படி விழுந்து விழுந்து அலங்கரிக்கிறார்களோ ஆர்ட் டைரக்டர்கள் தெரியவில்லை.

'கிங் டா' - டான்ஸ் மூவ்மெண்ட்ஸ் அருவருப்பு. 'கவிதைகள் சொல்லவா' - கார்த்திக் ராஜாவின் இசை நயினாவை சந்தோஷப்படுத்தும்.

படம் பார்த்துவிட்டு வெளியே வரும் பொழுது மனத்தில் நிற்பது பிரபுதேவாவின் தங்கையாக வரும் தீபா வெங்கட்டும், அவரது எளிமையான நடிப்பும்தான்!

- கிருஷ்ணா சிதம்பரம்

○ ஃபெயில் ○ ஜஸ்ட் பாஸ் ● ஆவரெஜ்
○ அபவ் ஆவரெஜ் ○ டிஸ்டிங்ஷன்

எத்தனை பெரிய காரியத்தையும் வென்றிட உரிய

"தேவதா உச்சாடனம்"

(பூஜா உபதேசம்)

சித்தர்கள் எதையும் சித்தி செய்ய சிறப்பாக ஆராய்ந்து பெய்யா மழையை பொழியச் செய்யவும், பெய்யும் பெரும் மழையை நிறுத்திடவும் - அது போன்ற அதிசய சக்திகளை சித்திக்க செய்த தேவதா உச்சாடன பூஜையை தேடிக் கண்டெடுத்து தெய்வத்தின் சக்தியை அடைந்தனர். கோடி செல்வம் வேண்டியவர்களும் குபேரனைப் போன்று குதூகலித்து வாழ்வோரும் செய்ய இது அட்டியின்றி சித்திக்கும் என்பதற்க்கு - அன்று குபேரன் செய்த பூஜை என்பதும் குபேரனைப் போல் செல்வ செழிப்படைய இலங்கேஸ்வரன் இராவணன் செய்த பூஜை என்பதும் குறிப்பிடத்தக்கது. மன ஒடுக்க ரீதியாகத்தான் ராஜ, பக்தி, கர்ம, ஞான யோகங்கள் சித்திக்கின்றன. இது ராஜயோக பிரிவு. இதனை தவறாமல் செய்துவிடில் எத்தனை பெரிய காரியத்தையும் எளிதில் வெற்றி கொள்ளலாம். இதனை இப்போது கற்றவர்களே நிருபித்து நினைத்ததை சாதித்த சந்தோஷத்தை கடித வடிவில் எழுதி எம்மையும் மகிழ்வித்தனர். உச்சாடனத்தால் எற்படும் வெற்றிகளையும் உறுதி செய்தனர். எவர் ஒருவருக்கு இந்த யோகவழி சித்திகளால்-எண்ணியது எத்தனை பெரிய காரியத்தையும் வெற்றி கொள்ளும் விதி அமைப்பு இருக்கின்றதோ அவருக்குத்தான் இந்த விளம்பரம் கண்ணில்படும். உரிய காலத்தில் மனு செய்யும் சந்தர்ப்பமும், இதனை உபதேசம் பெறும் வாய்ப்பும் ஏற்படும். அவ்விதம் ஏற்பட்டுவிடில் அவர் - வேண்டிய அனைத்தும் பெற்று கோடீஸ்வரராக வாழ்வார் என்பதில் ஐயப்பாடு இல்லை. ஆனால் இதனை செய்ய விரும்புவோர் அவரது ஜாதகத்தை வைத்து இந்த பூஜா உபதேசம் பெற விரும்புகின்றேன் என்று எழுதி 9.4.2001 தேதிக்குள் கடிதம் எழுதிட வேண்டும், அத்தேதி தவறிடில் பின் கடவுள் அனுமதி தற்போது இல்லை என்று பொருள்.


கட்டாயமாக உபதேசம் பெற விரும்புவோர் அருள்நிலையை கெடுக்கும் மதுபானம் செய்வதோ, புகைபிடிப்பதோ,பொடி போடுவதோ, புகையிலை போடுவதோ முற்றிலும் இருக்கக்கூடாது. இந்த தீய பழக்கம் உள்ளவர்கள் மனு செய்ய வேண்டாம். தவிர தினசரி காலையும், மாலையும் தவறாமல் பூஜை செய்யும் பழக்கம் உள்ளவராய் இருக்க வேண்டும். இது மிகவும் முக்கியம். தீய பழக்கம் இருந்தாலோ அல்லது தினசரி பூஜை செய்யும் பழக்கம் இல்லாவிட்டாலோ - அந்த அருள் சக்தி ஏற்படாது. அவர்கள் உபதேசம் பெற மனு செய்ய வேண்டாம்.

தவிர பெண் இனத்தாரும் இதனை உபதேசம் பெற்று உயரியவாழ்க்கை, உத்தம கணவன், உயர்வான குழந்தைகள், எத்துயருமில்லா நிலை, சொத்து சுகம் வீடு, வாகன வசதி, கடனற்ற வாழ்வு கண்டு மகிழ்ந்து எழுதுகின்றனர். எனவே

பெண் இனத்தவரும் மனு செய்யலாம்.

இது தவிர அரிய ஆறுகலைகளான - ஜோதிடம், மாந்திரீகம், ஆழ்நிலைதியானம்,யோகாசனம், ஆருடம், பூஜாவிதானம் 36 என்றகலைகளை தமிழில் தபால்வழியில்கற்றுத்தரும் கலைக்கூடம் தமிழகத்தில் இது ஒன்றே. இக்கலைகளை கசடறக் கற்றிட மிக ஏற்ற, எளிதாககற்றிட உரியபாடங்களாக தருவதோடு படித்து முடித்தாருக்கு சான்றிதழும் பட்டமும் தருகின்றோம்.

உரிய காலத்தில் மனுச்செய்து உரித்தான நலங்களை அடைக.



பிரபல ஜோதிடர், ஜோதிட ஆசிரியர்,
ஸ்ரீமத் ஜெயவீர தேவா, யோகி
இராஜயோக பயிற்சியாளர்,
பிளாட் எண்: 204, அண்ணா நகர், மதுரை – 625020
533412
650576

மத்திய முன்னாள் உள்துறை அமைச்சரும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கியத் தலைவர்களில் ஒருவருமான இந்திரஜித் குப்தா பற்றிய நினைவுகளை நம்மோடு பகிர்கிறார் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணைச் செயலாளர் சி. மகேந்திரன்.

மக்கள்தான் பாதுகாப்பு!



• சி. மகேந்திரன்



• இந்திரஜித் குப்தா

இந்திரஜித் குப்தாவை, பலமுறை நேரில் பார்க்கிற வாய்ப்புக் கிடைத்தாலும், சென்னையில் நடைபெற்ற இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய மாநாட்டில் நிகழ்ந்தவை மனத்தை விட்டு அகலாதவையாகும். அகில இந்திய மாநாடு என்பதால் தமிழகத்தின் மண் சார்ந்த கலைகளைக் கண்காட்சியாக அமைக்க ஏற்பாடு செய்திருந்தோம். புகழ் பெற்ற தமிழகத்தின் பெருங்கலைஞர்கள் அவ்வளவு பேரும் எங்களுக்குப் பெரும் உதவி செய்தார்கள். ஓவியர் ஆதிமூலம், சிற்பி தட்சிணாமூர்த்தி, மருது, விஸ்வம், செழியன், சீனிவாசன், இராமச்சந்திரன் என்று ஒரு பெரும் குழுவே இந்தக் கண்காட்சிக்கு உதவியது. மாநாட்டுக்குச் சகோதரப் பிரதிநிதிகளாக உலக கம்யூனிஸ்ட் தலைவர்கள் வந்திருந்தார்கள். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் எல்லாத் தலைவர்களும் மாநாட்டில் பங்கேற்றிருந்தார்கள். கண்காட்சியில் குறை எதுவும் வந்துவிடக் கூடாது என்ற பதற்றம் எங்களுக்கு.

உள்துறை அமைச்சராக இருந்தவருக்கு வழங்கப்படும் பாதுகாப்புக் கெடுபிடிகள் மாநாட்டு அரங்கத்திற்கு வந்துவிட்டன. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநாட்டிற்கு இது புதுமையானது.

இந்திரஜித் குப்தா, பாதுகாப்பு என்ற பெயரில் நடக்கும் கெடுபிடிகளை விரும்பவில்லை. மக்கள் ஊழியர்களுக்கு மக்கள்தான் பாதுகாப்பு என்ற கொள்கையுடையவர். இதனை இவர் பலமுறை வெளிப்படுத்தியிருக்கிறார் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். மாநாட்டு மேடையில் கடைசி வரிசையில் இந்திரஜித் அமர்ந்திருந்தார். அவரிடம் சென்று மாநாட்டுக் கண்காட்சியை நீங்கள் திறந்து வைக்க வேண்டும் என்று கேட்டோம். தமிழகத்தின் கலைகளை வெளிப்படுத்தும் கண்காட்சி என்று குறிப்பிட்டோம். வங்கத்திற்கும் தமிழகத்திற்குமான வரலாற்றுக்கால கலைத் தொடர்பை ஒரே வரியில் கூறிவிட்டு, வருவதாக ஏற்றுக்கொண்டார்.

மாநாட்டின் இரண்டாம் நாள் காலை பத்து மணிக்குக் கண்காட்சி திறப்பதாகத் திட்டம். எல்லா ஏற்பாடுகளையும் செய்து விட்டோம். காலை 9.45க்குப் படைப்பாளிகள் வந்து விட்டார்கள். எல்லோரும் இந்திரஜித் குப்தாவுக்காகக் காத்திருந்தோம். காலை 10.10க்கு வந்து சேர்ந்தார். நாங்களெல்லாம் காத்திருப்பதைப் பார்த்து அவர் முகம் வருத்தமடைந்தது. Sorry! Sorry! என்று இரண்டு மூன்று முறை சொல்லிக் கொண்டார். கலைஞர்கள் ஒவ்வொருவரின் கைகளைப் பற்றி வருத்தத்தைத் தெரிவித்துக் கொண்டார். பத்து நிமிடங்கள் காலதாமதமாக வந்ததற்கு இப்படி மன்னிப்புக் கோருகிறாரே என்று அதிர்ந்து போனார்கள் தமிழக கலைஞர்கள்.

அடக்கம், எளிமை, தன்னல மறுப்பு ஆகியவை இந்திரஜித் குப்தாவின் உயர் பண்புகள்.

— செ. ஏக்நாத்

படம்: ரவிசங்கரன்


ப்ரீத்தி, அரைவேக்காட்டில் எடுத்த சாக்லேட், கேக் போல் குழம்பிப் போயிருந்தாள். இனிமேல் கடித்து துப்புவதற்குப் பத்து விரல்களிலும் துணுக்கு நகம் மிச்ச மில்லை.

இதுவரையில் அலுவலக விஷயமாக அஜய் எத்த னையோ முறை வெளியூர்களுக்கும், ஏன் - வெளி நாடுகளுக்கும் கூட - நாட்கணக்கில், மாதக்கணக்கில் போயி ருக்கிறான். அப்போதெல்லாம் இத்தகையத் தவிப்போ - குறுகுறுப்போ இருந்ததில்லை அவளுக்கு.

'என்ன மனிதர் இவர். ஒருத்தி வேலைமெனக்கெட்டு உங்களுடன் காதலைப் பகிர்ந்து கொள்ள இந்த க்ஷணமே தயார் என்று விறலி விடு தூது, அன்னம்விடுதூது போல ஈமெயில் விடு தூது விட்டு, பக்கத்திலேயே எம்பினால் தொட்டுவிடக்கூடிய தூரத்தில் காத்திருக்கிறாள். அவளுடன் ஆற அமர கலர் கலராய் உடையணிந்து டூயட் பாட நேரமில்லாவிட்டாலும் தொலை கிறது.. குறைந்தபட்சம் ஒரு ஐந்து நிமிஷம் - சின்னதாய் ஒரு கப் டீ குடிக்கும் நேரம் கண்ணுடன் கண் நோக்கி, விரலுடன் விரல் பின்னி, உள்ளங் கையில் அழுத்தி, இந்தக் கடிதத்தை அங்கீ கரிக்க வேண்டாமோ?

'ரெஸிப்ரோகேஷன் என்பதே இவர் அகராதியில் கிடையாது போல.'

அவள் வெந்தாள்; நொந் தாள்; நூலானாள். அலுவ லகத்தில் இருந்தால் அஜய் யின் அறை நிலவு இல்லாத வானம் போல - அறுவடை



இனிமேல் ஆரம்பம்


அனுராதா ரமணன்

யான வயல் போல – சேஷ ஹோமம் ஆன கல்யாண வீடு போல வெறிச்சோடியிருந்தது. போதாக்குறைக்குச் சீனிவாச ராகவனும், உன்னிமேரியும் வேறு இவளைப் பார்வையாலேயே அங்குலம் அங்குலமாக அளந்து கொண்டிருந்தார்கள்.

அஜய் ஊருக்குக் கிளம்பிய மறுநாளே – ப்ரீத்தி ஏதோ ஒரு உருப்படாத, தொத்தல் கான்ட்ராக்ட் விஷயமாகப் பேச, அவனை செல்போனில் அழைத்தாள். அப்போது அவன் ஏதோ ஒருவிதமான உற்சாகத்தில் – மதுக் கோப்பையில் மிதக்கும் ஐஸ் கட்டி போல ஏதோ ஒருவித லாகிரியில் கரைந்து கொண்டிருந்தான்.

"ஹாய்... ப்ரீத்தி, அந்த கான்ட்ராக்ட் மேட்டரை ஏப்பவோ நான் தூக்கிப் பரண் மேலே போட்டாச்சே. அந்த ஆளுக்குக் கொடுக்கற ஐடியாவே இல்லை. நாலு நாள் முன்னாடி கூட இதப் பத்தி நான் சொன்னேனே... ஏய்.. ஏய்.. நான் சொன்னேன். நீதான் மறந்துட்டே. உனக்கு அப்போ வேற எதிலேயோ நினைப்பு. எதிலேன்னு என்னைக் கேட்டா? அது சரி. சீனு மாமா என்ன சொல்றார். வழக்கம் போல இன்னிக்கும் தயிர் சாதம், எலுமிச்சங்காய்தானாம்மா... உனக்கு ஒண்ணு தெரியுமோ? மிஸஸ், சீனு ரொம்பவுமே அலுத்துப் போயிட்டாங்க போல. அதான் வெரைட்டியே தரமாட்டேன்கிறாங்க."

"என்னது... அதெல்லாம் ஹஸ்பெண்ட் எப்படி நடந்துக்கறானோ அப்படித்தான் ரெஸ்பான்ஸும் இருக்குமா... சொல்ல மாட்டியா நீ. இந்தப் பொம்பளைங்க எல்லாமே ஒரே கட்சிதான்பா."



"ஓகே, ப்ரீத்தி. நான் ஒரு ஃபோன் காலுக்காக வெயிட் பண்றேன். எப்படியும் திரும்பி வர ரெண்டு மூணு நாள் ஆகும். அப்படி என்ன தலைபோற விஷயமா... வந்து சொல்றேன். உன்கிட்டே சொல்லாம வேற யார்கிட்டே சொல்லப் போறேன்."

எத்தனை கலகலப்பாக பேசினான் அவன். ப்ரீத்திதான் கண்ணைக் கட்டிக் கொண்டு பாண்டி விளையாடும் சிறுமி போல சட்டென அவனிடம் இழைய முடியாமலும், அதே சமயத்தில் உள்ளுக்குள் ஊற்றாய்ப் பெருகும் உற்சாகத்துக்கு அணைபோட முடியாமலும் திண்டாடினாள்.

இதுபற்றி அப்பாவிடம் மனசு விட்டு எதுவும் பேச முடியவில்லை அவளால். என்ன காரணமோ கேதாரும் கொஞ்சம் ஒதுங்கினாற்போலவே இருந்தார். மகள் நின்ற இடத்தில் நிற்காமல், எங்கே அவளிடம் தனது சோர்ந்த முகத்தைக் காட்ட வேண்டியிருக்குமோ என்கிற பயத்தில் ஒதுங்கி ஒதுங்கிப் போனார்.

அஜய் பெங்களூர் சென்ற இரண்டாம் நாள், வழக்கம் போல் ஆவலை அடக்க மாட்டாமல் ப்ரீத்தி அவனுக்கு

The following particulars regarding the ownership of 'KALKI' the Tamil Weekly newspaper, are published, as called for by rule 8 of the Registration of Newspapers (Central) Rules 1956.

FORM IV

1. Place of Publication	:	Chennai
2. Periodicity of Publication	:	Weekly
3. Name of Printer	:	K. Rajendran
Nationality	:	Indian
Address	:	1, 5th Street, Lake Area, Nungambakkam, Chennai - 600 034.
4. Name of Publisher	:	K. Rajendran
Nationality	:	Indian
Address	:	1, 5th Street, Lake Area, Nungambakkam, Chennai - 600 034.
5. Name of Editor	:	Seetha Ravi
Nationality	:	Indian
Address	:	'Mangala Ganesh', Second Floor, 15, IV Seaward Road, Valmiki Nagar, Thiruvanmiyur, Chennai - 600 041.

6. Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one percent of the total capital : **Bharathan Publications Private Limited, 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.**

I hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

1.3.2001

K. Rajendran
Publisher

ஃபோன் செய்ய, அவனோ – முதல் நாள் கலகலப்பிற்கு முற்றிலும் மாறுபட்டு பச்சை மிளகாயைக் கடித்தாற்போல சள் என எரிந்து விழுந்தான்.

"என்ன ப்ரீத்தி?"

"ஒண்ணுமில்லையா? ஒண்ணுமில்லாத துக்காகவா அங்கேயிருந்து பெங்களூருக்கு ஃபோன் பண்ற? நான் இங்கே ஏகப்பட்ட டென்ஷன்லே இருக்கேன். ப்ளீஸ்... என்னைத் தொந்தரவு செய்யாதே."

உற்சாக மீன்கள் துள்ளிக் குதித்துக் கொண்டிருந்த கண்ணாடித் தொட்டியை, அப்படியே தரையில் போட்டு உடைத்தாற்போல – துடித்துப் போய்விட்டாள் அவள்.

'என்ன இது இப்படிப் பேசறார்.'

'அங்கே என்ன பிரச்னையோ...'

'இருக்கட்டுமே.. இன்னும் முழுசா நாலு வார்த்தை லவ் டயலாக் கூட பேசலே. அதுக்குள்ள இப்படி எரிஞ்சு விழுவாரா ஒருத்தர்.'

'யார்கிட்டே எரிஞ்சு விழறார். உரிமை இருக்கறதால்தானே. இருக்கட்டும். இதுக்கெல்லாம் சேர்த்து வெச்சு வட்டியும் முதலுமா ஊருக்குத் திரும்பினவுடனே வாங்கிட மாட்டேன்...'

– இப்படி ஏகமாய் மனசுக்குள் எதை எதையோ போட்டுக் குழப்பிக் கொண்டிருந்தவள், மூன்றாம் நாள் வேண்டுமென்றே அவனுக்கு ஃபோன் செய்யவில்லை.

'இருக்கட்டும், என்கிட்டே இருந்து ஃபோன் வராததில் இருந்தே, என் கோபத்தைப் புரிஞ்சுகட்டும். தவிச்சு தண்ணியா உருகட்டும். அப்புறம் அவரே 'ஹாய் ஹவ் ஆர் யூ கோபமா' என்று அசடு வழியட்டும்.'

அவள் அவனிடமிருந்து ஃபோன் வரும் என்கிற மலையளவு நம்பிக்கையுடன், தனது வேலைகளில் தீவிரமானாள். அப்போதுதான் அவளுக்கு – மூன்று நாட்களாக அஜய்யின் மெயில் பாக்ஸைத் திறந்து பார்க்காதது நினைவுக்கு வந்தது.

'அச்சோ' என்று விரலை உதறினாள். இதுநாள் வரையில் இப்படி பொறுப்பில்லாமல் அவள் இருந்ததே இல்லை. காதல் ஒரு மனுஷியை எப்படியெல்லாம் மாற்றி விடுகிறது என்பதை நினைத்துத் தனக்குள்ளேயே சிரித்துக் கொண்டாள்.

சாதாரணமாய் அவனது மெயில் பாக்ஸைத் திறந்து, மிக முக்கியமான கடிதங்களுக்குத் தேவையான பதில்களை அவளே தயாரித்து அனுப்பி விடுவது வழக்கம். இரண்டு, மூன்று நாட்களாக எத்தனை கடிதம் சேர்ந்திருக்கிறதோ...

'கண்டிப்பா அஜய்யோட தங்கை அர்ச்சனாவுக்கு, மாவடு ஜாடி போய்ச் சேர்ந்திருக்கும். மெயில் அனுப்பிச்சிருப்பா.'

– இப்படி நினைக்கும்போதே பொறுப்பான மன்னி ஸ்தானமும் அவள் மனசுக்குள் வந்து ஒட்டிக் கொள்கிறது. கடிதங்களை வரிசையாய்ப் பார்த்துக் கொண்டே வந்தவள், அஜய் பெங்களூருக்குக் கிளம்பிய அன்றைய தினத்தில் வந்த கடிதங்களில் ஒன்றின் மீது பார்வையைச் செருகினாள்.

'அஜய்... உன் மெயில் கிடைத்தது. நீ என்னைப் பார்க்க வருவதை நான் விரும்பவில்லை. நீ நினைப்பது போல நாம் இருவரும் வாழ்க்கையில் இணைவது என்பது, கனவில் கூட நடக்காத விஷயம். ஐந்து வருட காத்திருப்புக்கு எனது ஆழ்ந்த வருத்தங்களை மட்டுமே தற்போதைக்குத் தெரியப்படுத்திக் கொள்ள முடிகிறது.

இப்படிக்கு,
சுஜா.

ப்ரீத்தி பரபரப்புடன் அந்தக் கடிதத்தையும், அதன் விலாசத்தையும், அதோடு

இணைந்தே இருந்த அஜய் அவளுக்கு எழுதியிருந்த கடிதத்தையும் பார்க்க...

அக்கடிதம் - ஏற்கெனவே இவளது மெயில் விலாசத்திற்கு வந்திருந்த அதே கடிதம்தான். ஆனால் பெறுநர் விலாசத்தில் மட்டும்

சுஜா,
குளோபல் எலக்ட்ரானிக்ஸ்,
சிவாஜி நகர்,
பெங்களூர்.
www.குளோபல் @hotmail.com

'**யா**ர் அந்த சுஜா?'

ஒருகணம் தலைசுற்றுகிறது ப்ரீத்திக்கு.

வெளியே சீனிவாசராகவன், துரையிடம் இரைந்து கூறிக் கொண்டிருந்தார்.

"நம்ம ஆபீஸ் கம்ப்யூட்டர்களில் லவ் பக்ஸ் ஜாஸ்தி ஆயிடுச்சப்பா. டெஸ்பேட்ச் உஷாவுக்குக் கூட ஒரு மூட்டைப் பூச்சி, மாய்ஞ்சு மாய்ஞ்சு மெயில் அனுப்பிச்சிருக்கு. அந்தப் பிள்ளையாண்டான்களுக்கு இதுவேணா ஒரு விளையாட்டா இருக்கலாம். பொண்ணைப் பெத்தவங்க வயிறு என்ன பாடுபடும்."


ப்ரீத்தி வேகமாய் அஜய்யின் மெயில் பாக்ஸை மூடிவிட்டு நகர - சீனிவாச ராகவன் அறைக் கதவைத் திறந்து அகல சிரித்தபடியே கூறினார்.

"இதுமாதிரி ஒரு லவ் லெட்டர் உஷாவுக்கு வந்து அதனோட ப்ரிண்ட் அவுட்டை உங்க அப்பாவுக்குக் கூட காண்பிச்சேன்மா... சொல்லியா."

ப்ரீத்தியின் மௌனம் திருப்தி கலந்த புன்னகையை அவரது உதடுகளில் நெளிய விடுகிறது.

(தொடரும்)

சிலை அல்ல வலை



சென்னை கிண்டியில் சர்தார்படேல் சாலையும், அண்ணாசாலையும் கூடும் ஹால்டா சந்திப்பில் இராமசாமி படையாச்சியார் முழு உருவச் சிலையை தமிழக முதல்வர் கடந்த பிப்ரவரி இருபத்தியோராம் தேதி திறந்து வைத்த வைபவத்தில் வோட்டு அரசியலின் நெடி அதிகம்!

ஏற்கெனவே போக்குவரத்து நெரிசல் அதிகமுள்ள அந்தச் சந்திப்பில் இந்தச் சிலையை நிறுவியது கொடுமை என்று கொதிக்கிறார்கள் பொதுமக்கள்.

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்புதான் சிலை அமைக்கும் பணிகளையே இங்கு தொடங்கினார்கள் என்கிறார் அங்கு தொடர்ந்து 'பீட்' பணியாற்றும் போக்குவரத்துக் காவல்காரர் ஒருவர். இந்தச் சிலை படையாச்சி சமூகத்தின் வாக்குகளை வளைத்துப் போடும் வலை என்பதை நிரூபிப்பது போல இருந்தது விழா. வன்னிய அடிகளார், வாழப்பாடி ராமமூர்த்தி உள்ளிட்ட கோஷ்டியினரும், அவர்கள் திரட்டி வந்திருந்த படையாச்சி சமூக இளைஞர்களும் சர்தார் படேல் சாலையில் அலைமோதினர்.

விழாவில் ராமசாமி படையாச்சியாரின் துணைவியாரைப் பொன்னாடை அணிவித்து கௌரவித்த முதல்வர், மேடையில் அமர்ந்தபடியே பேசினாலும் பேச்சில் காரம் குறையவில்லை. சொன்னதைச் செய்யும் முகமாகத்தான் சிலை நிறுவியிருப்பதாகவும் தேர்தலையொட்டி எடுக்கப்பட்ட நடவடிக்கையல்ல இது என்றும் நியாயப்படுத்த வேண்டிய கட்டாயம் அவருக்கு!


— ஜெ.

கிச்சன் கிளினிக்

மிளகு ரசம், பூண்டு ரசம் போல கிராம்பு ரசம் கூடச் செய்யலாம். கிராம்பு ரசம் செய்வது ஏறத்தாழ மிளகு ரசம் போலத்தான். கிராம்பை நன்றாக நசுக்கிப் பயன்படுத்த வேண்டும். சாப்பிடும் போது, நாக்கில் கொஞ்சம் விறுவிறுப்பு இருக்கும். இது உடம்புக்கு நல்லது.

எல்லோருக்கும், குறிப்பாக குழந்தைகளுக்குச் சிறுவர், சிறுமியர்களுக்கு 'இன்ஸ்டன்ட் எனர்ஜி' தரும் செய்முறைக் குறிப்பு ஒன்று சொல்லட்டுமா? இருநூறு கிராம் கசகசா, நூறு கிராம் பாதாம் பருப்பு இவற்றுடன் கிராம்பு, பட்டை சேர்த்து அரைத்துக் கொள்ள வேண்டும். இதைக் காற்றுப் புகாத பாட்டில் ஒன்றில் பத்திரமாக எடுத்து வைத்துக் கொள்ளவும். தினமும் இரண்டு ஸ்பூன் அளவுக்கு எடுத்து, ஒரு தம்ளர் பாலில் கலந்து கொண்டால், பேஸ்ட் போல வரும். ஜீரணம் சம்பந்தப்பட்ட பிரச்னை இருந்தால் ஒரு துண்டு இஞ்சியும் ஒரு பூண்டும் சேர்த்து அரைத்து கலந்து கொள்ளலாம். ஒரு பிரெட் ஸ்லைசை எடுத்து, இந்தப் பாலில் தோய்த்து, தோசைக்கல்லில் போட்டு, லேசாக நெய் தடவி, டோஸ்ட் செய்யலாம். இதைச் சாப்பிட்டால், இரண்டு மணி நேரத்துக்குப் பசியே வராது என்று உறுதியாகச் சொல்லலாம். உடம்புக்கு உயர்ரக கலோரிச் சத்து உடனடியாகக் கிடைக்கும்.





புலவு போன்ற உணவு ஐட்டங்கள் தயாரிக்கிறபோது, இந்தப் பொடியைக் கொஞ்சம் போட்டுக் கொண்டால் போதும்; தேங்காய் இல்லையே! என்ற கவலையே வேண்டாம்.

அதே போல சப்பாத்தி, பூரி செய்கிறபோது, தொட்டுக் கொள்ள, குருமா வேண்டுமே! வெங்காயம், தக்காளி நறுக்கிப் போட்டு, அதனுடன் இந்தப் பவுடர் ஒரிரு ஸ்பூன் சேர்த்து, தேவை என்றால், இரண்டு பச்சை மிளகாய் நறுக்கிப் போட்டு, கொதிக்க விடலாம். கூடுதல் சுவையுடன் குருமா கிடைக்கும்.

போன வாரம், தாம்பூலத்தின் மேன்மை பற்றிச் சொன்னேன். அது சம்பந்தமான இன்னொரு தகவல். திருமண வீடுகளில் சாப்பிட்டுவிட்டு வரும்போது, பீடா தயாராக வைத்திருப்பார்கள். நான் திருமண வீடுகளுக்குச் செல்கிறபோது, கவனிக்கிற ஒரு விஷயம் என்னவென்றால், பீடாவை எடுக்கிறவர்கள் பலர். முதலில் அதில் குத்தி வைக்கப்பட்டுள்ள கிராம்பை எடுத்துப் போட்டுவிட்டு, அப்புறம்தான் பீடாவை வாயில் போட்டுக் கொள்வார்கள். இது தவறு. பீடாவில் வைக்கப்பட்டுள்ள மற்ற ஐட்டங்களுடன்

பளபளப்பாக வேண்டுமா?

ஒரு பிடி ரோஜா இதழ்கள், ஒரு பிடி அளவுக்குப் பசுமையான கொத்துமல்லி தழை. இதில் பால் விட்டு நன்றாக அரைத்து முகத்திலும், உடம்பிலும் தேய்த்து, கால் மணி நேரம் வரை ஊறவிட வேண்டும். பிறகு பயத்தம் மாவு போட்டுத் தேய்த்துக் குளித்தால், தோலில் பளபளப்பு ஏற்படும்; நிறம் தங்கும். காரணம், கொத்துமல்லியில் உள்ள தாமிரச் சத்துதான். தாமிரச் சத்து தோலுக்கு நல்லது.

இந்தக் கிராம்பையும் சாப்பிட்டுவிட வேண்டும். சொல்லப் போனால், பீடாவில் சேர்க்கப்படுபவற்றில் மிகச் சிறந்த மருத்துவக் குணம் கொண்டது கிராம்புதான்.

மூலிகை மணி
டாக்டர். கே. வேங்கடேசன்
டாக்டர் க.வே. அபிராமி





வயிற்று வலி போயிந்தே!

அடுத்தபடியாய், நான் எடுத்துக் கொள்ளப் போவது கடுகு. நம் சமையலறையில் அதுவும் அஞ்சறைப் பெட்டியில் கடுகு ஒரு முக்கியமான ஐட்டம். வடமாநிலங்களில் கடுகு எண்ணெயில் சமைப்பதை விரும்பினாலும், நம்மவர்களுக்கு அது சரிப்படுவதில்லை. காரணம், பழக்கமில்லை என்பதுதான்.

கடுகிற்கு, உடம்பிலிருந்து வாயுவை வெளியேற்றும் குணம் உண்டு. பொதுவாக, இடுப்புப் பகுதியில்தான் வாய்வு தங்கும்; மலச்சிக்கல் இருந்தாலும் கூட, வாய்வுத் தொல்லை இருக்கும். இதனால் இடுப்புப் பகுதியில் ஒரு விதமான அசௌகரியம் ஏற்படும்.

அதிகமாக உட்கார்ந்தபடியே வேலை செய்கிறவர்களுக்கு, எலும்புப் பகுதிகளில் உரசல் ஏற்படுவதன் காரணமாக வலி ஏற்படும். இந்த உரசல் அதிகரித்து, ரணமாகி விடும் ஆபத்தும் உண்டு. அப்போது நரக வேதனை இடுப்புப் பகுதியில் ஏற்படும்.



இவற்றுக்குக் கடுகு நல்லதொரு நிவாரணி. மிளகு, கிராம்பு போல, கடுகைக் கொண்டு, பிரத்யேகமாகக் கஷாயமோ, பொடி செய்தோ சாப்பிட வேண்டியதில்லை. சமையலில் போதுமான அளவு கடுகு தாளித்துப் பயன்படுத்தினாலே போதும். அதிகமாக கடுகைத் தாளித்துப் பயன்படுத்தினால், உடம்பு சூடு அதிகமாகிவிடும். ஆகவே கடுகையும், அதன் உஷ்ணத்தைச் சமன்படுத்துவதற்காகக் கூடவே உளுத்தம் பருப்பையும் (குளிர்ச்சி இதன் குணம்) சேர்த்துத் தாளிக்க வேண்டும்.

அடுத்து சோம்பு. வயிற்று வலியால் கஷ்டப்படுகிறவர்கள், சோம்பு கஷாயம் போட்டு வடிகட்டி அதனுடன் சிறிது நெய் சேர்த்துச் சாப்பிட்டால் வயிற்று வலியிலிருந்து நிவாரணம் கிடைக்கும். கஷாயத்தில், சோம்பை பச்சையாகப் போடாமல், வாணலியில் இட்டு, இலேசாக வறுத்து, அதன் பின் பயன்படுத்துங்கள். தேவையென்றால் சர்க்கரை, தேன், கருப்பட்டி சேர்த்துச் சுவையூட்டிக் கொள்ளலாம்.

கொஞ்சம் ஹெவியான சாப்பாட்டுக்குப் பிறகு வயிறு திம்மென்று இருக்கும். இரண்டு ஏப்பம் விட்டால் தேவலை என்று தோன்றும். ஆனால் ஏப்பம் வராது. அப்போது கொஞ்சம் சோம்பு போட்டுக் கொண்டால், நிவாரணம் கிடைக்கும். அதனால்தான் ஹோட்டல்களில், சாப்பிட்டு முடித்தவுடன் பில்லுடன் கூடவே சோம்பு கொண்டு வந்து வைத்து விடுகிறார்கள்!

இதை மணமூட்டி என்றும் சொல்லலாம். மீன், கருவாடு போன்றவை சாப்பிடும் அசைவக்காரர்களுக்கு, சாப்பிட்டு அரை மணி நேரம் வரை ஒருவிதமான வாடை வந்து கொண்டிருக்கும். அவர்கள், சாப்பிட்ட கையோடு, கொஞ்சம் சோம்பு போட்டுக் கொண்டால், அந்த வாடை அகலும்.

வீடுகளிலும் சரி, ஓட்டல்களிலும் சரி, வெறும் சோம்புக்குப் பதிலாக, தித்திப்பான சுவை கூட்டப்பட்ட சோம்பு வைக்கிறார்கள். இது நல்லதுதான் என்றாலும், சர்க்கரை வியாதி உள்ளவர்கள் சற்று எச்சரிக்கை கொள்ள வேண்டும்.



• சாலை வாழ் சிறார்கள்

'வாங்கித் தின்ன காசு குடும்மா!' எனக் கேட்டிருக்கிறான் அந்தச் சிறுவன்.

சுருக்குப் பையில் காசில்லை. அம்மா இல்லை என்று சொல்லி விட்டாள். இந்த வீட்டில் இனி இருப்பதா? கோபித்துக் கொண்டு கிளம்பியபோது அவனுக்கு வயது பன்னிரண்டு.

அந்தச் சிறுவன் மீண்டும் தனது கிராமத்து மண்ணை மிதித்தபோது அவனது வயது பதினெட்டு. ஆறு ஆண்டுகள் கழித்து அம்மாவை முதன்முதலாகப் பார்க்கிறான், அதுவும் விதவைக் கோலத்தில். உருக்குலைந்து வந்து நிற்கும் தன் மகனை அதிர்ச்சி கலந்த மகிழ்ச்சியுடன் வாரியணைத்துக் கொள்கிறாள் அந்தத் தாய்.

சமீபத்தில் கர்னாடக மாநிலம், ஷிமோகா மாவட்டத்திலிருந்து தமிழ்நாட்டைச் சேர்ந்த கொத்தடிமைச் சிறுவர்கள் இருபத்தி நான்கு பேரை அம்மாநிலக் காவல் துறை மீட்டு வந்து தமிழக அரசிடம் ஒப்படைத்தது. அதன் பின்னர் அந்தந்தச் சிறுவர்கள் அவரவர் சொந்த ஊருக்கு அனுப்பி வைக்கப்பட்டு பெற்றோர் வசம் ஒப்படைக்கப்பட்டனர்.

அதில் ஒருவன்தான் பதினெட்டு வயது வரதராஜ். திருச்சியிலிருந்துப் பதினெட்டு கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது தெற்கு மகிழம்பாடி கிராமம். அங்கு சென்று அவனைச் சந்தித்தோம்.

கர்னாடக மாநிலம் ஷிமோகா மாவட்டத்தில் சாகரா தாலுகாவில் உள்ளது உல்தார்மனை எனும் பகுதி. சராவதி அணைக்கட்டு நீர்த்தேக்கப்



• செல்வராசன்

பரப்பு. விரிந்து கிடக்கும் நீர்நிலை. ஆங்காங்கே சின்னச் சின்ன தீவுகளாய்த் தெரியும் திட்டுப் பிரதேசங்கள். மீன்பிடி தொழிலுக்கு இயற்கை அளித்துள்ள அன்பளிப்பு. ஆனால், அந்த மீன்பிடியாளர்கள் கொத்தடிமைகளாக வந்து சேர்ந்த இளஞ்சிறார்கள் மீது ஏவிய கொடுஞ்செயல்கள் ஈவிரக்க மற்றவை.

"ஒரு ஆள் சேலத்துலேருந்து என்னைய அங்கே கொண்டு போய் வுட்டப்ப எனக்கு வயசு பன்னெண்டு. ஆறு வருசமா அந்த நரகத்துல கெடந்து தவிச்சிருக்கேன் சார்!" சொல்லும் போதே வரதராஜின் கண்களில் நீர் திரண்டு நிற்கின்றது.

"வெளில என்ன நடக்குதுன்னே தெரிஞ்சிக்க முடியாது அங்க. தண்ணிர், படகு, மீனு அதைவிட்டால் ஓலைக் குடிசை... இதுதாங்க என்னோட உலகம். என் வயசுப் பயலுகல்லாம் ஒவ்வொரு படகுக் குருப்லயும் இருப்பானுக. பார்த்தா சிரிக்கக் கூடாது. ஒரு வார்த்தை பேசக் கூடாது. அத்தனை கண்டிசன்ங்க. கையில பத்துப் பைசாக்கூட தர மாட்டாங்க. போட்டுக்கற ஒரு ட்ரவுசர் சட்டைக்கு மேலே மாத்திக்கக்கூட வேறெதுவும் தந்ததில்லே. வாரத்துல ஒரு நாள் அதையே துவைச்சி ஈரத்தோடயே போட்டுக்கணும். நைட்டு தூங்க மட்டும் ஒரு கிழிஞ்ச போர்வையத் தருவாங்க. நைட்டுலதான் படகு



• ஓடிவந்த சிறுவனின் பெற்றோருடன் கவுன்சலிங்

கோவணத்துடன் ஆறு மாதம்!

கொத்தடிமைக் கொடுமைகள்...

வலிச்சிட்டுப் போவணும். தண்ணியில இறங்கி ஆழத்துல போயி வலையைக் கட்டிட்டு வருவோம். மறுநாள் காலைல போயி வலையை இளுத்துப் போட்டு படகுலே ஏத்திக் கொண்டாந்திடுவோம். நான்தான் சமைக்கணும். சித்த நேரம்கூட உட்காரவிட மாட்டாங்க. ரெண்டு வேளைக்குப் பழைய சோறுதான். நைட்டு மட்டும்தான் சுடு சோறு. அதுவும் வயித்துக்குப் பத்தாது. மறுசோறு கேட்டா 'போதுண்டா நாயீ!'ன்னு கெட்டவார்த்தை எல்லாம் சொல்லித் திட்டுவாங்க. வலையிழுக்கிற பெரிய ஆளுங்க மட்டும் பக்கத்து ஊர்ல ஓட்டல்ல விதவிதமா வாங்கியாந்து திம்பாங்க. ஆறு வருசமா இந்த இட்லி, தோசைகூட நான் தின்னது இல்லீங்க!"

"இங்க வந்து மாட்டுன எந்தப் பையனும் தானா தப்பிச்சிப் போயிட முடியாதுங்க. அப்படித் தப்பிச்சிப் போவும்போது மாட்டிக்கிட்டா அப்புறம் மரண அவஸ்தைதாங்க. நான் ஒருநாள் அப்பிடிதான் எப்படியாவது நம்மூருக்குப் போயிட லாம்னு தப்பிச்சி போனப்ப வசமா இவுங்களோட ஆளுங்க கிட்டே அம்புட்டுட்டுட்டேன். அவ்வளவுதான். நல்லா அடி, உதை. நாலு நாளா ஒரு கை சோறுகூடத் தரலை. கையில காசில்லாட்டியும் ட்ரவுசர் சட்டையோட இருந்தாத்தானே ஓடிப் போவேன்னு கோவணத்துணியைக் கட்டிக்கக் குடுத்தாங்க. ஆறு மாசமா வெறும் கோவணத்தோட மட்டுமே அந்த ஏரியாவுல அவுங்களோட இருந்தேன்னா... பாத்துக்கங்க சார்!" விழிகளில் மீண்டும் கண்ணீர் தளும்புகின்றது!

வீட்டை விட்டு ஓடி வரும் சிறுவர்கள் நலனில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் அணுகுமுறை எவ்விதம் உள்ளதென அறிந்துகொள்ள திருச்சி, 'சொந்தம் சாலைவாழ் சிறார் நலவாழ்வு இல்ல மைய'த்தைச் சென்று பார்த்தோம்.

• வரதாஜன் அம்மாவுடன்



"இங்கு வந்து சேரும் சிறுவர்களை மையத்தில் அதிக நாள் தங்க வைத்துக் கொள்வதில்லை. பெற்றோர்களிடம் ஒப்படைத்து விடுகிறோம். வெகு அபூர்வமாய்ப் பையனை அவர்கள் ஏற்றுக் கொள்ளாத சமயத்தில் அவன் விரும்பும் கல்வி மற்றும் வேலை வாய்ப்புக்கு வழி வகுத்துத் தருகிறோம். இவர்கள் தப்பித் தவறி சில சமூக விரோதிகளிடம் சிக்கிக் கொள்ளும்போதுதான் அவர்களது வாழ்க்கையே தடம் புரண்டு போகிறது. பெரும்பாலும் இளஞ் சிறார்கள் வெளி மாநிலங்களுக்குக் கடத்திச் செல்லப்பட்டு, கொத்தடிமைகளாகவும் சில சமயங்களில் கிட்னி எடுத்துக் கொள்ளவும் பயன்படுத்தப்படுகிறார்கள் என்பது சோகம் நிறைந்த உண்மை!" என்கிறார் சொந்தம் சாலைவாழ் சிறார் நலவாழ்வு இல்ல அமைப்பாளர் செல்வராசன்.

"தொண்ணூறு சதத்துக்கும் மேல் சிறுவர்கள் வீட்டை விட்டு ஓடி வருவதற்கு, அவர்களது பெற்றோர்களே காரணமாக இருக்கிறார்கள் என்பது மிகவும் வேதனையான ஒன்று!" என்று சொல்கிறார் திருச்சிராப் பள்ளி பல்நோக்கு சமூகப்பணி மைய இயக்குனர் அருட்தந்தை தோ. யூஜின் அடிகள்.

- ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

நேர்த்திக்கடன்

வரலொட்டி ரெங்கசாமி

ஏதாவது கஷ்டம் வந்தால் தெய்வத்திடம் நேர்ந்து கொள்வது உண்டுதான். இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் இப்படியா?

என் மனைவி அந்த வேண்டுதலைச் சொன்னவுடனேயே காச் மூச் என்று கத்தி விட்டு கோபத்தில் சாப்பிடாமல் வீட்டை விட்டு வெளிநடப்பு செய்துவிட்டேன். பார்க்கில் உட்கார்ந்திருந்த போதுதான் அந்த பயம் ஏற்பட்டது. மாலதி பிடிவாதக்காரி. இப்படி கோபித்துக் கொண்டால்... அவள் வேறு யாரையாவது கூட்டிக் கொண்டு போய் அந்தக் கொடுமையானப் பிரார்த்தனையை நிறைவேற்றிவிட்டுத்தான் வருவாள். வீட்டுக்கு ஓடினேன்.

முன் அறை சோபாவில் 'உர்' என்று உட்கார்ந்திருந்தாள் என் தர்மபத்தினி.

''ஏன், மாலதி நான் கன்னா பின்னான்னு கத்திட்டேன்னு கோபமா? உன் கொடுமையான வேண்டுதலைக் கேட்டா யாருக்குத்தான் கோபம் வராது, சொல்லு. சரி, நீ எதுக்காக இப்படி நேர்ந்துக்கிட்ட?''

''எல்லாம் உங்களுக்காகத்தான். போன வருஷம் நீங்க ஆக்சிடென்டுல அடிபட்டுக் கிடந்தப்ப நேந்துக்கிட்டது. உங்கம்மாதான் சொன்னாங்க. மேலூரர் நாகம்மா கோவில்ல ஆடி மாசம் திருவிழாவுல அலகு குத்தறதா நேந்துக்கிட்டா எந்தக் கஷ்டமும் போயிரும்னாங்க. அவங்க சொன்ன மாதிரியே நீங்களும் நல்லபடியா பிழச்சு எழுந்திருச்சிட்டீங்க. இப்போ வேண்டுதல நிறைவேத்தும் போது கத்தினா எப்படி?''

''இந்த அலகு குத்தறதுன்னா பயங்கரமா வலிக்குமாமே?''

''அம்மனை நெனச்சிக்கிட்டா வலி தெரியாதுங்க. அதை 'சர்ப்ப வேல்'ன்னு சொல்லுவாங்க. ஒரு அடி நீளம் இருக்கும். வளைஞ்சு வளைஞ்சு இருக்கும். அதை இந்தக் கன்னத்துல குத்தி அந்தக் கன்னம் வழியா....''

''வேண்டாம் மாலதி. நீ சொல்லும்போதே எனக்குக் குலை நடுங்குது. குத்தும்போது எவ்வளவு வலி இருக்கும்! அப்புறம் அந்த இடம் செப்டிக் ஆனாலும் ஆயிரும். சொன்னாக்கேளு. அதை விட்ரு. வேற



எந்த வேண்டுதல்னாலும் சரி. இது வேண்டாம். நம்மள நாமே சித்திரவதை பண்ணிக்கிட்டு நம்ம பக்தியக் காட்ட வேண்டாம். இதோட விட்ரு."

"எப்படிங்க விடறது? உங்களுக்கு ஆக்சிடென்ட் ஆகி ரெண்டு நாளைக்குப் பேச்சு மூச்சு இல்லாம கிடந்தீங்க. டாக்டர் நாப்பத்தியெட்டு மணி நேரம் தாண்டினாத்தான் எதுவும் சொல்லமுடியும்னு சொல்லிட்டாரு. உங்க குரூப் ரத்தம் வேற கிடைக்கல. அப்ப நான் எப்படி தவிச்சிருப்பேன்? உங்கம்மா தான் இந்த வேண்டுதலச் சொன்னாங்க. அப்படி வேண்டிக்கிட்டவுடனே யாரோ ஊரு பேரு தெரியாதவரு தானா வந்து ரத்தம் கொடுத்தாரு. டாக்டரும் கொஞ்சம் நம்பிக்கையா பேச ஆரம்பிச்சாரு. நீங்களும் சேதாரம் இல்லாம பிழைச்சி வந்தீங்க. இப்ப நாம்ம நேந்துக்கிட்டத செய்ய வேண்டாமா? செய்யலேன்னா உங்களுக்கு ஒரு இருமல், தும்மல் வந்தாக்கூட அது சாமிக் குத்தத்துனாலதான் வருதோன்னு நடுங்கிக்கிட்டே இருப்பேன்.

"அம்மன் காரியம், ஒவ்வொரு வருஷமும் நூத்துக்கணக்கான பேர் இந்த மாதிரி பண்ணிக்கறாங்க. ஒரு சின்னத் தழும்புகூட இருக்கிறதில்லங்க. இந்த வேலக் குத்தி விடறதை ஒரு பரம்பரைத் தொழிலாவே பக்தியோட பண்ணிக்கிட்டிருக்காங்க. ஒரு சொட்டு ரத்தம்கூட வராமக் குத்திருவாங்களாம். அம்மா சொன்னாங்க. என் வேண்டுதலுக்குக் குறுக்க நிக்காதீங்க. அப்புறம் என் நிம்மதியே போயிரும் எல்லாம் உங்களுக்காகத்தானே..."

சொல்லிக் கொண்டே வந்தவள் பெரிதாக அழ ஆரம்பித்துவிட்டாள். அந்த பிரம்மாஸ்திரத்துக்குப் பணியாமல் இருக்க முடியவில்லை.

அன்று அதிகாலை மேலூருக்கு டாக்சியில் கிளம்பினோம். நாகம்மாள் கோவில் இருந்த இடம் சரியான கிராமம். நல்ல கூட்டம். பல இடங்களில் விசாரித்து அலகு குத்திவிடும் இடத்துக்குப் போய் சேர்வதற்குள் அரை மணி நேரம் ஆகிவிட்டது. அந்த இடத்துக்குப் போனவுடனேயே எனக்கு வயிற்றைப் புரட்ட ஆரம்பித்தது. ஒரு அடி நீளத்திலிருந்து பதினொரு அடி நீளம் வரை - வெவ்வேறு அளவுகளில் வளைந்த 'சர்ப்ப' வேலைக் குத்தியபடி ஒரு கூட்டமே நின்று கொண்டிருந்தது.

வேலைக் குத்துபவர் கொஞ்சம் வயதானவராகத் தெரிந்தார். கை நடுங்கி அதனால் கண்ட இடத்தில் வேல் குத்தி ரத்தம் கொட்டப் போகிறது என்ற பயம் ஏற்பட்டது. ஆனால் மாலதியின் முகம் அமைதியாக இருந்தது.



வேலைக் குத்துபவர் மாலதியிடம் நியமநிஷ்டைகளைப் பற்றிக் கேட்டார். அவளது பதிலைக் கேட்டு திருப்தி அடைந்தார். பின் ஒரு அடி நீளத்துக்குப் பளபளவென்று வளைந்து வளைந்து இருந்த ஒரு 'சர்ப்ப' வேலைத் தேர்ந்தெடுத்தார். அதை மாலதி முன் வைத்து கண்களை மூடி ஏதோ ஜபம் செய்தார்.

பின் கை நிறைய திருநீறை எடுத்து மாலதியின் இரண்டு கன்னங்களிலும் தடவினார். அவர் வேலைக் கையில் எடுத்ததும் என் ஈரக்குலை நடுங்க ஆரம்பித்தது.



அருள்வாக்கு!

வியாகரண சாஸ்த்ரத்தில் சப்தத்தையே ப்ரம்மமாக நிலை நாட்டியிருக்கிறது. இதற்கு சப்த ப்ரம்மவாதம் என்று பேர். பாஷை இலக்கணத்தைச் சொல்லும்போது இப்படி வையாகரணிகள் (வியாகரண சாஸ்திரக்காரர்கள்) அதை பிரம்ம ஸ்வரூபமாகச் சொல்லியிருப்பதையே இன்னொரு விதத்தில் ஸங்கீத சாஸ்திரக்காரர்களும் ஸ்தாபித்திருக்கிறார்கள். ஸங்கீதத்திலே நாதப்பிரம்ம உபாஸனை, நாதோபாஸனை என்கிற இடத்திலும் நாதம் என்பது வெறும் சப்தம் மட்டுமில்லை. பாடுகிறவன் ஒரு ஸ்வர ஸ்தானத்தை சுருதியோடு, சுத்தமாக தீர்க்கமாகப் பிடித்து அது பூர்ணமாக ஓங்கி முடிந்து விழுந்து லயிக்கிற இடத்தில் - இதை மூர்ச்சனை என்பார்கள் - அது சுருதியோடு கல்வி அத்வைதமாகக் கரைந்து, நிறைந்து போகிறதே அதைத்தான் நாதம் என்பது. இந்த இடத்திலே பாடுகிறவனும் அதோடு கரைந்து நிறைந்துவிடுவான். அவன் மட்டுமில்லை. கேட்கிற ஸஹ்ருதயர்களானவர்களும் அப்படியே சொக்கித் தன்னை மறந்து அந்த நாதத்தில் ஐக்யமாயிருப்பார்கள். இதிலே பெறுகிற ஆனந்தந்தான் ஆத்மானந்தம், பிரம்மாநந்தம் என்று மத சாஸ்திரங்களின் உச்ச லக்ஷ்யமாய்ச் சொல்லியிருப்பது. நாதம் பிரம்மத்துக்குக் கொண்டு போகிறது; சப்தம் நாதத்துக்குக் கொண்டு போகிறதென்றால் இதில் ஒன்றின் தன்மை இன்னொன்றுக்கு இல்லாவிட்டால் எப்படி முடியும்? அதனால்தான் சப்தமே பிரம்மம் என்று சொல்வதாக சாஸ்த்ரம் ஏற்பட்டிருக்கிறது.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய ஸ்வாமிகள்

"இங்க பாருங்கய்யா, இந்த வேல் நல்ல சுத்தமா இருக்கான்னு பாத்துக்கங்க. ஏன்னா அழுக்கு இருந்தா அப்புறம் காயம் செப்டிக் ஆயிரும். நான் கையில் ஆன்டிசெப்டிக் க்ரீம் கொண்டு வந்திருக்கேன். அதை வேணா வேல்ல தடவிக்கறீங்களா?" கையில் எடுத்த வேலை கிழே வைத்துவிட்டு என்னைப் பார்த்துவிட்டுத் தொடர்ந்தார்.

"சார் நாங்க மூணு தலைமுறையா இந்த வேலையச் செஞ்சிக்கிட்டிருக்கோம். சர்ப்ப வேல் குத்தறது காது குத்தறது மாதிரி சுளுவான வேலை இல்லீங்க. இதுக்காக நான் பத்து நாளா என் குடும்பத்தைவிட்டு விலகி இங்க வந்து இருக்கேன். ரெண்டு நாளா பச்சத் தண்ணி பல்லுல படாம விரதம். இதச் செய்யறதுக்கு அவ்வளவு சுத்தம் வேணும். நான் நியமமா இருக்கறதுனாலதான் இது வரைக்கும் நான் வேல் குத்திவிட்ட யாருக்கும் ஒரு சொட்டு ரத்தம் கூட வந்தது கிடையாது. நீங்க அப்படித் தள்ளிப் போய் எதிர்ப் பக்கமா திரும்பி உக்காந்துக்கிட்டு அம்மன் பேரச் சொல்லிக்கிட்டிருங்க. அஞ்சு நிமிஷத்துல வேலை முடிஞ்சிரும்."

"கன்னத்துல வேல் குத்தி ரத்தப் போக்கு அதிகமாகி, இல்லை காயம் செப்டிக் ஆயிருச்சுன்னா அப்பறம் ரொம்பக் கஷ்டமாயிரும். இங்கயிருந்து மதுரை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போறதுக்கே அரை மணிநேரம் ஆயிரும். அதான்... கொஞ்சம் ஜாக்ரதையா..."

"அந்த மாதிரி எதுவும் ஆகாது. இது பக்தி ஜாஸ்தியாறதுனால செய்யற வேண்டுதல். அம்மா அப்படி எந்தக் கஷ்டத்தையும் கொடுக்கமாட்டா. இவங்க வேண்டுதல் நல்லபடியா முடிஞ்சு, நீங்க ரெண்டு பேரும் இன்னிக்குச் சாயங்காலம் சிரிச்சிக்கிட்ட என்கிட்ட வந்து சொல்லிக்கிட்டு ஊருக்குக் கிளம்பப் போறீங்க. நீங்க பதற்றப்படாம இருங்க. நான் பாத்துக்கறேன்."

"இந்தத் திருவிழா முடிஞ்சப்பறம் இந்த வேலை எப்படி வெளிய எடுக்கிறது?"

"நீங்க நேரா இங்க வந்திருங்க. ஒரு சொட்டு ரத்தம் வராம, ஒரு கீறல் விழாம நான் எடுத்துடறேன். இப்ப கொஞ்சம் தள்ளிப் போய் உக்காருங்க."

சொன்னவுடன் மீண்டும் வேலை வைத்து ஜபம் செய்ய ஆரம்பித்தார். என்னால் மனத்தை ஒருமுகப்படுத்தித் தெய்வத்தை நினைக்க முடியவில்லை. என் வாழ்க்கையில் மிக நீளமான ஐந்து நிமிடங்களைச் சித்திரவதையோடு கழித்தேன். எனக்கு ஆக்சிடென்ட் ஆனபோது மாலதி பட்ட டென்ஷனைவிட இப்போது நான் படும் டென்ஷன் அதிகமாக இருக்கும் என்று தோன்றியது. எப்போது அந்த ஐந்து நிமிடம் முடியும் என்று வாட்சைப் பார்த்தபடி உட்கார்ந்திருந்தேன்.

"சார் வாங்க. முடிஞ்சிருச்சி. அப்படியே கைத்தாங்கலாப் பிடிச்சிக் கூப்பிட்டுக்கிட்டுப் போங்க. அஞ்சு மணிக்குள்ள இங்க திருப்பி வந்துருங்க."

மாலதியைப் பார்த்தேன். கண்கள் இலேசாக் கலங்கியது போல் இருந்தாலும் முகத்தில் வலியின் வேதனை தெரியவில்லை. இரண்டு மூன்று வளைவுகளுடன் கூடிய அந்த ஒரு அடி நீள சர்ப்ப வேல் மேல் உதடும் கீழ் உதடும் சேரும் இடத்துக்குக் கொஞ்சம் தள்ளிக் குத்தப்பட்டு மறு கன்னத்தில் அதே இடத்தில் வெளியே நீட்டிக் கொண்டிருந்தது. ஒரு துளி ரத்தம் சிந்திய அடையாளம் இல்லை. இது எப்படி சாத்தியமாகும்? நேற்று காலையில் ஷேவ் செய்யும்போது கொஞ்சம் கவனக்குறைவாக ஒரு இழு இழுத்ததால் வந்த ரத்தம் அடங்க எவ்வளவு நேரமானது? கால் அங்குல தடிமனுள்ள ஒரு கம்பி குத்தப் பட்டும் ஒரு சொட்டு ரத்தமும் சிந்தவில்லை யென்றால் இது மாலதியின் பக்தியா, நாகம்மாளின் சக்தியா, இல்லை குத்தியவரின் நியமமா? எனக்கு விளங்கவில்லை.

மாலதியைத் தாங்கியபடி நடக்க ஆரம்பித்தேன். வேறு யாரும் அவளை இடித்து விடாமல் இருக்க வேண்டுமே என்று இப் போது டென்ஷன். அரை கிலோ மீட்டர் தூரம் கூட்டத்தோடு ஊர்வலமாக நடந்து பிறகு அம்மனை மீண்டும் தரிசித்துவிட்டு அலகு குத்திய இடத்துக்குத் திரும்பியபோது ஐந்து மணிக்கு மேல் ஆகிவிட்டது. அப்போது அங்கு யாருமே இல்லை. மாலதிக்கு வேலைக் குத்தியவர் மட்டுமே இருந்தார். பெட்டியை எடுத்துக் கொண்டுக் கிளம்பத் தயாராக இருந்தவரிடம் தாமதமாக வந்ததற்கு மன்னிப் புக் கேட்டுக் கொண்டேன்.

மாலதியை உட்காரச் சொல்லி கண் மூடிக் கண் திறப்பதற்குள் வேலை எடுத்து விட்டார். குத்திய இடத்தில் திருநீறைப் பூசி விட்டார். இப்போதும் ரத்தம் வரவில்லை.

"பத்து பதினஞ்சு நாளைக்கு அந்த இடத்தை ஜாக்ரதையாப் பாத்துக்கங்கம்மா. அப்பறம் சரியாயிரும். நாகம்மா உங்களுக்கு எந்தக் குறையும் வைக்கமாட்டா. புருஷன், பிள்ளை குட்டிங்கனோட நீங்க ரொம்ப நாள் சந்தோஷமா இருப்பீங்கம்மா."

அந்த சாதாரண வாழ்த்து கூட என் கண்களை நிறைத்துவிட்டது. இப்போது அவர் என் கண்களுக்கு ஒரு மகான் போலத் தோன்றினார். கண்கள் நிறைய அவரைக் கை கூப்பி வணங்கினேன்.

"ஐயா வரேங்க. ரொம்ப நன்றிங்க. காலைல ஏதோ படபடன்னு பேசிட்டேன். மனசுல எதையும் வச்சிக்காதிங்க."

"பரவாயில்ல சார்."

"காலைல எனக்கிருந்த பதற்றத்துல உங்க பேரு ஊரு கூட கேக்க மறந்துட்டேன்."

"பேரு முகம்மது கௌஸ். ஊரு காரைக்குடிங்க. வரட்டுங்களா?"

கல்கி சதாசிவம்

நினைவு அறக்கட்டளை

தமிழ், ஆங்கில பத்திரிகைகளில் 2000ம் ஆண்டில் வெளியான
தலைசிறந்த விளம்பரங்களுக்கு

கல்கி சதாசிவம் நினைவு விருது வழங்கும் விழா

கல்கி பத்திரிகை நிறுவனரும் நிர்வாக இயக்குனருமாக விளங்கிய கல்கி சதாசிவம், தேச பக்த தியாகி மட்டுமல்ல, விளம்பரத் துறையிலும் முன்னோடியாக விளங்கினார். இன்று ஒரு விளம்பர ஏஜென்ஸி செய்யக்கூடிய பணிகளைத் தனியொருவராக 1930களில் சாதித்துக் காட்டியவர். அவர் நினைவாக, அழகியல் நோக்குடன் சமுதாயப் பார்வையும் இணைந்த விளம்பரங்களுக்கு விருது வழங்க முடிவு செய்தது கல்கி சதாசிவம் நினைவு அறக்கட்டளை.



இவ்வாண்டின்
விருது வழங்கும் விழா
மார்ச் 3, 2001, சனிக்கிழமை

சென்னை, மயிலை, ராகசுதா அரங்கில்
(நாகேஸ்வரராவ் பூங்கா அருகில்) மாலை
ஆறு மணிக்கு நடைபெறுகிறது.


தலைமை:
டாக்டர் பத்ரிநாத்,
(சேர்மன்–சங்கர நேத்ராலயா)

சிறப்புரை:
திரு. கே.எஸ். மகாதேவன்

விருது வழங்கும் நிகழ்ச்சியைத் தொடர்ந்து
இசைக் கச்சேரி:
திருமதி சுதா ரகுநாதன் குழுவினர்

கல்கி வாசகர்களையும் ரசிகர்களையும் நிகழ்ச்சிக்கு
அன்புடன் அழைக்கிறோம்.

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.
Annual Subscription : India : Rs. 275/-; Overseas : Rs. 2000/- (Air Mail)
Half Yearly Subscription : India : Rs. 140/-; Overseas : Rs. 1000/- (Air Mail)



ஊத்துக்காடு காளிங்க நர்த்தன கிருஷ்ணன்

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 " Registered No. TN / Chief PMG-141 / 2000 ".
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 37 " Registered as a Newspaper in Srilanka


உ







சில்ப கலாக்ஷேத்திரம் - சென்னை



சுவாமி மலையில் ஆகம விதிப்படி தயாரான

பஞ்சலோக விக்ரஹங்கள் ஷோரூம் & விற்பனை பிரிவு

எமது குபேரன் சிற்ப கலைக்கூடத்தின் சார்பு நிறுவனமான **சில்ப கலாக்ஷேத்திரத்தின்** மூலம் தயாரான பஞ்சலோக விக்ரஹங்களின் ஷோரூம் மற்றும் விற்பனை பிரிவு சென்னை, தி.நகர், 29, கண்ணதாசன் தெரு, திருப்பதி தேவஸ்தான தகவல் மையம் அருகில் இயங்கி வருகிறது. ஃபோன் : 4344216.

தங்களது வீட்டுப் பூஜைக்கு தேவையான பஞ்சலோக விக்ரஹங்கள் மற்றும் ஆலயத்திற்கு தேவையான விக்ரஹங்கள், திருவாட்சிகள், தங்கம், வெள்ளி ரதங்கள், கவசங்கள் மற்றும் கவசங்கள் அனைத்தும் ஆகம விதிப்படி செய்து தரப்படும்.

ஸ்ரீமதி சுகந்தி சேஷாத்திரி
விற்பனை மேலாளர்
ஸ்ரீ V.S. பாலசுப்ரமணி
விற்பனை & பொது ஜன தொடர்பாளர்,
போன் : 4344216 & 2312043.

S. கருணாநிதி ஸ்தபதி & சன்ஸ்
குபேரன் சிற்ப கலைக்கூடம்.
11. ராஜு வீதி, சுவாமிமலை – 612 302.
போன் : 0435 – 54464, Fax: 0435 - 54644,
Mobile: 098424 - 54464